செய்யப்பட்டது. அவரது கல்லறையைச் சுற்றி மிக அழகான, கலை நயமிக்க, காண்போர் மனங்கவரும் பிரமாண்டமான மாளிகை ஒன்று அமைக்கப்பட்டது. ஆண்டுதோறும் நெப்போலியன் அடக்கம் பண்ணப்பட்ட நாள் பிரெஞ்சு மக்களால் இன்றும் போற்றிக் கொண்டாடப்பட்டு வருகிறது.

# 4. வீயன்னா மாநாடு

## (CONGRESS OF VIENNA, 1815)

நெப்போலியன் லீப்சிக் போரில் தோற்கடிக்கப்பட்டு எல்பா தீவிற்கு அனுப்பப்பட்ட பின்னர் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் 1814 மார்ச் மாதம் செளமாண்ட் உடன்படிக்கை (Treaty of Chaumont) செய்து கொண்டு 1792-ம் வருடத்திற்கு முன்பு நிலவிய அரசியல் நிலை மற்றும் எல்லைக்

[illegible] 1814 [illegible]

ஆனால் நெப்போலியன் எல்பாத் தீவிலிருந்து தப்பியதால் இம்மாநாடு நிறுத்தி வைக்கப்பட்டது. வாட்டர்லூ போரில் மீண்டும் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பிறகு மாநாடு தொடர்ந்து நடைபெற்றது. ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து போன்ற முக்கிய நாடுகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டன. [illegible] முடியாட்சி மீண்டும் கொண்டுவரப்பட்ட பிரான்சும் இம்மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும். வியன்னா ஏற்பாட்டு ஒப்பந்தம் 1815-ஆம் ஆண்டு மாதம் கையெழுத்திடப்பட்டது.

## மாநாட்டில் பங்கு கொண்டவர்கள்:

### 1. முதலாம் பிரான்சிஸ் (FRANCIS I):

இவர் ஆஸ்திரியாவின் பேரரசர் ஆவார். நெப்போலியனைத் தோற்கடித்ததில் ஆஸ்திரியா பெரும் பங்கு வகித்ததால்தான் அதன் தலைநகரான வியன்னாவில் இம்மாநாடு கூட்டப்பட்டது. இவர்தான் மாநாட்டின் வரவேற்பாளர்.

### 2. சான்சலர் மெட்டர்நிக் (COUNT CLEMENS METTERNICH):

இவர் ஆஸ்திரிய நாட்டின் சான்சலர் ஆவார். வியன்னா மாநாடு கூட்டப்படுவதற்கு இவரே காரணம். மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவரும் இவரே. மிகச்சிறந்த அரசியல்வாதியும், ராஜதந்திரியும் படைத்த இவர் "18-ம் நூற்றாண்டின் மாக்கியவல்லி" எனப்படுகிறார். மாநாட்டில் எழுந்த சிக்கலான பிரச்சனைகளுக்கு நல்ல முறையில் தீர்வு கண்டு ஆஸ்திரியாவின் பெருமையை உயர்த்தினார். புரட்சிக் கருத்துக்களும், தேசியமும் வளர்ச்சியடையாமலிருக்க அரிய நடவடிக்கைகளை எடுத்தார்.

## 3. கேசல் ரீபிரபு (LORD CASTLEREAGH):

இவர் இங்கிலாந்தின் பிரதிநிதி ஆவார். இங்கிலாந்தி வெளிநாட்டு அமைச்சரான கேசல் ரீ முற்போக்கான கருத்துக்களையு தெளிவான, எண்ணங்களையும் கொண்டவர். வீயன்னா மாநாட்டி பிரான்ஸ் நாட்டின் மீது இரக்கத் தன்மையுடன் நடந்து கொண்டா பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை. இந்த மாநாட்டில் கலந் கொண்ட மற்ற நாடுகளுடன் எல்லா விவகாரத்திலும் கொள்கைகளி இவரால் ஒத்துப்போக முடியவில்லை.

## 4. டெலிராண்ட் (TALLERAND):

இவர் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டா இவர் தன்னுடைய நிர்வாகத் திறமையாலும் தெளிவா கருத்துக்களாலும் அனைத்து பிரதிநிதிகளையும் கவர்ந்து விட்டா இவருடைய ராஜதந்திரத்தினால்தான் பெருந்தன்மையுடனு மதிப்புடனும் பிரான்ஸ் நடத்தப்பட்டது. இவருடைய பெரு முயற்சியினால் தான் பிரான்ஸ் நாட்டிற்குச் சாதகமான சில அம்சங்க உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இதனால் பிரெஞ் மக்களிடையே செல்வாக்கும், புகழும் பெற்றார் டெலிராண்ட்.

## 5. சார் முதலாம் அலெக்ஸாந்தர் (TSAR ALEXANDER I):

இவர் ரஷ்ய நாட்டின் சார்பாகக் கலந்து கொண்டார். இவ பெருந்தன்மை படைத்தவர் என்றாலும் முரண்பட்ட கொள்கைகளை உடையவர். இவரை மற்ற பிரதிநிதிகள் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதே போல் இவராலும் மற்ற பிரதிநிதிகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வீயன்னா ஏற்பாட்டின் முடிவுகளைச் செயல்படுத்த புனித உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தினார்.

## 6. மூன்றாம் பிரடரிக் வில்லியம் (FREDERICK WILLIAM III):

இவர் பிரஷ்யாவின் அரசர் ஆவார். பிரஷ்யாவின் பிரதிநிதியாக வீயன்னா மாநாட்டில் கலந்து கொண்டார்.

## வீயன்னா மாநாட்டின் நோக்கங்கள்:

நாடுகளின் எல்லைகளைத் திருத்தி அமைக்க நினைத்தனர். அதே சமயம் நெப்போலியனால் விரட்டப்பட்ட பழைய அரச வம்சங்களை மறுபடியும் அரியணையில் அமர்த்த வேண்டும் என்றும் நோக்கம் கொண்டது வியன்னா மாநாடு.

### 2. ஐரோப்பாவில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துதல்:

எதிர்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்புகளைத் தடுத்து இனிமேல் ஐரோப்பாவில் போர்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டும். அதற்காக பிரான்ஸ் நாட்டின் வலிமையை ஒடுக்கி அதனைப் பலவீனப்படுத்த வேண்டும். எனவே பிரான்ஸ் நாட்டின் அண்டை நாடுகளான பிரஷ்யா, நெதர்லாந்து, சார்டீனியா ஆகிய நாடுகளைத்தடுத்து நிறுத்துவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கம். அத்துடன் நெப்போலியனின் பரம்பரையினர் மீண்டும் பதவிக்கு வரவிடாமல் தடுத்தலும் மாநாட்டின் நோக்கமாகும்.

### 3. புரட்சிக்கருத்துக்கள் பரவவிடாமல் தடுத்தல்:

எதிர்காலத்தில் 'இனி புரட்சியே வேண்டாம்' என்று அனைத்துப் பிரதிநிதிகளும் விரும்பினர். மக்களாட்சிக் கருத்துக்கள், தேசிய உணர்வு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய தாராளக் கருத்துக்களை ஒடுக்குவதும் வியன்னா மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

### 4. ஐரோப்பாவில் சக்தி சமநிலையைப் பாதுகாத்தல்:

பிரான்ஸ் பெரும் வலிமை பெற்றதால்தான் நெப்போலியன் ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டார். எனவே எந்த ஐரோப்பிய நாடும் இன்னொரு பலமற்ற நாட்டை பயன்படுத்திக் கொண்டு அதிக பலம் பெற்றுவிடக்கூடாது என்று மாநாட்டினர் வருந்தினர். ஆகவே ஐரோப்பாவில் சக்திசமநிலையை ஏற்படுத்துவதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

### 5. போரின் கொள்ளைப் பொருட்களைப் பங்கிடல்:

பிரான்சும், அதனை ஆதரித்த நாடுகளும், அரசர்களும் தண்டிக்கப்பட வேண்டுமென்று மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் முடிவு செய்தனர். அதே நேரத்தில் நெப்போலியனை முறியடிக்க ஒத்துழைத்த எல்லா ஐரோப்பிய நாடுகட்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும் நினைத்தனர். இதற்காக பிரான்ஸ் நாட்டின் பகுதிகளையும் பொருட்களையும் பங்கு போட்டுக் கொள்ள திட்டமிட்டனர்.

**6. குடியரசுகளை ஒழித்தல்:**

இந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் அனைவரு முடியரசர்கள். அவர்கள் ஐரோப்பாவில் மீண்டும் குடியரசுக ஏற்படுவதை விரும்பவில்லை. எனவே ஐரோப்பாவில் குடியரசுகள ஒழித்தல் வியன்னா மாநாட்டில் முக்கிய நோக்கமாகும்.

மேற்கண்ட நோக்கங்கள், கொள்கைகளின் அடிப்படை வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் அமைக்கப்பட்டன.

## வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் (சாதனைகள்):

**1. பிரான்ஸ்:**

பிரான்ஸ் நாட்டின் எல்லைகள் 1790-ல் இருந்ததைப் போ அமைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்ட வெற்றியடைந்த நாடுகளின் கூட்டுப் படைகள் சுமார் மூன்று ஆண் காலத்திற்கு பிரான்சில் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். பிரான்சு நாட்டி குடியேற்றப் பகுதிகள் பெரும்பாலனவற்றை இங்கிலாந்து பிடுங்கி கொண்டது. பிரான்சைச் சுற்றியிருந்த நாடுகளின் ராணுவபல அதிகரிக்கப்பட்டது. நெப்போலியனால் அமைக்கப்பட்ட ரைன கூட்டமைப்பு கலைக்கப்பட்டு, 39 நாடுகளைக் கொண்ட 'ஜெர்ம கூட்டமைப்பாக' அது மாற்றப்பட்டது. இந்த கூட்டமைப்பு ஆஸ்திரிய வின் கண்காணிப்பில் வைக்கப்பட்டது. இவை தவிர பிற நாடுகளி தலைநகர்களிலிருந்து எடுத்து வந்த கலைப் பொக்கிஷங்களை பிரான்ச அந்த நாடுகளிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று முடி செய்யப்பட்டது.

**2. ஆஸ்திரியா:**

இத்தாலியிலுள்ள லம்பார்டி, வெனிஷியா, இல்லீரியா ஆகி பகுதிகள் ஆஸ்திரியாவுக்குக் கொடுக்கப்பட்டது. ஆஸ்திரிய அர வம்சத்தைச் சார்ந்தவர்களே பார்மா, மாடனா, டஸ்கனி ஆகி இத்தாலியப் பகுதிகளில் அரசர்களாக நியமிக்கப்பட்டனர். அனேகமா வடஇத்தாலி முழுவதுமே ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது இத்தாலி ஒரு 'நிலவியல் சொல்லாக' ( Geographical expression மாற்றப்பட்டது.

**3. ரஷ்யா:**

பிரஷ்யாவிடமிருந்து போலந்துப் பகுதிகளு ஸ்வீடனிடமிருந்து பின்லாந்தும் பிடுங்கப்பட்டு ரஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்டன.

## 4. இங்கிலாந்து:

மத்தியதரைக்கடலில் மால்ட்டா, வடகடலில் ஹெலிகோலாந்து, செயின்ட் லூசியா, தென்ஆப்பிரிக்காவில் கேப்காலனி, டொபாகோ, டிரினிடாட், அயோனியின் தீவுகள், நன்னம்பிக்கைமுனை, ஹோண்டுராஸ், மலாக்கா, இலங்கை ஆகிய பகுதிகள் இங்கிலாந்துக்குக் கிடைத்தன.

## 5. பிரஷ்யா:

பிரஷ்யாவுக்கு வெஸ்ட்பேலியா, சாக்சனி, மேற்கு பொமரேனியா ஆகிய பகுதிகள் கிடைத்தது. இதனால் பிரஷ்யாவின் செல்வமும், செல்வாக்கும் பெருகியது. மோசல், டான்சிக் ஆகிய பகுதிகளையும் பிரஷ்யா தக்கவைத்துக் கொண்டது. ஜெர்மன் கூட்டமைப்பு நாடுகளில் பிரஷ்யாவின் வலிமை பெருகியது.

## 6. இத்தாலி:

வியன்னா மாநாடு இத்தாலியைப் பிரித்து அதன் ஐக்கியத்தைக் குலைத்துப் போட்டது. ஆஸ்திரியாவின் செல்வாக்கு இத்தாலியில் வலுத்தது. போப்பாண்டவருக்குச் சொந்தமான பகுதிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு போப்பின் அரசு மீண்டும் உருவாக்கப்பட்டது. நேப்பிள்ஸ், சிசிலி ஆகியவை பூர்பான் அரசருக்குக் கொடுக்கப்பட்டது. பார்மா (Duchy of Parma) நெப்போலியனின் மனைவியான மரியலூயிசாவுக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு இத்தாலியின் ஒற்றுமை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.


## 7. ஸ்விட்சர்லாந்து:

ஸ்விட்சர்லாந்து ஒரு சுதந்திரக் குடியரசாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது தனித்து நிற்கும் உரிமை பெற்றது. அதற்கு மேலும் மூன்று கான்டன்கள் கொடுக்கப்பட்டது.

## 8. பெல்ஜியம், ஹாலந்து:

ஹாலந்தும், பெல்ஜியமும் இணைக்கப்பட்டு நெதர்லாந்து என்ற தனிநாடு அமைக்கப்பட்டது. ஹாலந்து மக்கள் புரட்டஸ் தாந்து மதத்தினர். பெல்ஜியம் மக்கள் கத்தோலிக்கர்கள். இவர்களிடையே ஒற்றுமையும், நட்பையும் ஏற்படுத்துவது கடினமான காரியம் என்று தெரிந்தும் இந்த ஏற்பாட்டை வியன்னா மாநாடு செய்தது.

# வீயன்னா ஏற்பாடு


ஜெர்மன் கூட்டமைப்பின் எல்லைக்கோடு
பிரஷ்யப் பகுதிகள்
நார்வே
ஸ்வீடன்
பின்லாந்து
பால்டிக் கடல்
வடகடல்
டென்மார்க்
ஹாலந்து
பெல்ஜியம்
இங்கிலாந்து
சாக்சனி
பிரஷ்யா
போலந்து
ரஷ்யா
ஆஸ்திரியா
வியன்னா
பிரான்ஸ்
சுவிஸ்
டஸ்கனி
கார்சிகா
ரோம்
நேபிள்ஸ்
சார்டினியா
ஸ்பெயின்
மத்தியதரைக் கடல்
சிசிலி
கருங்கடல்
துருக்கிய பேரரசு

## 9. நார்வே, ஸ்விடன்:

டென்மார்க் நெப்போலியனுக்கு உதவி செய்ததால் அது தண்டிக்கப்பட்டது. அதனிடமிருந்து நார்வே பிடுங்கப்பட்டு ஸ்விடன் நாட்டுடன் இணைக்கப்பட்டது. இச்செயலினால் இரண்டு நாட்டு மக்களும் மன அமைதி இழந்தனர். இந்த இணைப்பை அவர்கள் விரும்பவில்லை.

## 10. ஸ்பெயின், போர்ச்சுக்கல்:

இவ்விரண்டு நாடுகளிலும் முடியாட்சி மீட்கப்பட்டது. பழைய பூர்பான் அரசவம்சம் அங்கு அரியணையில் அமர்த்தப்பட்டது.

## 11. ஜெர்மனி:

ஜெர்மனி 39 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகள் புதிதாக நிறுவப்பட்ட அரசியல் ஸ்தாபனமான 'ஜெர்மானிய நாடுகளின் கூட்டமைப்பில்' அங்கத்தினர்கள் ஆகவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்த 39 மாநிலங்களின் பிரதிநிதிகள் சபைக்கு ஆஸ்திரியப் பேரரசர் தலைவராக நியமிக்கப்பட்டார்.

# வியன்னா மாநாட்டின் தோல்விக்கான காரணங்கள் (அல்லது) மதிப்பீடு:

வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு ஐரோப்பாவில் அமைதியை ஏற்படுத்தியது. ஆனாலும் பல முக்கியப் பிரச்சனைகட்கு அமைதி காணத் தவறி விட்டது. இம்மாநாட்டின் மூலம் "ஒரு பொதுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒன்று சேர்வது" என்ற எண்ணம் முதல் தடவையாக நடைமுறைக்கு வந்தது. இதுவே பிற்காலத்தில் சர்வதேச சங்கம், ஐ.நா. சபை போன்ற உலக நிறுவனங்கள் தோன்றக் காரணமானது. ஆனால் தேசிய உணர்வு, நாட்டுரிமை ஆகியவற்றை மறந்து ஏற்பாடுகள் செய்யப்பட்டதால் வியன்னா மாநாட்டின் முடிவுகள் அனைத்தும் விரைவில் அழிந்து போயின.

## 1. உரியவர்கட்கு வழங்கும் உரிமை (Principle of legitimacty)

வியன்னா மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் 'உரியவர்கட்கு வழங்கும் உரிமை' கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டனர். ஆனால் இந்தக் கொள்கை காற்றில் பறக்கவிடப்பட்டது. ஏனெனில் நெப்போலியனால் அரியணை இழந்த அனைவருக்கும் அவர்களுடைய அரசு வழங்கப்படவில்லை. மேலும் நியமிக்கப்பட்ட அரசர்களை மக்கள் ... கொள்ளவும் இல்லை.

**2. பெரிய நாடுகளின் பேராசை:**

இங்கிலாந்து, ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா போன்ற பெ நாடுகள் தங்கள் சுயநலன்களிலேயே அக்கறை எடுத்துக்கொண் இவ்வல்லரசுகள் பழைய பகுதிகளைத் தங்களிடம் வைத் கொண்டதுடன், நல்ல பல பகுதிகளை புதிதாகப் பெற்றுக்கொண் பலவீனமான சிறிய நாடுகளைக் கவனிக்காமல் விட்டுவிட்டனர். சி நாடுகளின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன.

**3. தேசியத் தன்மை அவமதிக்கப்பட்டது:**

நாடுகளின் தேசிய உணர்ச்சியை மதிக்காமல் வியன் மாநாட்டில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன. மக்களின் சம்மதத் பெறாமலும், நாடுகளின் விருப்பங்கட்கெதிராகவும் நாடுகளைப் ப போட்டுக் கொண்டனர். (உ.ம்) இத்தாலி, ஹாலந்து, பெல்ஜி இவ்வாறு தேசிய உணர்வு, ஜனநாயகம் ஆகிய தாராளக் கொள்கை நசுக்கப்பட்டன. சிறிய நாடுகளின் உணர்வுகள் கண்டு கொள்ளப்பட இல்லை.

**4. பழக்கவழக்கங்கள், மதம், மக்களின் உணர்ச்சி கவனிக்கப் படவில்லை:**

வியன்னா மாநாடு கத்தோலிக்க பெல்ஜியத்தை புரட்டஸ்தா ஹாலந்துடன் இணைத்தது. இந்த இரண்டுநாட்டு மக்களிடை பொருளாதாரம், பழக்கவழக்கம், மொழி, கலாச்சாரம் ஆகியவற் ஒற்றுமை கிடையாது. 1830-ல், பெல்ஜியத்தில் புரட்சி ஏற்பட்டு அ விடுதலை அடைந்தது. 1905-ல் நார்வே விடுதலை அடைந்த ரஷ்யாவுடன் இணைக்கப் பட்ட பின்லாந்து 1917-ல் விடுதலை அடைந்தது. இத்தாலியிலும், ஜெர்மனியிலும் ஒற்றுமை இயக்கங் தோன்றின.

**5. சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய கொள்கைகள் நசுக்கப்பட்ட**

வியன்னா ஏற்பாட்டை உருவாக்கியவர்கள் எதேச்சதிகாரிக பிற்போக்குவாதிகள் ஆவர். சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய சக்திகளி ஆற்றலை உணராதவர்கள். எனவே நிரந்தரமாக அவற்றை நசு முடியவில்லை. 1830, 1848-ம் ஆண்டுகளில் பிரான்சிலும், ம நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டு வியன்னா மாநாட்டின் ஏற்பாடுக ஒன்றன்பின் ஒன்றாக தோல்வியடைந்தன.

**6. பகற் கொள்ளை:**

வியன்னா மாநாட்டின் தோல்விக்கு பெரிய நான்கு நாடுகளி பேராசையே காரணம். தோற்றவர்களது செல்வத்தையும், பிரதே

சிறுநாடுகளை மனம் போல் துண்டாடினர். போலந்து பங்குபோடப் பட்டது பகற்கொள்ளைக்கு ஒப்பாகும். எனவே வியன்னா ஏற்பாடுகள் அதிககாலம் நிலைத்து நிற்க முடியவில்லை.

**மதிப்பீடு:**

இவ்வாறு வியன்னா மாநாடு ஐரோப்பாவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக புரட்சிகளுக்கும், பூசல்கட்கும் வழிவகுத்தது. நெடுநாட்களுக்கு இந்த ஏற்பாடுகள் நிலைத்து நிற்க முடியவில்லை. அப்போது மக்கள் மனதைக் கவர்ந்திருந்த ஜனநாயகம், தேசியம் ஆகிய கொள்கைகளை இம்மாநாடு புறக்கணித்ததால் மாநாடு தோல்வியடைந்தது. முக்கியமாக ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றவே இம்மாநாட்டைக் கூட்டினர். எனவேதான் மாநாடு தோல்வியடைந்தது.

ஆனால் பொதுப் பிரச்சனைகளை "கூடிப்பேசி முடிவு எடுக்கும் முறை" ஆரம்பமானதுதான் இம்மாநாட்டினால் கிடைத்த பெரிய நன்மையாகும். அத்துடன் போர்க்காலத்தில் தன் உடமைகளை இழந்த ஒவ்வொரு தனிநபருக்கும் அவரவர் இழந்த உடமைகள் அனைத்தும் திரும்பக் கொடுக்கப்பட்டன. மனித நாகரிகத்திற்கு ஊறுவிளைவித்த அடிமை வியாபார முறையை வியன்னா ஏற்பாட்டின் மூலமே பல நாடுகள் முக்கியமாக, பிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து, ஸ்வீடன் போன்ற நாடுகள் அறவே கைவிட்டன. சுதந்திரமான புன்னாட்டு நதிப்போக்குவரத்து மற்றும் பன்னாட்டுச் சட்டம் பற்றியும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. வியன்னா ஏற்பாட்டின் மூலம் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே 1853-ம் வருடம் வரை அமைதி நிலை நாட்டப்பட்டது. பன்னாட்டு மாநாடுகள் என்ற சம்பிரதாயத்தை அரசியலில் ஏற்படுத்தியது வியன்னா மாநாட்டின் சிறப்பான அம்சமாகக் கருதலாம். வியன்னா மாநாட்டைப் பற்றி C.D. Hazen என்ற வரலாற்றாசிரியர் கூறுவதாவது: "One of the most important diplomatic gatherings in the history of Europe".

## புனித உடன்பாடு (Holy Alliance)

ரஷ்யாவின் சார் முதலாம் அலெக்சாந்தர் (1801-1825) 1815-ல் ஆரம்பித்த தூய இயக்கமே 'புனித உடன்பாடாகும்'. இவர் சிறந்த கிறிஸ்தவ மதப்பற்று மிக்கவர். வியன்னா ஏற்பாட்டை உறுதிப்படுத்தவும், ஐரோப்பிய அரசர்களுக்கிடையே சகோதரத்துவத்தின் அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்தவும், கிறிஸ்தவ மதத்தின் புனிதக் கோட்பாடுகளான 'நீதி, கிறிஸ்தவம், கருணை, அமைதி' (Justice, Christianity, Charity, Peace) ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல்

கொள்கைகள் செயல்படவும் ஆரம்பிக்கப்பட்ட இயக்க... உடன்பாடாகும்'.

## புனித உடன்பாட்டின் வரலாற்றுப் பின்னணி:

இந்த புனித உடன்பாட்டில் காணப்பட்ட கருத்துக்கள் ... நூற்றாண்டுகளுக்கு முன்பே ஐரோப்பாவில் தோன்றியது. பிரெஞ்சு நான்காம் ஹென்றி (1589-1610) எலிசபெத் அரசியின் ... கொள்கையின் தாக்கத்தினால் ''மாபெரும் திட்டம்'' (Grand Design) அமைப்பை அமைத்தார். பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சே... உறுப்பினர்களைக் கொண்ட 'பொதுக்குழு' (General Council) அமைக்கப்பட்டது. 'ஐரோப்பாவில் ஏற்படும் பிரச்சனைகளைத் ... அமைதியை ஏற்படுத்துவதே' இதன் நோக்கமாகும். இதுபற்றி நா... ஹென்றியின் அமைச்சரும் அவரது நெருங்கிய நண்பருமான சல்லி... கூறியதாவது. ''ஐரோப்பாவில் அடிக்கடி ஏற்படும் ரத்தக்கள... நிரந்தரமாக தடுப்பதும், ஐரோப்பிய அரசர்களை சகோதரத்துவ... அடிப்படையில் ஒற்றுமையாக வாழச் செய்வதும் மாபெரும் திட்ட... நோக்கமாகும்'' என்றார். ஆனால் 1610-ல் நான்காம் ஹென்றி இ... விடவே இத்திட்டம் முழுமையடையவும் இல்லை. செயல்படு... படவும் இல்லை.

இதன் பிறகு ஒரு நூற்றாண்டு கழித்து 1713-ல் மீண்டும் ... மாதிரியான திட்டம் ஒன்று Abbe de St. Pierre என்பவரால் ஐரோப்... கழகம் (European league) என்ற பெயரில் அமைக்கப்பட்டது. ... ஐரோப்பியக் குழுவில் சேர்ந்த உறுப்பினர்கள் ''ஒருவருக்கொரு... போர்புரியும் உரிமையை விட்டுவிடவேண்டும். தங்களுக்குள் ஏ... பிரச்சனைகளை 'நிரந்தர காங்கிரஸ்' (Permanent Congress) என்ற ... அமைப்பின் மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டும்''. இவ்வ... 'ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட வேண்டும்' என்ற எண்ணம் ஏற்கன... தோன்றி யிருந்தது. அடுத்த நூற்றாண்டில், அதாவது 1815-ல் ... அடிப்படையில் தான் ரஷ்யாவின் சார் முதலாம் அலெக்சாந்தர் 'பு... உடன்பாட்டைத்' தோற்றுவித்தார்.

## புனித உடன்பாட்டின் தோற்றம்:

ரஷ்யா சார் முதலாம் அலெக்சாந்தர் தனது ஆட்சிக் காலத்... ஆரம்பத்தில் தாராளக் கருத்துக்கள் மீது அதிக நாட்டம் கொண்டிருந்... தன் ஆட்சிக்குட்பட்ட போலந்தில் ஒரு அரசியலமைப்பை உருவா... நினைத்தார். ரஷ்யாவில் கூட ஒரு புதிய அரசியலமைப்பை உருவா... நினைத்தார். ஆனால் இந்த தாராளக் கருத்துக்கள் அவரிடம் ஆழ... வேரூன்றவில்லை. மேலோட்டமாகவே இருந்தது. 'ஐரோப்பி...

கூட்டமைப்பு' (European Confederation) என்ற கருத்து இவரை வெகுவாகக் கவர்ந்து விட்டது. நெப்போலியனுக்கெதிராக நேசப்படைகள் போர்புரிந்து கொண்டிருந்தபோதே சார் அலெக்சாந்தர் இங்கிலாந்திடம் 'ஒரு பன்னாட்டு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும். பன்னாட்டு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டுமானால் ஒவ்வொரு நாடும் உள்நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டவேண்டும்' என்று கூறினார்.

இதன் அடிப்படையில் இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் வில்லியம் பிட்டுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி "ஐரோப்பாவில் நெப்போலியனுக்கெதிரான போர் முடிந்து அமைதி ஏற்பட்டபின், பொதுவான உலக அமைதிக்கு பங்கம் விளைவிப்பன வற்றைத் தடுக்க ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டும்" என்று முடிவெடுத்தனர். இதில் இங்கிலாந்தின் நோக்கம் 'பிரான்ஸ் மீண்டும் ஐரோப்பிய அமைதியைக் கெடுப்பதற்கு அனுமதிக்காமல் ஐரோப்பா முழுவதற்குமான ஒரு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும்' என்பதுதான். ஆனால் அலெக்சாந்தரோ நான்காம் ஹென்றியின் 'மாபெரும் திட்டத்தின்' அடிப்படையிலும் இந்த புதிய ஒழுங்கு அமைய வேண்டும் என்று விரும்பினார். எனவே 1815 செப்டம்பர் 26-ம் தேதி 'புனித உடன்பாடு' உருவாக்கப்படுவதாக அறிவித்தார் சார் முதலாம் அலெக்சாந்தர்.

## புனித உடன்பாட்டின் முக்கிய அம்சங்கள்:

1. கிறிஸ்தவ மதத்தின் புனிதக் கோட்பாட்டுகளான நீதி, கிறிஸ்தவம், கருணை, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் கொள்கைகள் செயல்படவும், ராஜதந்திர நடவடிக்கைகள் நடைபெறவும் வேண்டும்.

2. ஐரோப்பியக் கிறிஸ்தவ மன்னர்கள் அனைவரும் கிறிஸ்தவக் குடும்பத்தில் சகோதரர்கள் ஆவர். தங்களுக்குக் கடவுளால் தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு தங்கள் மதக்கோட்பாடுகளுக்கு உட்பட்டே ஆட்சி புரிய வேண்டும்.

3. தங்கள் நாட்டின் மக்களை பிள்ளைகளாகவும், தங்களை அவர்களின் அன்பான தந்தையுமாக பாவித்து நடந்து கொள்ள வேண்டும்.

4. விடுதலை இயக்கங்களே பொதுவாக போர்கள் ஏற்பட முக்கியக் காரணம். எனவே அவை கிறிஸ்தவக் கொள்கைகளுக்குப் புறம்பானவை. ஆகவே விடுதலை இயக்கங்கள் ஒழிக்கப்படவேண்டும்.

இவ்வாறு சமயச்சார்புடன் அரசியல் இணைந்து செயல்படுதலின் அவசியத்தின் அடிப்படையில் புனித உடன்பாட்டைத் தோற்றுவித்தார் சார் அலெக்சாந்தர். பன்னாட்டு ராஜதந்திரத்தில் ஒழுக்கத்தையும்,

[illegible] ஏற்படுத்து [illegible] ஆஸ்திரியா, பிரஷ்யா [illegible] ஆனால் இங்கிலாந்து [illegible] இதில் உள்ளது [illegible] கையெழுத்திட [illegible]

## மதிப்பீடு

[illegible] புனித உடன்பாடு இறந்தே பிறந்த குழந் [illegible] போன்றுதான் இருந்தது. இதற்கு யாருமே முக்கியத்து [illegible] எந்த நாடும் முழுமனதுடன் இதனை ஏ [illegible]இல்லை. இதன் கொள்கைகள் ஒரு போதும் செயல்படு [illegible]இல்லை. ஆரம்பத்திலிருந்தே இந்த உடன்பாடு எல்லோரா [illegible] புரிந்து கொள்ளப்பட்டது. அதன் நோக்கங்களும் நடைமு [illegible] முக்கியத்துவமும் தவறாகவே விளக்கமளிக்கப்பட் "பிற்போக்குவாதத்தின் அடையாளம்" என்றும், "விடுத எண்ணங்களுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சதி" என்றும் "மக்களு எதிரான மன்னர்களின் கூட்டு" என்றும் (a symbal of Reaction, a conspira against Liberalism and a league of princess against their people) இ உடன்பாடு கண்டிக்கப்பட்டது.

மெட்டர்நிக் (Metternich) என்பவர் இதனை "தேவைய வார்த்தைகளின் பத்திரமே" (Verbiage) என்றும், "a Foud sound nothin" என்றும் "a moral demonstration" என்றும் வர்ணித்தார். டெலிரான் என்பவர் இதனை "a ludicrous Contract" என்று குறை கூறினார்.

காசில்ரீ (Castlereagh) என்பவர் "A piece of Sublime mystics and nonsense" என்று புனித உடன்பாட்டைக் குறை கூறினார்.

லிப்சன் (Lipson) என்பவர் "The Holy alliance was merely a Phila thropic aspiration clothed in a religious garb" என்று மதிப்பிடுகிறார்.

ஜார்ஜ் கானிங் (George Canning) என்பவர் "It was only the ove flow of the pietistic feeling of the Emperor Alexander and the applicati of Christian principics to politics" என்று கூறுகிறார்.

இவ்வாறு சார் முதலாம் அலெக்சாந்தரால் தோற்றுவிக்கப்பட் 'புனித உடன்பாடு' எல்லோராலும் கண்டிக்கப்பட்டது. இது ஒ புனிதமானதாகவோ, உடன்பாடாகவோ கருதப்படவில்லை. 1825-டிசம்பர் மாதம் அலெக்சாந்தர் இறந்தவுடன் இந்த உடன்பாடு மறைந்து போனது.

# 5. ஐரோப்பியக் கூட்டமைப்பு
## (CONCERT OF EUROPE)

நெப்போலியன் போனபார்ட் வாட்டர்லூ போரில் தோற்கடிக்கப்பட்ட பிறகு ஐரோப்பிய மன்னர்களும், அரசியல்வாதிகளும் ஐரோப்பாவில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தவும், எதிர்காலப் போர்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முயற்சி எடுத்தனர். 1815-ல் ஆஸ்திரிய நாட்டின் தலைநகரான வியன்னாவில் கூடி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது. அந்த முடிவுகளையும், ஏற்பாடுகளையும் எல்லா ஐரோப்பிய நாடுகளும் கடைப்பிடித்து செயல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு வியன்னா ஏற்பாடுகளைச் செயல்படுத்தவும், செயல்படுத்தும் போது ஏற்படும் பிரச்சனைகளை அவ்வப்போது கூடி தீர்க்கவும் ஏற்படுத்தப்பட்ட அமைப்பிற்கு ஐரோப்பியக் கூட்டமைப்பு என்று பெயர்.

இக்கூட்டமைப்பு சுதந்திர வேட்கைக்கு எதிரான ஓர் அமைப்பாகும். இதன் கொள்கைகளும், நடவடிக்கைகளும் குடியாட்சிக் கருத்துக்களுக்கும் தேசியத்திற்கும் எதிரானவை. எனவேதான் சுமார் எட்டு ஆண்டுகளுக்குள் இக்கூட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. ஆனாலும் உலக நிறுவனம் ஒன்று அமைக்கப்பட ஆரம்பிக்கப்பட்ட முதல் முயற்சியாக விளங்கியது என்று கூறலாம்.

**ஐரோப்பியக் கூட்டமைப்பின் நோக்கங்கள்:**

1. ஐரோப்பாவில் புரட்சிப்போர்கள் ஏற்படாதவாறு தடுத்து அமைதியை நிலைநாட்டுதல்.

2. புரட்சி இயக்கங்களையும், விடுதலை எண்ணங்களையும் வளர விடாமல் தடுத்தல்.

3. குடியரசுகளை ஒழித்தல்.

4. வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகளை உறுதிப்படுத்தி, அவைகளைச் செயல்படுத்துதல்.

5. கருத்து வேறுபாடுகளை தங்களுக்குள் அமைதியான முறையில் பேசி தீர்த்துக் கொள்ளுதல்.

6. ஐரோப்பாவில் சக்தி சமநிலையைப் பாதுகாத்தல்.

**2. நால்வர் உடன்பாடு (Quadruple alliance): 1815, Nov**

மெட்டர்னிக்கின் முயற்சியாலும், ராஜதந்திரத்தாலும் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் சேர்ந்து நால்வர் உடன்பாட்டை அமைத்தன. ஐரோப்பாவில் அமைதியை ஏற்படுத்தவும் வியன்னா ஏற்பாட்டை செயல்படுத்திக்

காப்பாற்றுவதும், போனபார்ட் வம்ச வழியை மீண்டும் ஐரோப்பாவில் தலைதூக்க விடாமல் பார்த்துக் கொள்வது ஆகியவையே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. முக்கிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அடிக்கடி கலந்து பேசி முடிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தனர். 1818-ல் இந்த உடன்பாட்டில் பிரான்ஸ் சேர்ந்த போது ஐவர் உடன்பாடாக மாறியது.

## ஐரோப்பியக் கூட்டமைப்பின் செயல்பாடுகள்:

தங்கள் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் பல மாநாடுகளைக் கூட்டின. ஏ-லா-சாப்பேல் என்னுமிடத்தில் முதல் மாநாடு கூட்டப்பட்டது.

### 1. ஏ-லா-சாப்பேல் மாநாடு (Congress of Aix-la-Chappele): 1818

இந்த மாநாடு மெட்டர்னிக்கின் பெரும் முயற்சியால் கூட்டப்பட்டது. முதலில் பிரான்சு நாடு முடியாட்சியை அமைதியான முறையில் ஏற்றுக் கொண்டதால் அந்த நாட்டையும் ஐரோப்பியக் கூட்டமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் பல பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன. இம்மாநாடு ஐரோப்பிய நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சனைகளில் தலையிட்டு புரட்சி இயக்கங்களையும், முன்னேற்றக் கருத்துக்களையும் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட விரும்பியது. ஆனால் இதனை இங்கிலாந்து எதிர்த்தது. உதாரணமாக ஜெர்மனியில் ஏற்பட்ட கிளர்ச்சியை வன்முறையில் மெட்டர்னிக் அடங்கியதால், இங்கிலாந்து வெளிப்படையாகவே தனது எதிர்ப்பை காண்பித்தது. முதல் மாநாட்டிலேயே உறுப்பினர் நாடுகளுக்கிடையே, மோதல்களும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டன.

### 2. டிராப்போ மாநாடு (Congress of Troppau):1820

1820-ம் ஆண்டு ஐரோப்பாவில் மீண்டும் புரட்சி இயக்கங்கள் தோன்றின. முக்கியமாக ஸ்பெயின் நாட்டிலும், இத்தாலியிலுள்ள நேப்பிள்சிலும் மக்கள் உரிமைகள் நிறைந்த அரசியலமைப்பை கோரினர். ஸ்பானிய அரியணையில் அமர்த்தப்பட்ட 'ஏழாம் பெர்டினாண்டை' எதிர்த்து கர்னல்ரீகோ என்பவரின் தலைமையில் 'கேடிஸ்' நகரில் பெரும் கிளர்ச்சி ஒன்று ஏற்பட்டது. இது போன்ற கிளர்ச்சிகள் ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டிலுள்ள இத்தாலிய பகுதிகளிலும் பரவிவிடும் என்று பயந்த மெட்டர்னிக் 1820-ல் டிராப்போ என்னுமிடத்தில் மாநாடு ஒன்றைக் கூட்டினார்.

இம்மாநாட்டில், ஸ்பெயினில் ஏற்பட்ட புரட்சியை படை பலத்துடன் அடக்க வேண்டும் என்று சார் அலெக்ஸாந்தர் விரும்பினார். ஆனால் மேற்கு ஐரோப்பாவில் ரஷ்ய தலையீட்டை இங்கிலாந்து விரும்பவில்லை. இந்த மாநாட்டில் ''எங்கெல்லாம் புரட்சி வெடிக்கின்றதோ அங்கெல்லாம் ராணுவத்தை அனுப்பி அதை நசுக்க வேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை இங்கிலாந்து கடுமையாக எதிர்த்தது. எனவே எந்த முடிவும் எடுக்கப்படாமல் இம்மாநாடு முடிந்தது.

### 3. லேபாக் மாநாடு (Congress of Laibach):1821

1821-ம் ஆண்டு ''லேபாக்'' என்னுமிடத்தில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாடு கூட்டப்பட்ட நேரத்தில் கிரிஸ், ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளில் புரட்சி இயக்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இம்மாநாட்டின் தீர்மானத்தின்படி ஆஸ்திரியப் படைகள் நேப்பிள்ஸில் நேரடியாகத் தலையிட்டு புரட்சியை அடக்கி எதேச்சதிகாரத்தை நிலை நிறுத்தின. பியட்மாண்டில் தோன்றிய புரட்சி ஒடுக்கப்பட்டது. ஆனால் இந்த பிற்போக்கான நடவடிக்கைகளை இங்கிலாந்து வன்மையாகக் கண்டித்தது. மேலும் ரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையேயும் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தன.

### 4. வெரோனா மாநாடு (Congress of Verona):1822

1822-ம் ஆண்டு வெரோனாவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அப்போது துருக்கியின் கீழ் இருந்த கிரிஸில் புரட்சி வெடித்தது. ஸ்பெயினிலும் மீண்டும் புரட்சி ஏற்பட்டு நிலைமை சீர்கேடு அடைந்திருந்தது. எனவே ஸ்பெயின், கிரிஸ், ஆகிய நாடுகளிலுள்ள பிரச்சனைகளை இம்மாநாடு விவாதித்தது. மெட்டர்னிக் இத்தாலிய அரசியலில் தலையிட்டது போல ரஷ்ய சார் அலெக்ஸாந்தர் பால்கன் அரசியலில் தலையிட நினைத்தார். இதனை மெட்டர்னிக் விரும்பவில்லை. மெட்டர்னிக் மிகத்திறமையுடன் ஸ்பானியப் பிரச்சனைகளுக்கே மாநாட்டில் முதலிடம் அளிக்க முடிவு செய்தார்.

ஸ்பானிய புரட்சி இயக்கங்களை நசுக்க ஒரு பிரெஞ்சுப் படையை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. இந்த அனுமதியை எதிர்த்து, மாநாட்டை விட்டே வெளியேறியது இங்கிலாந்து. பின்னர் ஐரோப்பியக் கூட்டமைப்பை விட்டே விலகியது. மாநாட்டின் முடிவின்படி 1823-ல் பிரெஞ்சுப்படைகள் ஸ்பெயின் நாட்டினுள் நுழைந்து புரட்சி இயக்கத்தை நசுக்கியது. 'கர்னல்ரீகோ' கொல்லப்பட்டார். வெரோனா மாநாட்டுடன் ஐரோப்பியக் கூட்டமைப்பு கலைந்து விட்டது.

## ஐரோப்பியக் கூட்டமைப்பு தோல்வியடையக் காரணங்கள்

1. **ஒற்றுமை இல்லை:** ஐரோப்பியக் கூட்டமைப்பு உறுப்பினர் நாடுகளான ரஷ்யா, ஆஸ்திரியா இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கிடையே ஒற்றுமை இல்லை. இங்கிலாந்து ஜனநாயக இயக்கங்களுக்கு ஆதரவு அளித்தது. ஆனால் மற்ற மூன்று நாடுகள் எதேச்சதிகாரத்தை ஆதரித்தன. இவ்வாறு உறுப்பு நாடுகட்கிடையே தோன்றிய அடிப்படை கருத்து முரண்பாடுகள் இக்கூட்டமைப்பு தோல்வியடைய முக்கியக் காரணமாகும்.

2. பிற நாட்டு உள் விவகாரங்களில் தலையிடுவதையும், சிறிய நாடுகளின் நலன்கள் பாதிக்கப்படுவதையும் இங்கிலாந்து ஏற்கவில்லை. ஒவ்வொரு மாநாட்டிலும் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியது இங்கிலாந்து.

3. இங்கிலாந்தைத் தவிர, மற்ற நாடுகள் பிற்போக்குவாதத்தின் அடிப்படையில் இயங்கின. முன்னேற்றக் கருத்துகளுக்கு தடையாக விளங்கின. விடுதலை இயக்கங்களை நசுக்கி வந்தன.

4. ஐரோப்பிய மக்களின் தேசிய உணர்வுகளையும், ஜனநாயக இயக்கங்களையும் நசுக்கியதால் இக்கூட்டமைப்பை மக்கள் வெறுத்தனர்.

5. விடுதலை இயக்கங்களை ஐரோப்பாவை விட்டே ஒழிப்பதற்குத் திட்டமிட்டு செயல்பட்டு வந்தது ஐரோப்பியக் கூட்டமைப்பு.

6. ஐரோப்பியக் கூட்டமைப்பில் உள்ள வல்லரசு நாடுகள் சிறிய நாடுகள் அனைத்தும் தங்களுக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று விரும்பின. எனவே சிறிய நாடுகள் வல்லரசுகளின் எதேச்சதிகாரப் போக்கை எதிர்த்தன.

7. 1823-ல் அமெரிக்க ஜனாதிபதி மன்றோவினால் வெளியிடப்பட்ட 'மன்றோ கொள்கை' ஐரோப்பிய நாடுகளை அமெரிக்க விவகாரங்களில் தலையிடுவதைத் தடுத்து நிறுத்தியது. இதன்படி ஸ்பானிய அமெரிக்கக் குடியேற்றங்களின் விடுதலையை அமெரிக்காவும் இங்கிலாந்தும் வெளிப்படையாக ஆதரித்தன.

### மதிப்பீடு:

இவ்வாறு ஐரோப்பியக் கூட்டமைப்பு, ஐரோப்பா முழுவதிலுமுள்ள மக்களிடையே எழுந்த விடுதலை உணர்ச்சியையும், தேசிய உணர்ச்சியையும் தடைசெய்ய முயற்சித்தது. அதற்காகப் பல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாலும் இறுதியில் தோல்வியே

[illegible]

[illegible]

* * * * *

## [illegible]

## [illegible] (METTERNICH 1815-1848)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விடுதலை, ஜனநாயகம் மற்றும் புரட்சிக் கருத்துக்க ஐரோப்பாவிலிருந்தே விரட்ட எண்ணினார்



மெட்டர்னிக்

## 2. பழைய பிற்போக்குக் கொள்கைகளில் விருப்பம்:

மெட்டர்னிக் பிற்போக்கு கொள்கைகளையும், பழைய ஒழு நிலையை பாதுகாப்பதிலுமே நம்பிக்கை கொண்டிருந்தார். 'புரட்சியா ஐரோப்பிய சமூக அரசியல் அமைப்பை கெடுத்துவிட்ட எனவும், எனவே அதனைச் சரிசெய்ய வேண்டியது அவசியம் என்ற பூரண எதேச்சதிகார முடியாட்சியின் மீது நம்பிக்கை கொண்ட 'அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் ஒரு அரசாங்கமே அல் என்றார்.

## 3. தேசியத் தன்மை மீது வெறுப்பு:

மெட்டர்னிக் ஐரோப்பிய மக்களிடையே தேசிய எண்ண வளர்வதை விரும்பவில்லை. முக்கியமாக ஆஸ்திரியாவில் தேசி எண்ணம் பரவவிடாமல் தடுக்க நினைத்தார். இவ்வாறு விடுதலை மற்ற தேசிய எண்ணங்களின் வளர்ச்சியை அவர் விரும்பவில்லை.

## மெட்டர்னிக் திட்டம் Metternich System)

மெட்டர்னிக் திட்டம் என்பது, பூரணமான எதேச்சதிக பிற்போக்கு அரசுகளை அமைத்தலும், ஐரோப்பாவில் விடுதலை, புர

அடிப்படையிலேயே இவருடைய செயல்கள் இருந்தன. பேச்சுரிமையும், பத்திரிகை சுதந்திரமும், பாராளுமன்ற ஜனநாயகமும் மெட்டர்னிக் திட்டத்தின் பரம விரோதிகள். எனவே அவற்றை ஒழிப்பதில் தீவிரமாக செயல்பட்டார் மெட்டர்னிக்.

## ஐரோப்பாவில் மெட்டர்னிக் திட்டம் செயல்படுத்தப்படுதல்:

### 1. ஆஸ்திரியா:

ஆஸ்திரியப் பேரரசில் ஜெர்மானியர்கள், மாகியர்கள், இத்தாலியர்கள், செக் ஆகிய பல்வேறு இனத்தவர்கள் காணப்பட்டனர். அவர்களிடம் தேசிய உணர்ச்சியும் அரசியல் ஒற்றுமையும் இல்லை. எனவே அமைதியின்மையும், குழப்பங்களும் காணப்பட்டது. எனவே இங்கு எதேச்சதிகார முடியாட்சியை வெற்றிகரமாக அமைக்க முடிந்தது.

**a) கல்விக் கட்டுப்பாடு:** இளைஞர்களின் சுதந்திர எண்ணங்களை ஒடுக்குவதற்கு அவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்தார். புத்தகங்கள் தணிக்கை செய்யப்பட்டன. மாணவர்களின் அரசியல் கூட்டங்கள் தடைசெய்யப்பட்டன. அரசியல் வரலாறு போன்ற பாடங்கள் பாடத்திட்டத்திலிருந்தே நீக்கப்பட்டன.

**b) பத்திரிக்கைத் தணிக்கை:** விடுதலை எண்ணங்களும் தேசிய உணர்வுகளும் பரவாமல் இருக்க பத்திரிக்கைகள் தணிக்கை செய்யப்பட்டன. அப்படி விடுதலை கருத்துக்களைப் பரப்பும் பத்திரிக்கைகள் தடைசெய்யப் பட்டன.

**c) எல்லைப் புறங்களில் பாதுகாப்பு:** விடுதலைக்கொள்கைகள், புரட்சி எண்ணங்களைக் கொண்ட புத்தகங்கள், பிரதிகள் நாட்டின் உள்ளே வராமல் இருக்க நடவடிக்கைகள் எடுத்தார். வெளிநாட்டுப் பயணங்கட்குத் தடை விதிக்கப்பட்டது. விடுதலை மற்றும் புரட்சிக் கருத்துக்களைப் பற்றிப் பேசியவர்கள் விசாரணை இன்றி சிறையிலடைக்கப்பட்டனர்.

ஆஸ்திரியப் பேரரசு தழைத்தோங்க வேண்டுமென்றால் விடுதலை, புரட்சிக் கருத்துக்களை நசுக்க வேண்டும் என்றார். எனவே, இவருடைய திட்டம் வெற்றிகரமாக ஆஸ்திரியாவில் செயல்படுத்தப் பட்டது.

### 2. ஜெர்மனி:

ஜெர்மன் கூட்டமைப்பு ''மக்களின் கூட்டமைப்பாக இல்லாமல் மன்னர்களின் கூட்டமைப்பாகவே'' காணப்பட்டது. விடுதலை எண்ணம்

கொண்ட மக்கள் மாற்றம் நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். 1817-ம் ஆண்டு 'மார்ட்டின் லூதர்' போப்பாண்டவரை எதிர்த்த ஆண்டு நிறைவை ஒரு விழாவாகக் கொண்டாட ஆரம்பித்தனர். அப்போது பல்கலைக்கழக மாணவர்கள் பிற்போக்கு அரசின் கொள்கையை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். பிற்போக்கு நூல்கள் இவர்களால் கொளுத்தப்பட்டன.

இச்சமயத்தில் மெட்டர்னிக் தன் திட்டத்தை செயல்படுத்த முற்பட்டார். 1819-ல் 'கார்ல்ஸ்பாட்' என்ற இடத்தில் ஜெர்மானிய முக்கிய அரசியல் பிரமுகர்களின் கூட்டத்தை கூட்டி அதன் முடிவில் ''கார்ல்ஸ்பாட் ஆணை'' (Garlsbad Decrees)களை வெளியிட்டார். அதன்படி பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மாணவர்கள் கண்காணிக்கப்பட்டனர். அரசுக்கெதிரான புரட்சியாளர்களின் சதித்திட்டங்களைக் கண்டறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப் பட்டது. இதன் விளைவாக பிரன்ஸ்விக், சாக்ஸனி, ஹெசிஹாசல் ஆகிய ஜெர்மானியப் பகுதிகளில் புரட்சி ஒடுக்கப்பட்டது.

### 3. இத்தாலி:

வியன்னா மாநாட்டின் மூலம் இத்தாலியின் வடபகுதிகளில் ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்தார் மெட்டர்னிக். நேப்பிள்ஸில் முடியாட்சியை ஏற்படுத்த இரண்டாம் பெர்டினாண்டுக்கு ஆதரவு அளித்தார். அத்துடன் அவருடன் ரகசிய உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார்.

1820-ல் நேப்பிள்ஸில் கிளர்ச்சி ஏற்பட்ட போது ஆஸ்திரியப் படை அனுப்பப்பட்டு கிளர்ச்சி நசுக்கப்பட்டது. 1821-ல் பீட்மாண்டில் கிளர்ச்சி ஏற்பட்ட போது அதுவும் ஒடுக்கப்பட்டது. மேலும் பார்மா, மாடனா, போப்பின் பகுதிகளிலும் புரட்சி நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன.

இதனால்தான் ஹேய்ஸ் என்பவர் ''ஆஸ்திரியாவின் பிற்போக்குத் தேர் இத்தாலியின் தலையையும் வாலையும் நசுக்கிப் போட்டது'' என்கிறார்.

### 4. ஸ்பெயின்:

வியன்னா ஏற்பாட்டின்படி ஏழாம் பெர்டினாண்டு ஸ்பெயின் மன்னராக் கப்பட்டார். இவர் ஸ்பெயின் நாட்டில் விடுதலை இயக்கங்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். விடுதலைக் கருத்துக்களைக் கொண்ட அரசியலமைப்பை ரத்து செய்தார்.

ஆனாலும் புரட்சி இயக்கம் பரவியதால், வல்லரசுகளின் உதவியை நாடினார். 1822ல் வெரோனாவில் மாநாடு கூடியபோது

மெட்டர்னிக் ஸ்பானியப் பிரச்சனைகட்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஒரு பிரெஞ்சுப் படை அனுப்பப்பட்டு கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது. ஏழாம் பெர்டினாண்டின் எதேச்சதிகாரம் நிலை நாட்டப்பட்டது.

**5. பிரான்சு:**

நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின், பிரான்சை சுற்றி வலிமையான நாடுகளை உருவாக்க முயன்றார் மெட்டர்னிக். பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவாமல் தடுப்பதில் கவனமாக இருந்தார். ஆனால் முடியாட்சியை பிரெஞ்சு மக்கள் ஏற்றுக் கொண்டதால் அதன் பின் மெட்டர்னிக் அங்கு அதிக கவனம் செலுத்தவில்லை. எனவே தான் அவருக்குத் தெரியாமலேயே புரட்சி இயக்கங்கள் வளர்ந்து பின்னர் 1830, ஜூலையிலும், 1848, பிப்ரவரியிலும் பிரான்ஸில் பெரும் புரட்சி ஏற்பட்டது. அதன் விளைவாக பல ஐரோப்பிய நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டது. மெட்டர்னிக் நாட்டை விட்டே ஓடினார். இதுவே மெட்டர்னிக் திட்டத்தின் தோல்விக்கும் வழிவகுத்தது.

## மெட்டர்னிக் திட்டத்தின் தோல்விக்கான காரணங்கள்:

**1) புரட்சிக் கருத்துக்களை நசுக்க முடியவில்லை:**

1. புரட்சிக் கருத்துக்களை நசுக்கினார் மெட்டர்னிக். ஆனால் புரட்சிக் கருத்துக்களின் வளர்ச்சியையும், அவை பரவியதையும் தடுக்க முடியவில்லை. மெட்டர்னிக்கின் கடுமையான சட்டங்களுக்கு மத்தியில் புரட்சிக் கருத்துக்களே வெற்றியடைந்தன. 1848-ல் பிரான்சில் வெடித்த புரட்சி ஆஸ்திரியாவுக்கு பரவி நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே பதவி விலகி இங்கிலாந்திற்கு ஓடிவிட்டார் மெட்டர்னிக். அவர் சகாப்தமும் முடிந்தது.

**2. இங்கிலாந்தின் எதிர்ப்பு:**

பிற நாட்டு விவகாரங்களில் நேரடியாகத் தலையிடும் 'மெட்டர்'னிக் திட்டத்தை' இங்கிலாந்து ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தது. விடுதலை இயக்கங்கள் மீது பற்றுக் கொண்ட இங்கிலாந்து டிராப்போ, வெரோனா மாநாடுகளில் எதிர்த்து, பின்னர் ஐரோப்பிய கூட்டமைப்பிலிருந்தே வெளியேறியது. இதனால் மெட்டர்னிக் திட்டம் தோல்வியடைந்தது.

**3. தேசியத் தன்மையின் வளர்ச்சி:**

ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் தேசியத் தன்மையின் வளர்ச்சி மெட்டர்னிக் திட்டத்திற்கு ஒரு சவாலாகவே

இருந்தது. மேலும் தேசிய இயக்கங்கட்கு இங்கிலாந்து வெளிப்பை ஆதரவு தெரிவித்து வந்தது. இதனால் மெட்டர்னிக் தோல்வியடைந்தது

**மதிப்பீடு:**

1815 முதல் 1848 வரை ஐரோப்பிய அரசியலில் ஆஸ் நாட்டிற்கு தலைமையிடம் கிடைக்கச் செய்தவர் மெட்டர்னிக் நாட்டுப்பற்றின் காரணமாகவே ஐரோப்பாவில் பரவிவரும் புர கருத்துக்கள் ஆஸ்திரியாவிலும் பரவிவிடாமல் தடுக்க நினை வியன்னா மாநாட்டிலும், ஐரோப்பியக் கூட்டமைப்பிலும் இவரு ஆதிக்கமே இருந்தது. இவருடைய திட்டம் குறுகிய காலப் பயன்க தந்தது. இவருடைய பிற்போக்குக் கருத்துக்கள் புரட்சிக் கருத்துக்க முன் தோல்வியடைந்தது. ஆனால் ஐரோப்பிய அரசியலில் சுமார் நா ஆண்டுகள் அமைதியை ஏற்படுத்தியவர் மெட்டர்னிக் என புகழப்படுகிறார்.

❦ ❦ ❦ ❦ ❦

# 7. 1830-ம் வருட ஜூலை புரட்சி

## (JULY REVOLUTION, 1830)

வியன்னா மாநாட்டின் ஏற்பாட்டின்படி பிரான்ஸ் நாட்டில் "18- லூயி" (1814-24) பேரரசராக முடிசூட்டப்பட்டார். இவர் மிதவ நோக்குடையவர். இவர் பிரெஞ்சுப் புரட்சியை மறக்கவில்லை நெப்போலியனின் சீர்திருத்தங்களைப் பின்பற்றினார். பிரெஞ்சு மக்கள் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் 1814 ஜூன் 4-ம் தே "அரசியலமைப்புச் சாசனம்" (Charter) ஒன்றை வெளியிட்டா அதன்படி, இங்கிலாந்தில் அமைந்திருப்பதைப் போன்ற பாராளுமன்ற அமைக்கப்பட்டது. மக்களின் உரிமைகளை மதித்து "பேச்சுரிமை, ம வழிபாட்டுரிமை, பத்திரிக்கை சுதந்திரம்" ஆகிய உரிமைகளை வழங்கினார். இது மன்னரே மக்களுக்கு மனமுவந்து கொடுத்த உரிமைக ஆகும். ஆனாலும் அதன்பின் நடந்த பல நிகழ்ச்சிகள் 1830-ம்வருட ஜூலைப் புரட்சி ஏற்படக் காரணமாயின.

### ஜூலைப் புரட்சிக்கான முக்கியக் காரணங்கள்:

**1. வெள் பயங்கரம்:** (white terror):

18-ம் லூயி பிரெஞ்சு மக்களுக்கு 1814-ல் வழங்கிய அரசியலமைப்பு சாசனத்தை (பட்டயம்) தீவிரவாதிகள் எதிர்த்தனர்.

நிலங்கள் பிரான்சில் எதேச்சதிகாரமும், சிறப்புரிமைகளும் மீண்டும் வழங்கப்பட வேண்டும் என்றனர். பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட வேண்டும் என்றனர். நிலங்களை இழந்த நிலவான்தார்களுக்கு மீண்டும் நிலங்களைக் கொடுக்க வேண்டும் என்றனர். எனவே மக்களுக்கு 18 ம் லூயி வழங்கிய பட்டயத்தை எதிர்த்தனர். வாட்டர்லூ போரில் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட பின் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டில் பயங்கர நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதற்கு 'வெண் கொட்டம்' அல்லது வெள்ளை கொடூர ஆட்சி என்று பெயர். இவர்கள் மிதவாத அரச குடும்பத்தினரையும், கத்தோலிக்கர்களையும் தாக்க முற்பட்டனர். நாடெங்கிலும் கொலையும், கொள்ளையும் தாண்டவமாடின. இந்த நிலை 1816 ம் வருடத் தேர்தல் வரை பிரான்சில் நீடித்தது.

## 2. முடியாட்சியை ஆதரிக்கும் பிரபுக்களின் வலிமை அதிகரித்தல்:

பதினெட்டாம் லூயியின் மிதவாதக் கொள்கைகளை பிரபுக்களும், சமயக் குருமார்களும் எதிர்த்தனர். அவருடைய சீர்திருத்தங்களை விரும்ப வில்லை. பிரான்சில் மீண்டும் எதேச்சதிகார முடியாட்சியை அமைக்கவும், இழந்த தங்கள் உரிமைகளையும், சலுகைகளையும் மீண்டும் பெறவும் நினைத்தனர். புதிய பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற இவர்கள் உயர்குடியாளர் ஆட்சியை அமைக்க திட்டமிட்டனர். மேலும் ஐரோப்பிய அரசியலில் மெட்டர்னிக் வழியே பிரான்சும் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிரான்ஸ் நால்வர் உடன்பாட்டில் சேர்ந்தது. பின் அது ஐவர் உடன்பாடானது.

## 3. பிரெஞ்சு மன்னர் பத்தாம் சார்லஸ் (Charlex X) 1824-30:

1824-ல் 18-லூயி இறந்ததும் அவருடைய சகோதரர் 'கவுண்ட் அர்ட்டாய்' பத்தாம் சார்லஸ் என்ற பெயரில் பிரெஞ்சு மன்னரானார். இவர் ஒரு பிற்போக்குவாதி. இவர்தான் ஜூலை புரட்சிக்கு முக்கிய காரணம். இவருடைய ஆட்சிக் காலத்தில் பிரபுக்களும் குருமார்களும், 18-ம் லூயி வழங்கிய தாராள சீர்திருத்தங்களை அகற்றவும், எதேச்சதிகாரத்தை நிலைநாட்டவும் முயன்றனர். ஆனால் மக்கள் மனதில் புரட்சியின் வடுக்கள் ஆழமாகப் பதிந்திருந்ததால், பத்தாம் சார்லஸின் பிற்போக்குக் கொள்கைகளை ஏற்க மறுத்து, பின்னர் புரட்சியின் மூலம் தூக்கி எறிந்தனர்.

### 4. ''வில்லெல்'' மந்திரி சபை (Villele Ministry):

1821-ல் வில்லெல் தலைமையில் புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டது. அப்போது முடியாட்சியைப் பின்பற்றுகிறவர்கள் அரசாங்கத்தில் ஆதிக்கம் கொண்டிருந்தனர். பிற்போக்கு கொள்கை கொண்ட வில்லெல் மந்திரிசபை 1827 வரை நீடித்தது. அப்போது பத்திரிக்கைத் தணிக்கை முறை அமுல் படுத்தப்பட்டது. மக்களது உரிமைகள் பறிக்கப்பட்டன. மேலும் வில்லெலின் நடவடிக்கைகளால் தொழிலதிபர்கள் ஆத்திரம் அடைந்தனர். நடுத்தரக் குடும்பத்தினர் இன்னலுற்றனர். எனவே இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய தேர்தலுக்கு உத்தரவு இடப்பட்டது.

### 5. மார்டிக்னாக் மந்திரிசபை (Martignac Ministry):

அதன்பின் நடைபெற்ற தேர்தலில் மிதவாதிகள் பெரும்பான்மை பெற்று மார்டிக்னாக் தலைமையில் புதிய மந்திரிசபை அமைத்தனர். இது 1829 வரை நீடித்தது. இந்த அமைச்சரவை எடுத்த நடவடிக்கைகளையும் இயற்றிய சட்டங்களையும் அரசர் எதிர்த்தார். எனவே மார்டிக்னாக் பதவி விலக்கப்பட்டார். புதிய தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது.

### 6. போலிக்னாக் மந்திரிசபை (Polignac Ministry):

முடியாட்சியை ஆதரித்த போலிக்னாக் என்ற பிற்போக்குவாதியின் தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டது. இவர் பாராளுமன்றத்தின் எதிரி. எதேச்சதிகார ஆட்சியில் வழக்கமாகத் தோன்றும் தீமைகள் மீண்டும் தலைதூக்கின. மக்கள் புரட்சியின் போது தாங்கள் அடைந்த உரிமைகளை இழந்து விடுவோமோ என்று பயந்தனர்.

### 7. பத்தாம் சார்லஸின் ஆணவமும் அவர் இயற்றிய அவசரச் சட்டமும்:

நாட்டில் கொந்தளிப்பு அதிகமானதால் போலிக்னாக் மந்திரி சபை கலைக்கப்பட்டது. பாராளுமன்ற பிரதிநிதிகள் சபைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் மிதவாதிகளே பெரும்பான்மை பெற்றனர். எனவே போலிக்னாக்கின் தூண்டுதலின் பேரில் 1830, ஜூலை 25-ம் தேதி மூன்று அவசர அடக்குமுறை ஆணைகளை வெளியிட்டார் பத்தாம் சார்லஸ். அதற்கு ''செயின்ட் கிளௌடு (St. Cloud) ஆணைகள்'' என்று பெயர் அதன்படி.

a) பிரதிநிதிகள் சபை கலைக்கப்பட்டு, புதிய தேர்தல் நடத்த உத்தரவிடப்பட்டது.

1) மக்களின் வாக்குரிமை குறைக்கப்பட்டது.

2) பத்திரிக்கை சுதந்திரம் பறிக்கப்பட்டது.

பத்தாம் சார்லஸின் இந்த ஆணைகள் மக்களுக்கு 18-ம் புரட்சியினால் வழங்கப்பட்ட உரிமைகளின் அப்பட்டமான மீறுதல் ஆகும். எனவே 1830 ஜூலை 28-ல் புதன்கிழமை பாரிசு நகர மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். புரட்சித்தலைவர் லஃபாயட்டின் (Lafayette) தலைமையில் Hotel de ville என்ற இடத்தில் ஒரு தற்காலிக அரசு அமைக்கப்பட்டது. தொழிலாளர்கள், முன்னாள் போர் வீரர்கள் மற்றும் மன்னரின் படைவீரர்கள் மக்களுடன் சேர்ந்துக் கொண்டனர். சுமார் மூன்று நாட்கள் நடைபெற்ற தெருச்சண்டைகளிலும், குழப்பங்களிலும் 300 பேருக்கு மேல் மாண்டனர். பயந்து போன பத்தாம் சார்லஸ் நாட்டை விட்டே ஓடினார். பிரதிநிதிகள் சபை ஜூலை 31-ல் ஆர்லியன்ஸ் வம்சத்தைச் சேர்ந்த "லூயி பிலிப்" (Louis Philippe) என்பவரை "பிரெஞ்சு மக்களின் மன்னராகத்" தேர்ந்தெடுத்தது. அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம் பிரான்சில் அமைக்கப்பட்டது.

## 1830 ஜூலைப் புரட்சியின் முக்கியத்துவம் (விளைவுகள்)

1. அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி பிரான்சில் ஏற்படுத்தப்பட்டது. மக்களுக்கு மீண்டும் உரிமைகள் வழங்கப்பட்டது. செயின்ட் கிளௌட் ஆணைகள் ரத்து செய்யப்பட்டன.

2. மெட்டர்னிக் ஒழித்துக்கட்ட நினைத்த தேசியம், விடுதலை எண்ணம் ஆகியவை உறுதியுடன் நிலை நாட்டப்பட்டன.

3. வியன்னா மாநாடு ஒரு போலிக் கட்டிடம் என்பதனை இப்புரட்சி நிரூபித்தது. பெல்ஜியம் சுதந்திரம் அடைந்தது. ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி ஏற்பட்டது. அது தேசியத்திற்குக் கிடைத்த பெரிய வெற்றியாகும்.

4. மக்களாட்சி முறை வலுப்பெற இப்புரட்சி உதவியது.

5. புரட்சி இயக்கங்கட்கு பிரான்சும் இங்கிலாந்தும் ஆதரவு காட்டியதால், தேசிய விடுதலை இயக்கங்கள் தடையின்றி வளர்ச்சியடைந்தன.

6. இப்புரட்சி "மெட்டர்னிக் திட்டத்திற்கு" கிடைத்த ஒரு பெரிய தோல்வியாகும்.

7. இப்புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

8. மக்களின் "ஆளுமை" அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டன.

## ஐரோப்பாவில் ஜூலைப் புரட்சியின் பிரதிபலிப்புகள்:

### 1. போலந்தில் கிளர்ச்சி:

வியன்னா ஏற்பாட்டிற்குப் பின்னர் ரஷ்யாவின் "முதலாம் அலெக்சாந்தர்" அரசியலமைப்புக்கு உட்பட்டு போலந்தை ஆ... செய்தார் தனி நிர்வாகத்தையும், அதன் தனி ராணுவத்தை... அமைத்திருந்தார் ஆனால் மக்களுக்கு அதிருப்தி இருந்தே வந்தது.

ஆனால் 1825-ல் பதவி ஏற்ற அவரது சகோதரர் "சார் முதலாம் நிக்கோலஸ்" மக்களின் உரிமைகளை நசுக்க முற்பட்டார். எனவே ஜூலைப் புரட்சியைப் பின்பற்றி போலந்திலும் கிளர்ச்சி ஏற்பட்டு ... முழுவதும் பரவியது. வார்சாவில் ஒரு மாகாண ஆட்சியை புரட்சியா... அமைத்தனர். எனவே ரஷ்யப்படைகள் போலந்துக்குள் புகுந்து புரட்சியாளர்களை கொன்று குவித்தது.

சரியான தலைவர் இல்லாததாலும், புரட்சியாளரிடையே கருத்து வேறுபாடு காணப்பட்டதாலும் புரட்சியாளர் சரணடைந்தனர். போலந்து ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. அது தனது தேசியத் தன்மையை இழந்தது. ரஷ்யாவின் ஒரு மாநிலமாக மாற்றப்பட்டது. இவ்வாறு ஜூலைப் புரட்சியினால் போலந்து என்ற ஒரு நாடே இல்லாமல் போய்விட்டது.

### 2. இத்தாலியில் கிளர்ச்சி:

ஜூலைப் புரட்சியின் பிரதிபலிப்பாக இத்தாலியிலுள்ள ரகசியக் கழகங்கள் சுறுசுறுப்படைந்தன. பார்மா, மாடனா, டஸ்கனி ஆகிய பகுதிகளில் ஆஸ்திரிய ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் மெட்டர்னிக்கின் படைகள் புரட்சியை ஒடுக்கின. இதன் மூலம் ஆஸ்திரியாவின் மீது இத்தாலிய மக்களின் வெறுப்பு அதிகமாகியது.

### 3. ஜெர்மனியில் கிளர்ச்சி:

ஜூலைப் புரட்சியைப் பின்பற்றி, வடஜெர்மன் நாடுகளான சாக்ஸனி, ஹனோவர், பிரன்ஸ்விக், ஹெஸ்ஸி ஆகியவற்றிலும், பவேரியா, வூரம்பர்க் போன்ற தென்ஜெர்மன் நாடுகளிலும், மக்கள் புரட்சி செய்து அரசியலமைப்புக்கு உட்பட்ட ஆட்சியை அமைக்க கோரினர். சிற்றரசர்கள் மக்கள் கோரிக்கைகட்கு பணிந்து ஒத்துக்கொண்டனர். ஆனால் மெட்டர்னிக் கார்ல்ஸ்பர்ட் ஆணைகளைப் பயன்படுத்தி புரட்சியை அடக்கி வெற்றி கண்டார்.

## 4. பெல்ஜிய விடுதலைப் போர்:

வியன்னா மாநாடு ஹாலந்து நாட்டுடன் பெல்ஜியத்தை இணைத்தது. இதற்குக் காரணம், பிரான்ஸின் ஆக்கிரமிப்பைத் தடுக்க ஹாலந்து பலப்படுத்தப்பட வேண்டும் என்பதே ஆகும். ஆனால் மொழி, மதம், கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியவற்றில் முற்றிலும் வேறுபட்ட பெல்ஜியம் மக்கள் தாங்கள் பிரிக்கப்பட்டு தனிநாடாக செயல்படவே விரும்பினர். மக்கள் தொகையில் குறைவான ஹாலந்து தங்களை ஆட்சி செய்வதை விரும்பவில்லை. அத்துடன் தங்கள் மீது டச்சுமொழி திணிக்கப்படுவதையும் எதிர்த்தனர்.

இவர்களது விருப்பத்திற்கு மன்னர் முதலாம் வில்லியம் இணங்கவில்லை. எனவே ஜூலைப் புரட்சியின் விளைவாக மக்களும் புரட்சியில் ஈடுபட்டனர். புரட்சிக்கு ஆதரவாக, பிரான்சும் இங்கிலாந்தும் படைகளை அனுப்பி வைத்தன. புரட்சிப்படையினர் வில்லியத்தின் படைகளை விரட்டியடித்தனர். பெல்ஜியப் புரட்சி வெற்றியடைந்தது. பெல்ஜியம் விடுதலை அடைந்தது.

### லண்டன் மாநாடு:

பெல்ஜியத்தின் எதிர்காலம் பற்றி ஆலோசித்து முடிவெடுக்க லண்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. மாநாட்டின் முடிவுப்படி,

a) பெல்ஜியம் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது.

b) அதன் 'நடுநிலை' எல்லா ஐரோப்பிய நாடுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

c) அங்கு அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி அரசு அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பெல்ஜியம் 1831-ல் தனி சுதந்திர நாடாக உருவானது. 'சாக்ஸ்கோ பர்க்' வம்சத்தைச் சேர்ந்த 'லியோபோல்ட்' பெல்ஜிய மன்னரானார். இது தேசியத் தன்மைக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். வியன்னா ஏற்பாட்டிற்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும். மெட்டர்னிக் திட்டத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய மரண அடியாகும். இத்தாலி, ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகளில், பிற்போக்கு சக்திகள் வெற்றி பெற்றாலும், 1830-ம் வருட ஜூலைப் புரட்சி ஐரோப்பிய மக்களின் உரிமைகள் வலிமையடைய பெரிதும் காரணமாக அமைந்தது.

# 3. 1848 ம் வருட பிப்ரவரிப் புரட்சி

## ( FEBRUARY REVOLUTION, 1848 )

1830 ம் வருட ஜூலைப் புரட்சிக்குப் பின்னர் 'லூயி பிலிப்' பிரெஞ்சு அரியணையில் அமர்த்தப்பட்டார். இவருடைய ஆட்சி "ஜூலை முடியாட்சி" என்று அழைக்கப்படுகிறது. இவர் தன்னை "குடிமக்களின் மன்னன்" (Citizen King) என்று அழைக்கப்படுத்திக்கொண்டார். [illegible] [illegible] நாட்டில் மக்களின் [illegible] இறுதியில் புரட்சி ஏற்பட்டது. லூயி பிலிப் [illegible] பிரான்ஸ் இரண்டாம் முறையாக குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டது.

### 1848 பிப்ரவரிப் புரட்சிக்கான காரணங்கள்:

#### 1. கட்சிகளின் எதிர்ப்பு:

லூயி பிலிப்பிற்கு எதிராக பல கட்சிகள் குரல் எழுப்பின. 'லெஜிடிமிஸ்ட்' (Legitimists) கட்சியினர், 'பூர்போன்' பரம்பரையே நாட்டை ஆள வேண்டும் என்று நினைத்தனர். 'போனபார்ட் கட்சியினர்' (Bonapartists) நெப்போலியன் காலத்திய அரசு புதுப்பிக்கப்பட வேண்டும் என்று நினைத்தனர். குடியரசுக் கட்சியினர் (Republicans) முதலில் லூயி பிலிப்பை ஆதரித்தாலும், மேலும் சீர்திருத்தங்கள் செய்யப்படாததால் அதற்கு கலவரம் செய்தனர். இவ்வாறு மக்களிடம் ஒற்றுமை யின்மையும், மனக்கசப்பும், உள்ளக் குமுறலும் ஏற்பட்டது.

#### 2. தொழிலாளர்களிடையே காணப்பட்ட அதிருப்தி:

தொழிற்புரட்சியின் விளைவாக, நாட்டில் தொழில் வளம் பெருகியது. ஆனால் தொழிலாளர்களின் கஷ்டங்கள் அதிகரித்தன. வேலையில்லா பிரச்சனை குறைந்த ஊதியம், தொழிற்சங்க உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் போராடினர். அவர்களின் நன்மைக்காக இதுவரை யாரும் புரட்சி செய்யவில்லை. அவர்கள் நலன்களில் அக்கறைப்படவும் இல்லை. எனவே புதிய சோசலிசக் கொள்கைகள் உருவானது.

### சோசலிச இயக்கத்தின் வளர்ச்சி:

தொழிலாளர்களின் நலன் பேணும் 'சோஷலிஸ்ட் கட்சி' தோன்றியது. தொழில்களின் அமைப்பு, தொழிலாளி முதலாளி உறவு, [illegible] ஆகிய கருத்துக்கள் ஆழமாக விவாதிக்கப்பட்டன. இதனால் ''சோஷலிச இயக்கம்'' ஆரம்பமானது. சோஷலிச இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர்களில் செயின்ட் சைமன், ராபர்ட் ஓவன், லூயி பிளாங் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

**a) செயின்ட் சைமன் (St. Simon)** 1760-1826:

இவருடைய கருத்துக்கள் சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. ''செயல்திறன் மிக்க மனிதனால் சமுதாயத்தை நல்வழிப்படுத்த முடியும். ஏழைகளும், பணக்காரர்களும் ஒன்றுபட்டு உழைத்தால் சமுதாயம் முன்னேறும். தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்தவேண்டும். உழைப்புக் கேற்ற ஊதியம் வேண்டும்'' போன்ற தன் கருத்துக்களை வெளியிட்டார். 'Labour according to capasity and reward according to services' என்ற முறையில்தான் தொழிற்துறை நிறுவனங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்றார். இதனால் ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டது.

**b) ராபர்ட் ஓவன்: (1771-1858)**

'பிரிட்டிஷ் சோசலிச இயக்கத்தின் தந்தை' எனப்படும் ராபர்ட் ஓவன் தொழிலாளர் பிரச்சனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். கூட்டுறவு சங்கங்களின் மூலம் வேலை இல்லாதவர்கட்கு உதவி அளிக்கும் முறையை ஆதரித்தார். இவ்வாறு கூட்டுறவு இயக்கங்களின் வளர்ச்சிக்கு பாடுபட்டார். இவருடைய கருத்துக்கள் பிரெஞ்சு தொழிலாளர்களிடையே பிரபலமாகியது.

**c) லூயி பிளாங் (Louis Blanc):**

லூயி பிளாங் சோசலிச இயக்கத்திற்கு ஓர் திட்டவட்டமான கொள்கையை வகுத்துக் கொடுத்தார். தன்னுடைய ''தொழிலாளர்களின் சீரமைப்பு'' என்ற நூலில் ''ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை செய்யும் உரிமை இருக்கிறது; அந்த உரிமையைக் கொடுப்பதும், பாதுகாப்பதும் அரசங்கத்தின் கடமையாகும்'' என்று குறிப்பிட்டார்.

'அரசாங்கமே முதலீடு செய்து தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அதில் தொழிலாளர்களின் நிர்வாகத்தை ஏற்படுத்தி லாபத்தைப் பிரித்துக் கொள்ளலாம்'' என்றும் கூறினார்.

இக்கருத்துக்கள் பிரெஞ்சு தொழிலாளரிடையே விழிப்பு ஏற்படுத்தியது. தங்கள் பிரச்சனைகளைத் தீர்க்கவும், உரிமை பெறவும் போராடினார் லூயி பிளாங்.

## 4. ஹைசாட் (Guizot):

இவர் 1840-ல் முதல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். அரசனுக்கு ஆலோசகராகவும் செயல்பட்டார். இவர் பதவி ஏற்ற தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் ஒடுக்கப்பட்டன. பழைய சட்டங்க சபைகட்கும் உயிரூட்டினார். நாட்டின் பிரச்சனைகளைப் பற்றி கவலைப்படவில்லை.

அப்போது பிரதிநிதிகள் சபையில் முக்கியத் தலைவர திகழ்ந்தவர்தையர்ஸ்(Thiers) என்பவராவார். இவருக்கும் ஹைசாட்டு பல விஷயங்களில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. தையர்ஸ் சி சிந்தனையாளர். தாராளக் கொள்கைகளை ஆதரித்தார். அரச தன்னாட்சி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். வாக்குரி விரிவுபடுத்தப்பட வேண்டுகோள் விடுத்தார். ஆனால் ஹைசாட் இதை எதிர்த்தார்.

நாட்டில் சட்டமன்ற சீர்திருத்தமும், தேர்தல் முறையிலு வாக்குரிமையிலும் சீர்திருத்தங்கள் கேட்டு 1848-ம் வருட துவக்கத்தி கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் கிளர்ச்சிகளை அதிகப்படுத்து அளவிற்கு ஹைசாட் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். ''மக்களி குறைபாடுகள் கண்மூடித்தனமானவை. அவர்கள் கேட்கும் அரசிய மாற்றங்கள் மாறுபட்ட மனப்பான்மை கொண்டு எழுந்தவை'' என்று பேசினார். இதனால் நாட்டின் எல்லாக் கட்சிகளும் அரசுக்கு எதிரா ஒன்று சேர்ந்தன.

## 3. சீர்திருத்த விருந்தும், பிப்ரவரிப் புரட்சியும் (Reform Banquets):

ஹைசாட்டின் பேச்சிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், ஜனநாயக ரீதியிலான அரசு அமைய வேண்டுமென்றும், வாக்குரிமை விரிவுபடுத்தப்படவும், நாடெங்கிலும் ''சீர்திருத்த விருந்துக்கு'' தையர்சும், அவரின் ஆதரவாளர்களும் ஏற்பாடு செய்தனர்.

இத்தகைய கூட்டம் ஒன்று பாரிசு நகரில் 1848 பிப்ரவரி 22-ம் தேதி நடக்க இருந்தது. ஆனால் இக்கூட்டத்தை அரசு தடைசெய்தது. எனவே கோபமடைந்த பொதுமக்கள் ஹைசாட்டை பதவி விலக்கக் கோரினர். ஹைசாட் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது பாதுகாப்புப் படையினர் சுட்டதில் 23 பேர் கொல்லப்பட்டனர். எனவே

நாட்டில் அமைதி இன்மை ஏற்பட்டது. பல இடங்களில் தீவட்டி ஊர்வலம் நடத்தப்பட்டது.

இச்சூழ்நிலையில் ஹைசாட் பதவி விலகினார். மகிழ்ச்சியடைந்த மக்கள் மன்னரைப் பதவியிலிருந்து விரட்டி பிரான்சில் குடியரசை அமைக்க எண்ணினர். கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்ட படையினரும் மக்களுடன் சேர்ந்து கொண்டனர். எனவே லூயிபிலிப் முடி துறந்து 1848 பிப்ரவரி 24-ல் இங்கிலாந்துக்கு ஓடினார். பிரான்ஸில் "இரண்டாவது குடியரசு" பிரகடனப்படுத்தப்பட்டது.

## 1848-ம் வருட பிப்ரவரி புரட்சியின் பிரதிபலிப்புகள் :

### 1. ஆஸ்திரியாவில் புரட்சி:

பிப்ரவரிப் புரட்சி முதலில் ஆஸ்திரியாவில் எதிரொலித்தது. ஏற்கனவே ஆஸ்திரியாவில் மெட்டர்னிக்கின் அடக்கு முறைக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் கிளர்ச்சிகள் நடைபெற்று வந்தன. இப்போது பிப்ரவரிப் புரட்சியின் தூண்டுதலால் பொஹிமியா, செக்கோஸ் லோவாகியா, ஹங்கேரி ஆகிய பகுதிகளில் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்த மக்கள் பொங்கி எழுந்தனர்.

தொழிலாளர்களும் மாணவர்களும் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டனர். மெட்டர்னிக்கினால் புரட்சியை அடக்க அனுப்பப்பட்ட படை மக்களுடன் சேர்ந்து கொண்டது. நிலைமையை சமாளிக்க முடியாத மெட்டர்னிக் நாட்டை விட்டு ஓடினார். அத்துடன் 'மெட்டர்னிக் சகாப்தமும்' முடிந்தது.

பின்னர் பேரரசர் முதலாம் பெர்டினாண்டு, பொஹிமியாவிலும் ஹங்கேரியிலும் புரட்சி இயக்கங்களை நசுக்கினார். ஆனாலும் சிறுபான்மை இனத்தவர்கட்கு சில உரிமைகளும் நாட்டில் சில சீர்திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன.

### 2. ஜெர்மனியில் புரட்சி:

1848-பிப்ரவரி புரட்சியின் விளைவாக ஜெர்மானிய சிற்றரசுகளிலும் புரட்சி இயக்கம் பரவியது. மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறவும், புதிய அரசியலமைப்பை உருவாக்கவும், ஜெர்மானிய ஐக்கியத்தை ஏற்படுத்தவும் புரட்சியாளர்கள் கோரிக்கை வைத்தனர்.

சாக்ஸனி, ஹனோவர், பவேரியா ஆகிய பகுதிகளில் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. பிரஷ்ய அரசர் பிரடரிக் வில்லியம் ரஷ்ய மன்னரின் உதவியுடன் கிளர்ச்சியை அடக்க முயன்றார்.

ஆனால் கிளர்ச்சி தீவிரமடையவே பல சீர்திருத்தங்களை அறிவித்த தேசியவாதிகள் 1848-ல் 'பிராங்பர்ட்' என்னுமிடத்தில் கூடி, ஜெர்மனிக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்க முயற்சித்தனர். ஆ அரசர் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தார். தேசியவாதிகள் செய்யப்பட்டனர். புரட்சி அடக்கப்பட்டது.

### 3. இத்தாலியில் புரட்சி:

பிப்ரவரிப் புரட்சியின் விளைவாக இத்தாலியிலும் புர தோன்றியது. முதலில் சிசிலி பகுதியில் தோன்றியது. பின் ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டில் உள்ள லம்பார்டி, வெனிஷியா ஆ பகுதிகளில் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆஸ்திரியப் படைக விரட்டியடித்தனர். பீட்மாண்ட் அரசர் மக்களுக்குப் புதிய சலுகைக வழங்கினார். வெனிஷியாவிலும் புதிய குடியரசு நிறுவப்பட்டது.

ஆனால் இத்தாலியப் பகுதிகளில் ஏற்பட்ட புரட்சி இயக்கங்க ஆஸ்திரியத் துருப்புக்கள் அடக்கியது. புரட்சி இயக்கங்கட்கு தலைமை தாங்கிய சார்டீனிய, பீட்மாண்டின் அரசர் ''சார்லஸ் ஆல்பர்ட்'' படைகளை ஆஸ்திரியப் படைகள் தோற்கடித்தது. எனவே அவ முடிதுறந்தார். அவருக்குப்பின் அவர் மகன் இரண்டாம் விக் இம்மானுவேல் பதவி ஏற்றார். இவர் மட்டுமே அரசியலமைப்ப கலைக்க மறுத்தார், பின்னர் இவர் தலைமையில் இத்தாலி ஐக்கியமடை வழிவகுத்தார்.

## 1830, 1848-ம் வருடப் புரட்சிகளைப் பற்றிய ஒப்பீடும் மதிப்பீடும்:

### 1) நோக்கங்கள் வேறுபட்டவை:

1830-ம் வருடப் புரட்சி பத்தாம் சார்லஸின் பிற்போக்கு கொள்கைகளை எதிர்த்து ஏற்பட்ட புரட்சியாகும். அப்புரட் ''முடியாட்சியின் வல்லாட்சி'யைத் தான் எதிர்த்தது. முடியாட்சியை எதிர்க்கவில்லை. எனவேதான் புரட்சியின் முடிவில் 'முடியாட்சியின் வல்லாட்சி ஒழிந்து அரசியலமைப்புக்கு உட்பட்ட முடியாட்சி ஏற்பட்டது.

ஆனால் 1848-ம் வருடப் புரட்சியோ, ஜனநாயகக் கொள்கையுட சேர்ந்த சமதர்ம இயக்கத்தின் புரட்சியாகும். வாக்குரிமையை விரிவுபடுத்தவும், சமுதாயத்தில் சீர்திருத்தம் ஏற்படவும் நடந் புரட்சியாகும். சமதர்மம், குடியாட்சிமுறை இரண்டுமே இப்புரட்சியின் குறிக்கோள்கள் ஆகும். எனவேதான் இப்புரட்சியின் முடிவில் பிரெஞ்

மன்னர் லூயிபிலிப் விரட்டப்பட்டு பிரான்ஸ் நாடு ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

2) இரண்டு புரட்சிகளுமே ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும் எதிரொலித்தது. 1830-ம் வருடப் புரட்சியின் போது அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கங்கள் அமையவே கிளர்ச்சிகள் ஏற்பட்டன. பெல்ஜியத்தில் தேசிய இயக்கம் உருவெடுத்து அது விடுதலை அடைந்தது. பல நாடுகளில் மக்களாட்சியுகம் பிறந்தது.

ஆனால் 1848-ம் வருடப் புரட்சி நடுத்தர வகுப்பினரின் ஆட்சியை ஒழித்து அரசியல் சமத்துவத்தை ஏற்படுத்தியது. வயது வந்தோர் யாவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு குடியரசுக் கொள்கையில் ஒரு புதுயுகம் ஆரம்பமானது. தேசிய உணர்வு பல நாடுகளில் தூண்டிவிடப்பட்டது.


3) மொத்தத்தில் இரண்டு புரட்சிகளுமே தோல்வியடைந்தன. புரட்சியாளர்கள் அடக்கப்பட்டனர். 1830-ம் வருடப் புரட்சியினால் போலந்து என்ற நாடே மறைந்து போனது. 1848-ம் வருடப் புரட்சியின் இறுதியிலும் பிரஷ்யா, சார்டீனியா தவிர மற்ற நாடுகளில் புரட்சியினால் நேரடி பலன் ஏதும் கிட்டவில்லை.

4) இப்புரட்சிகளின் விளைவாக ஐரோப்பிய ஆட்சியாளர்கள் சிலர் அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டனர். இந்த வகையில் பார்க்கும்போது இப்புரட்சியின் அரசியலில் முன்னேற்றக் கருத்துக்களைப் புகுத்தியதாகக் கருதலாம். ஆஸ்திரியாவில் அடிமை வியாபாரம் நிறுத்தப்பட்டது. பிரஷ்யாவிலும், சார்டீனியாவிலும் அரசியலமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஸ்காண்டிநேவிய நாடுகளின் மக்கள் தங்களுக்கென பல உரிமைகள் பெற்றனர். ஹாலந்து சட்ட சபைக்கு அதிக அதிகாரங்கள் கிடைத்தன. சுவிட்சர்லாந்து நாட்டில் மக்களுக்கு அதிக அதிகாரங்கள் உள்ள புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இங்கிலாந்தில் பெரும்பான்மை நடுத்தர வர்க்கத்தினருக்கு வாக்குரிமை வழங்கும் விதத்தில் வாக்காளர் சொந்தமாக வைத்திருக்கும் சொத்தின் அளவு குறைக்கப்பட்டது. கிரேக்க நாடும் பெரும்பான்மை இலத்தீன் அமெரிக்க நாடுகளும் சுதந்திரமடைந்து விட்டன. சுருங்கக் கூறினால் 1830, 1848-ல் நடைபெற்ற புரட்சிகள் தோற்றவைகளாகக் காட்சியளிப்பினும் தேசியப்பற்றும், மக்களாட்சி முறையும் எல்லா எதிர்ப்புகளையும் உடைத்துத் தள்ளி மெதுவாக முன்னேறி வந்தன என்பதே உண்மை.

# 9. மூன்றாம் நெப்போலியன்

## (Napoleon III-1848-1870)

1848-ம் வருடப் பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்னர் பிரான்ஸ் ஒரு குடியரசு நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தற்காலிக அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்த புதிய குடியரசிற்கு அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி 1848 டிசம்பர் 19-ம் தேதி தேர்தல் நடந்தது. அதில் புகழ்பெற்ற நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரரும் ஹாலந்து நாட்டின் மன்னராக நியமிக்கப்பட்ட வருமான லூயி போனபார்ட்டின் புதல்வரான லூயி நெப்போலியன் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். பின்னர் 1852-ல் தன்னை மூன்றாம் நெப்போலியன் என்ற பெயருடன் பேரரசராக மாற்றிக் கொண்டார். அப்போது இவர் ஐரோப்பாவில் மிக அதிக வலிமை பெற்ற அதிகாரம் உடையவராக விளங்கினார். 1870-ம் ஆண்டு வரை பிரான்ஸை ஆண்ட மூன்றாம் நெப்போலியனின் ஆட்சியில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி காணப்பட்டன. 1870-ல் மூன்றாம் நெப்போலியன் வீழ்ச்சியடைந்தார்.



மூன்றாம் நெப்போலியன்

### 1848 பிப்ரவரி புரட்சிக்குப்பின் பிரான்ஸ்:

1848-ம் வருட பிப்ரவரிப் புரட்சிக்குப்பின் அமைக்கப்பட்ட புதிய அரசாங்கத்தில் சமதர்மவாதிகளின் செல்வாக்கு அதிகமாயிருந்தது.

னவே அவர்கள் 'வேலை கேட்பது மக்களின் உரிமை; வேலை கொடுப்பது அரசின் கடமை' என்ற கொள்கையைச் செயல்படுத்தினார்கள். நாடு முழுவதும் பல 'வேலை வாய்ப்பு ஸ்தாபனங்கள்' நிறுவப்பட்டன. ஆனால் இச்செயல்களைக் குடியரசுவாதிகள் எதிர்த்தனர். 1848-ல் ஏப்ரலில் வயது வந்தோருக்கு வாக்குரிமை அடிப்படையில் 'தேசிய சட்டமன்றத்திற்கு' உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சட்டமன்றம் மே 4-ம் தேதி கூடியது. இந்தப் புதிய சட்டமன்றத்தில் குடியரசுவாதிகள் பெரும்பான்மை பெற்றிருந்தனர். எனவே அவர்கள் சமதர்ம வாதிகட்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வெறுப்படைந்த சமதர்ம வாதிகள் 1848, ஜூன் மாதம் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சியைத் தளபதி கெவக்நாக் என்பவர் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார். சமதர்ம இயக்கம் நசுக்கப்பட்ட பின்பு பிரெஞ்சுக் குடியரசுக்குப் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அதன்படி,

a) பிரான்ஸ் நாட்டின் குடியரசுத் தலைவர் நான்கு ஆண்டு காலத்திற்கு மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

b) புதிய சட்டமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்று முடிவானது. இதன் அடிப்படையில் 1848 டிசம்பர் 19-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. குடியரசுக் கட்சியின் சார்பில் தளபதி கெவக்நாக் (General Cavagnac) போட்டியிட்டார். நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரன் மகனும், அப்போது நெப்போலியன் குடும்பத்தில் மூத்த பிரதிநிதியாக இருந்தவருமான லூயி நெப்போலியனும் போட்டியிட்டார்.

## குடியரசுத் தலைவராக லூயி நெப்போலியன்:

தேர்தலில் லூயி நெப்போலியனுக்கு ஆதரவான முறையில் இவர் பெயரே உயர்ந்ததாக இருந்தது. தனது பெரியப்பா மாவீரன் நெப்போலியனைப் போல பிரான்ஸ் நாட்டின் பெருமையை உயர்த்துவார் என்று மக்கள் நம்பினர். அத்துடன் லூயி நெப்போலியன் பலதரப்பட்ட மக்களுக்கும் பல்வேறு வாக்குறுதிகளை வாரி வழங்கியிருந்தார். எனவே பிரெஞ்சு மக்கள் நெப்போலியன் போனபார்ட்டின் பெருமையை மனதில் வைத்துக்கொண்டு லூயி நெப்போலியனுக்கு ஓட்டுப் போட்டுவிட்டனர். இவருக்கு ஐந்தரை மில்லியன் ஓட்டுக்கள் கிடைத்தன. மற்ற எல்லா வேட்பாளர்கட்கும் சேர்த்து இரண்டு மில்லியன் ஓட்டுக்கள் கூட கிடைக்கவில்லை.

## பிரெஞ்சுப் பேரரசராக லூயி நெப்போலியன்:

குடியரசுத் தலைவராக இருந்த லூயி நெப்போலியன் விரைவிலேயே பேரரசரானார். நடைபெற்று முடிந்த தேர்தலில்

குடியரசுக் கட்சியினரின் தோல்வி, மக்கள் குடியரசுக் கொள்கை மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று காட்டுவதாக கருதிய லூயி நெப்போலியன், பிரான்சில் மீண்டும் மன்னராட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டுச் செயல்பட்டார். பிரெஞ்சுக் கத்தோலிக்க மக்களையும், குடியானவர்களையும் திருப்திப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். வயதுவந்தவர்கட்கு வாக்குரிமை அளிப்பதில் முனைப்புடன் ஈடுபட்டார். இதனை சட்டமன்றம் எதிர்த்தது. குடியரசுத் தலைவர் பதவியை இரண்டாம் முறையாகவும் வகிக்க அனுமதிக்குமாறு சட்ட சபையிடம் கோரினார். இதற்கும் சட்டசபை ஆதரவுதர மறுக்கவே 1851-டிசம்பர் 2-ம் தேதி ஒரு திடீர்ப் புரட்சியைத் தோற்றுவித்து எதிர்க்கட்சித் தலைவர்களைச் சிறைப்பிடித்தார். சட்டமன்றத்தைக் கலைத்தார். விக்டர்ஹ்யூகோ, தியர்ஸ் உட்பட ஆயிரக்கணக்கான தலைவர்களை, அரசியல் விரோதிகளை நாடு கடத்தினார்.

அதன்பின் குடியரசுத் தலைவரின் பதவிக் காலத்தைப் பத்தாண்டு காலத்திற்கு நீடிக்கவும், அரசியலமைப்பைத் திருத்தியமைக்கவும் 1851-டிசம்பர் 20-ல் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தினார். இதற்கு ஆதரவாக ஏழரை மில்லியன் மக்கள் வாக்களித்தார்கள். லூயி நெப்போலியனது இந்த வெற்றி மிக உயர்வானதாயும் அதிகாரமிக்கதாயுமிருந்தது. 1852-ஜனவரியில் புதிய அரசியலமைப்பு செயல்படுத்தப்பட்டது. அதன்பின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசப்படுத்திக் கொண்டு, தான் பேரரசராக இருப்பதா இல்லையா என்று மக்களின் இசைவைப் பெற 1852-நவம்பர் 21-ல் வாக்கெடுப்பு நடத்தினார். பேரரசராக ஆவதற்கு ஆதரவாக 78 லட்சம் பேர் வாக்களித்தனர். இரண்டு லட்சத்து மூவாயிரம் பேரே எதிராக வாக்களித்தனர். எனவே லூயி நெப்போலியன் 'பேரரசர் மூன்றாம் நெப்போலியன்' என்ற பெயருடன் 1852-டிசம்பர் 2-ம் தேதி முடிசூட்டிக் கொண்டார். இவ்வாறு பிரான்சில் குடியரசு மறைந்து இரண்டாவது பேரரசு உதயமானது. மூன்றாம் நெப்போலியன் பதினெட்டு ஆண்டுகள் (1852-1870) பிரெஞ்சுப் பேரரசராக ஆட்சி புரிந்தார்.

## மூன்றாம் நெப்போலியனின் உள்நாட்டுக் கொள்கை:

மூன்றாம் நெப்போலியன் ஒரு சிறந்த ராஜதந்திரி. தான் பேரரசராக ஆவதற்குக் காரணம் நெப்போலியன் போனபார்ட்டின் சகோதரன் மகன் என்ற தகுதி மட்டுமே இருந்ததுதான் என்பதனை நன்றாக உணர்ந்திருந்தார். மேலும் மக்கள் தன்னிடம் விருவிருப்பான ஆட்சியையும் எதிர்பார்க்கிறார்கள் என்றும் உணர்ந்தார். எனவே எதேச்சதிகாரமாக நடந்து கொண்டாலும், மக்களின் நன்மைக்காகவும் பிரான்ஸ் நாட்டின் புகழுக்காகவும், துணிச்சல் மிக்க, வெற்றி நோக்குடைய கொள்கைகளைப் பின்பற்றினார்.

### 1. புதிய அரசியலமைப்பு:

மூன்றாம் நெப்போலியனால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் மன்னரின் அதிகாரமே மேலோங்கி இருந்தது. சட்டமன்றத்திற்கு உண்மையான அதிகாரம் இல்லை. மந்திரிகளை அரசரே நியமித்தார். அரசியலமைப்பிற்கு உட்பட்ட அரசாங்கம் போலத் தோன்றினாலும் அதிகாரங்கள் அனைத்தும் அரசரின் கையிலேயே இருந்தது. ஆனால் மக்கள் கண்டனக் குரல் எழுப்பவே 1860-க்குப் பிறகு அரசியலமைப்பில் தாராளப் போக்குடைய மாற்றங்களைச் செய்தார்.

### 2. கிறிஸ்தவ சபைகட்குச் சலுகை:

மூன்றாம் நெப்போலியன் அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் தொடர்பு உண்டாக்க விரும்பினார். கத்தோலிக்கத் திருச்சபைகள் ஊக்குவிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசாங்கப் பள்ளிகளின் மீது திருச்சபையின் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது.

### 3. தொழில் வளர்ச்சி:

தொழில்துறை வளர்ச்சிக்கு மூன்றாம் நெப்போலியன் ஆதரவு அளித்தார். தொழில் அபிவிருத்திக்காக குறைந்த வட்டிக்குக் கடன் வழங்கவும் தவணை முறையில் திருப்பிச் செலுத்தப்படவும் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

### 4. தொழிலாளர்கட்கு வசதி:

தொழிலாளர்களின் நலன் பேணிப் பாதுகாக்கப்பட்டது. வயோதிக காலத்திலும் விபத்தின்போதும் தொழிலாளர்கட்குப் பாதுகாப்பு அளிக்க இன்ஷூரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவர்களுக்காக தொழிலாளர் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டது. முதலாளி-தொழிலாளி பிரச்சினையைத் தீர்க்க சமரசக் கழகம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன.

### 5. விவசாயம், வாணிபம்:

நாட்டில் விவசாயத்தையும் வாணிபத்தையும் பெருக்க மூன்றாம் நெப்போலியன் நடவடிக்கைகளை மேற்கொண்டார். விவசாயிகட்குக் கடன் வழங்கும் சங்கங்கள் நிறுவப்பட்டன. பாரிசிலும் வேறுசில மாகாணங்களிலும் நில வங்கிகள் அமைக்கப்பட்டன. விவசாயக் கழகங்கள் விரிவுபடுத்தப்பட்டன. சதுப்பு நிலங்கள் சாகுபடிக்குக்

கொண்டு வரப்பட்டன. இதனால் விவசாய உற்பத்தி பெருகியது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் வியாபார ஒப்பந்தம் செய்யப்பட்டது. அயல்நாட்டு வாணிபம் செழிப்பதற்காக 'பிரெஞ்சு அட்லாண்டிக் கம்பெனி' என்ற அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதார நிலை உயர்ந்தது.

**6. போக்குவரத்து:**

மூன்றாம் நெப்போலியன் காலத்தில் பிரான்சில் போக்குவரத்து வசதி அதிகரிக்கப்பட்டது. துறைமுகங்கள் விரிவாக்கப்பட்டன. புதிய கால்வாய்கள் வெட்டப்பட்டது. இரயில் பாதைகள் விரிவுபடுத்தப்பட்டன. இதனால் தொழில் நகரங்கட்கு மூலப்பொருட்கள் வேகமாகவும் எளிதாகவும் கொண்டு செல்ல வசதி ஏற்பட்டது. தபால், தந்தி துறையும் வளர்ச்சியடைந்தது.

**7. பாரிசு நகரத்தின் வளர்ச்சி:**

பாரிசு நகரில் புதுமை அம்சங்கள் கொண்ட, கலைத்திறனுடன் கூடிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. சுகாதார வசதிகள் அதிகப்படுத்தப்பட்டது. நகரமே புதுமைக் கோலம் பெற்றது. ஐரோப்பாவிலேயே அழகுமிக்க நகரம் என்ற பெயர் பெற்றது. பாரிசு ஐரோப்பிய நாகரிகத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தது.

## மூன்றாம் நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கை:

**நோக்கங்கள்:**

1. நெப்போலியன் போனபார்ட்டைப் போல புகழடையவும், அவர் அடைந்த உன்னதமான நிலையைத் தானும் அடையவும் விருப்பம் கொண்டார். அவர் விட்டுச் சென்ற அரும்பணிகளைத் தொடர்வதும், பிரெஞ்சுப் புரட்சியின் பெரும் லட்சியங்களை அடைவதுமே தன் நோக்கம் என்றார் மூன்றாம் நெப்போலியன்.

2. பிரான்சு நாட்டிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்ட தேசிய உணர்ச்சியை மதிக்கவும் அதன் வெற்றிக்காக உழைக்கவும் விரும்பினார்.

3. வியன்னா மாநாட்டின் ஏற்பாடுகளை உடைத்து அதனைத் தோல்வியடையச் செய்ய நினைத்தார்.

4. பிரான்ஸ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் வாணிபத்திற்கும் வசதியாக குடியேற்றப் பகுதிகளை பிரான்சுக்கு ஏற்படுத்த நினைத்தார்.

5. நெப்போலியன் போனபார்ட்டின் தோல்விக்குக் காரணம் அவர் இங்கிலாந்தை விரோதித்துக் கொண்டார் என்பதால், தானும் அந்தத் தவறைச் செய்யாமல் இங்கிலாந்துடன் நட்புடன் இருக்க நினைத்தார்.

6. ரஷ்யாவின் முதலாம் சார் நிக்கோலஸ் மூன்றாம் நெப்போலியனின் பதவியை அங்கீகரிக்கவில்லை. மேலும் ரஷ்யா தான் நெப்போலியன் போனபார்ட்டின் தோல்விக்குக் காரணம் என்று நினைத்து ரஷ்யாவை வெறுத்தார். அதற்காக வஞ்சம் தீர்க்கவும் எண்ணினார்.

## வெளிநாட்டுக் கொள்கையின் செயல் உருவம்:

மேற்கண்ட நோக்கங்களின் அடிப்படையில் மூன்றாம் நெப்போலியன் தனது வெளிநாட்டுக் கொள்கையை அமைத்துக் கொண்டார். முதலில் விருவிருப்பான சில வெற்றிகள் கிடைத்தது. இவரது சில வெளிநாட்டு நடவடிக்கைகள் வினோதமாகவும், நிலையற்றதாகவும் நாணயமற்றதாகவும் இருந்தது. எனவே இறுதியில் அவருடைய கொள்கைகள் நாட்டை அழிவிலும், அவமானத்திலும் கொண்டுபோய்விட்டது.

### 1. கிருமியப்போர் (1854-56):

துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த பாலஸ்தீனத்திலுள்ள கிறிஸ்தவப் புண்ணியஸ்தலங்களைப் பாதுகாப்பது குறித்து துருக்கிக்கும் ரஷ்யாவிற்கு மிடையே எழுந்த பிரச்சனையில் மூன்றாம் நெப்போலியன் தலையிட்டார். இந்த விவகாரத்தில் ரஷ்யாவின் தலையீட்டை வெறுத்தார். காரணம் இதனால் ரஷ்யாவின் செல்வாக்கும், பலமும் வளரக்கூடும் என்று பயந்தார். மேலும் இதில் தலையிடுவதன் மூலம் பிரான்சிலுள்ள கத்தோலிக்கர்களின் நல்லெண்ணத்தைப் பெறலாம் என்றும், நெப்போலியன் போனபார்ட் ரஷ்யாவில் அடைந்த தோல்விக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் நினைத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, வீரம் பொருந்திய இராணுவச் செயலைச் செய்வதின் மூலம் தனது அதிகாரம் புகழ்டையும் என்ற எண்ணத்துடன் கிருமியப் போரில் கலந்துகொண்டார்.

ரஷ்யா கப்பற்படை ஒன்றை அனுப்பி வாலாச்சியா மோல்டேவியா ஆகிய துருக்கியப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன் போர் ஆரம்பித்தது. துருக்கிக்கு ஆதரவாக இங்கிலாந்தும் பிரான்சும் தங்கள் படையை அனுப்பின. இதனால் போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டது. 1856-மார்ச் 3-ம் தேதி மூன்றாம் நெப்போலியன் தலைமையில் பாரிசில் 'அமைதி மாநாடு' கூட்டப்பட்டது. அதன் முடிவில் பாரிசு உடன்படிக்கை கையெழுத்தானது. இப்போரினால் பிரான்ஸ் ஒரு லாபத்தையும்

அடையாமலிருந்தாலும், மூன்றாம் நெப்போலியனின் பெருமை உயர்ந்தது. மக்கள் மத்தியில் அவர் செல்வாக்கு அதிகமானது.

## 2. மூன்றாம் நெப்போலியனும் இத்தாலிய இணைவும்:

ஐரோப்பாவில் தோன்றிய தேசிய இயக்கங்கட்கு மூன்றாம் நெப்போலியன் முழு ஆதரவு அளித்தார். அப்போது இத்தாலியில் தோன்றிய தேசிய இயக்கத்திற்கு உதவ எண்ணினார். இத்தாலியின் சுதந்திர இயக்கத்தில் உண்மையான இரக்கம் நெப்போலியனிடமிருந்தது. அதனுடன் பிரான்சின் அதிகாரத்தையும், தனது அரசியல் தந்திர திறமையையும் வெளிக்காட்ட இதனை சிறந்த வாய்ப்பாக எடுத்துக் கொள்ள ஆவலுள்ளவராக இருந்தார். 1858, ஜூலையில் இத்தாலிய இணைவிற்குப் பாடுபட்ட கவுண்ட்கவூருடன் மறைவானதும் புகழ்பெற்றதுமான பிளாம்பியர்ஸ் சந்திப்பை மேற்கொண்டார். அந்த சந்திப்பின் போது மத்திய, வட இத்தாலியிலிருந்து ஆஸ்திரியரை விரட்ட இரண்டு லட்சம் வீரர்களைக் கொண்ட படையை அனுப்பி உதவி செய்வதாகவும் அதற்குப் பதிலாக நைஸ், செவாய் ஆகிய பகுதிகளைப் பெற்றுக் கொள்வதாகவும் கவூருடன் 'பிளாம்பியர்ஸ் உடன்படிக்கை' செய்துகொண்டார்.

மூன்றாம் நெப்போலியனின் உதவியுடன் இத்தாலியர் மெகன்டோ, சால்வரினோ ஆகிய இடங்களில் ஆஸ்திரியர்களைத் தோற்கடித்தனர். லம்பார்டியிலிருந்து ஆஸ்திரியா விரட்டப்பட்டது. இச்சூழ்நிலையில் பிரஷ்யா இப்போரில் தலையிடும் அபாயம் ஏற்பட்டுவிடும் என்று பயந்து திடீரென ஆஸ்திரிய அரசர் பிரான்சிஸ் ஜோசப்புடன் 'வில்லா பிரரங்கா' என்ற இடத்தில் உடன்பாடு செய்துகொண்டு போரை முடித்துக் கொண்டார் மூன்றாம் நெப்போலியன். இவ்வாறு அரைகுறையாக உதவியது, இத்தாலியர்கட்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மேலும் தம் ஒப்பந்தத்தின்படி முழுமையான உதவி அளிக்காமலிருந்தும் அதற்கு ஈடாகப் பேசிய செவாய் நைஸ் ஆகிய பகுதிகளைத் தமக்கு கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தி நெப்போலியன் பெற்றுக்கொண்டதும் இத்தாலியர்கட்கு கடுங்கோபத்தை அளித்தது. மூன்றாம் நெப்போலியனின் இச்செயலை இத்தாலியர்களுக்கு இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகம் என்று கூறி சினங்கொண்டார் கவுண்ட்கவூர். இங்கிலாந்தும் நெப்போலியனின் இச்செயலை வெறுத்தது. மூன்றாம் நெப்போலியனின் ஒழுங்கற்ற நிலையற்ற வெளிநாட்டுக் கொள்கைக்கு இதுவே சான்று ஆகும்.

## 3. குடியேற்றங்களை அமைத்தல்:

பிரான்ஸ் நாட்டிற்குக் குடியேற்றங்களைப் பெறுவதில் மிகவும் அக்கறை கொண்டார். மேற்கு ஆப்பிரிக்க நாடான அல்ஜீரியாவை

பிரான்சின் ஆதிக்கத்திற்குட்படுத்தினார். இந்தோசீனாவில் 1857-ல் குடியேற்றம் அமைக்க பிரெஞ்சுப் படைகளை அனுப்பினார். 1863-ல் கம்போடியா பிரெஞ்சுக் குடியேற்றம் ஆனது. மேலும் சீனாவுக்குப் பிரெஞ்சுத் துருப்புக்களை அனுப்பி அங்கு வியாபார மத உரிமைகளை 1860-ல் டீன்ஸ்டின் (Tienstin) உடன்படிக்கைப்படி பெற்றார்.

## 4. மூன்றாம் நெப்போலியனும், போலந்துப் புரட்சியும்:

1863-ல் போலந்தில் ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் பெரும் புரட்சி செய்தனர். தங்களுக்கு உதவி செய்யுமாறு புரட்சிக்காரர்கள் நெப்போலியனைக் கேட்டுக்கொண்டனர். போலந்தில் கத்தோலிக்க மக்களே அதிகம் என்பதால் முதலில் புரட்சிக்காரர்கட்கு உதவிசெய்ய நினைத்தார். ஆனால் அப்படி உதவினால் ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகளுடன் போர் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டு விடலாம் என்று பயந்தார். எனவே போலந்துப் புரட்சியாளர்கட்கு ஆதரவாக சார் இரண்டாம் அலெக்ஸாந்தருக்கு ஒரு கடிதம் எழுதியதுடன் நிறுத்திக் கொண்டார். போலந்துப் புரட்சியாளர்கள் ரஷ்யாவில் கொடூரமாக நசுக்கப்பட்டனர். போலந்துக்குப் பரிவு காட்டியதால் ரஷ்யாவின் வெறுப்பையும் கோழைத்தனமாக இவர் நடந்து கொண்டதால் பிரெஞ்சுக் கத்தோலிக்கர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார்.

## 5. மெக்ஸிகோ விவாகாரத்தில் தலையீடு:

தனது இத்தாலியக் கொள்கையினால் இழந்த புகழை மீண்டும் பெற அசட்டுத்தனமாக ஒரு காரியத்தில் இறங்கினார் மூன்றாம் நெப்போலியன். 1863-ல் அவர் புதுமையான மெக்ஸிகோத் துணிகரச் செயலில் ஈடுபட்டார். இதன் மூலம் மக்கள் ஆதரவைப் பெறமுடியும் என்று நம்பினார். ஸ்பெயின் நாட்டிடமிருந்து விடுதலையடைந்த மெக்ஸிகோ தான் கடன்பட்ட நாடுகட்குக் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் உள்நாட்டில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட புரட்சிகளால் தொல்லையுற்றிருந்தது. கடனை வசூல் செய்வதற்காக இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாக ஆக்கிரமிப்பதாக இருந்தது. ஆனால் இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஆக்கிரமிப்புச் செயலிலிருந்து விலகிச் சென்றன. ஆனால் மூன்றாம் நெப்போலியனின் ராணுவ நடவடிக்கை மூலம் மெக்ஸிகோவில் நேரடியாகத் தலையிட்டார். இது வெறி கொண்டதும், பகட்டானதுமான ஒரு திட்டமாகும்.

1863-ல் ஒரு பிரெஞ்சுப் படையை மெக்ஸிகோவிற்கு அனுப்பி அந்நாட்டைக் கைப்பற்றினார் மூன்றாம் நெப்போலியன். மெக்ஸிகோ அதிபர் 'பெனிட்டோஜ்வாரஸ்' நாட்டைவிட்டே ஓடினார். மெக்ஸிகோ

ஒரு குடியாக நாடாக அறிவிக்கப்பட்டது. ஆஸ்திரியப் பேரரசரின் சகோதரரான 'மாக்ஸிமிலியன்' என்பவரை மெக்ஸிகோ பேரரசராக்கினார் மூன்றாம் நெப்போலியன். ஆனால் இந்த ஏற்பாட்டை மெக்ஸிகோ மக்கள் சிறிதும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே புதிய அரசை எதிர்த்துப் போராட ஆரம்பித்தனர். கொரில்லாப்போர் முறையால் பிரெஞ்சுப் படைகள் அல்லல்பட்டன.

இச்சூழ்நிலையில் அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் முடிந்து அங்கு சமாதானம் ஏற்பட்டது. மன்றோக் கோட்பாட்டின் அடிப்படையில் அன்னியத் துருப்புக்கள் அமெரிக்க மண்ணிலிருந்து வெளியேற வேண்டுமென்று அமெரிக்கா கேட்டுக் கொண்டது. இதனால் மெக்ஸிகோவிலிருந்து பிரெஞ்சுப் படைகள் திருப்பி அழைக்கப்பட்டன. நெப்போலியனால் கைவிடப்பட்ட மாக்ஸிமிலியன், புரட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார். நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கை இங்கும் படுதோல்வி அடைந்தது. மூன்றாம் நெப்போலியனின் மெக்ஸிகோ துணிகரச் செயல் அவர் பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தியது. பெரும் அவமானமடைந்தார். நாட்டிற்குப் பெரும் பொருள் இழப்பு ஏற்பட்டது. பிரான்சின் கௌரவம் மிகவும் பாதிக்கப்பட்டது.

## 6. பிராங்கோ பிரஷ்யப் போரும் நெப்போலியனின் வீழ்ச்சியும்

ஐரோப்பாவில் பிரஷ்யாவின் வலிமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. புராட்டஸ்தாந்து நாடான பிரஷ்யா வலிமையடைந்தால் தங்கள் நாட்டிற்கு ஆபத்து என்று பிரெஞ்சு கத்தோலிக்க மக்கள் பயந்தனர். ஜெர்மானியக் கூட்டமைப்பிலிருந்து பிரான்ஸின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைப் பெற பிரஷ்யா முயற்சித்தது. இச்சூழ்நிலையில் தனது தோல்விகளைத் திசை திருப்ப ஒரு போர் அவசியம் என்பதனை மூன்றாம் நெப்போலியன் உணர்ந்தார். போரில் வெற்றி பெறுவது வாயிலாக வீழ்ச்சியடைந்துவரும் தனது அதிகாரத்தை நிலையான அடிப்படையில் நிலை நிறுத்தலாம் என மூன்றாம் நெப்போலியன் எண்ணினார்.

இச்சூழ்நிலையில் ஸ்பானிய அரியணை குறித்து பிரஷ்யாவிற்கும் பிரான்சிற்குமிடையே பகைமை ஏற்பட்டு அதன் விளைவாக போர் ஏற்பட்டது. (ஜெர்மானிய இணைவில் விரிவாகத் தரப்பட்டுள்ளது). போரில் பிரெஞ்சுப்படைகள் 'செடான்' போர்க்களத்தில் பிரஷ்யப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. 1870, செப்டம்பர் 1-ம் தேதி பதினேழாயிரம் வீரர்களை இழந்தபின் 1,04,000 வீரர்களுடன் மூன்றாம் நெப்போலியன் பிரஷ்யப் படைகளிடம் சரணடைந்தார். பிரான்சில்

அடால்ப் தியர்சின் (Adolphe Thiers) தலைமையில் மூன்றாவது குடியரசு நிறுவப்பட்டது.

**மதிப்பீடு:**

நெப்போலியன் போனபர்ட்டின் புகழால் உயர்ந்த மூன்றாம் நெப்போலியன் திறமையற்றவராகக் காணப்பட்டார். நெப்போலியன் போனபார்ட்டிடம் காணப்பட்ட மன உறுதியும், அரசியல் தெளிவும், பிடிவாத குணமும் இவரிடம் காணப்படவில்லை. அத்துடன் அரசியல், சமூகம் ஆகியவைகளில் அவருக்கிருந்த பரந்த நோக்கும் இராணுவ அறிவாற்றலும் இவரிடம் சிறிதளவும் இல்லை. சில நேரங்களில் மட்டுமே இவரது கனவுகள் நனவானதுடன் அரசியல் தந்திரம், அரசியல் வல்லமை ஆகிய இவைகளில் இவரது அறிவாற்றல் ஒளி வீசியது.

மூன்றாம் நெப்போலியனின் திட்டங்கள் ஒழுங்கற்றதாகவும் கொள்கைகள் உறுதியற்றதாகவும் காணப்பட்டன. தாராளக் கொள்கைகளை உடையவராக இருந்தாலும் அனைத்து மக்களின் ஆதரவை இவரால் பெற முடியவில்லை. வெளிநாட்டுக் கொள்கையில் தனது ராஜதந்திரமற்ற நடவடிக்கைகளால் தோல்வியடைந்தார். கடைசிவரை புரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும் முடியாத ஒரு புதிராகவே இருந்தார். தன்னுடைய நிலையற்ற, நாணயமற்ற கொள்கைகளாலும், உலகின் உண்மைகள் சாத்தியக் கூறுகள் இவற்றைப் பற்றித் தேவையான அளவு புரிந்துகொள்ளாததாலும் இறுதியில் மூன்றாம் நெப்போலியன் வீழ்ச்சியடைந்தார்.

# 10. இத்தாலிய இணைவு

## (UNIFICATION OF ITALY)

பழங்கால இத்தாலி ரோமானியப் பேரரசின் கீழ் ஒன்றாக இணைந்த ஒரே நாடாக விளங்கியது. ஆனால் மத்திய காலத்தில் அது பல மாகாணங்களாகப் பிரிந்து கிடந்தது. நெப்போலியன் போனபார்ட் தன்னுடைய படையெடுப்புகளின் மூலம் இத்தாலிய மாகாணங்களைக் கைப்பற்றி ஓரளவு ஒற்றுமைப்படுத்தி வைத்திருந்தார். ஆனால் 1815-ம் வருட வியன்னா மாநாடு இத்தாலியைக் கீழ்க்கண்டபடி மீண்டும் துண்டு துண்டாகப் பிரித்து அதன் ஐக்கியத்தைக் குலைத்துப் போட்டது. தேசிய உணர்வை நசுக்கியது.

a) சார்டீனியா, பீட்மாண்ட் ஆகிய இரண்டு பகுதிகள் இத்தா... சிற்றரசரான முதலாம் விக்டர் இமானுவேலிடம் கொடுக்கப்பட்டது.

b) லம்பார்டி, வெனிஷியா, இல்லீரியா ஆகிய பகுதிகள் ஆஸ்திரியப் பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டது.

c) பார்மா, மாடனா, டஸ்கனி ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவின் மறைமுக ஆதிக்கத்தின்கீழ் வைக்கப்பட்டது.

d) நேப்பிள்ஸ், சிசிலி ஆகிய பகுதிகள் பூர்போன் சிற்றரசர்களிடம் கொடுக்கப்பட்டது.

e) போப்பின் பகுதிகள், ரொமாக்னோ ஆகியவை போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது.

இவ்வாறு இத்தாலியில் அந்நிய ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டது. இத்தாலி என்பது ஒரு 'நிலவியல் சொல்லாகவே' (Geographical expression) இருந்தது. ஆனால் இப்பகுதிகளில் இத்தாலிய தேசப்பற்று வீழ்ச்சியுறவில்லை. ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை இத்தாலிய மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1848-க்குப் பிறகு நடைபெற்ற பல நிகழ்ச்சிகளின் விளைவாக இத்தாலியப் பகுதிகள் எல்லாம் ஒன்றாக இணைந்து ஒரே நாடானது.

## இத்தாலிய இணைவிற்கு இருந்த தடைகள்:

இத்தாலியப் பகுதிகள் மீதுஇருந்த ஆஸ்திரியாவின் ஆதிக்கமே இத்தாலிய இணைவிற்கு மிகப்பெரிய தடையாக இருந்தது. 1830, 1848-ம் வருடப் புரட்சிகளின் பிரதிபலிப்புகள் இத்தாலியிலும் காணப்பட்டன. ஆனால் ஆஸ்திரியாவின் சான்சலர் மெட்டர்னிக்கின் படைகள் புரட்சியாளர்களை அடக்கின. புரட்சிகள் தோல்வியடைந்தன. எனவே இத்தாலி இணைய வேண்டுமானால் இத்தாலியில் அந்நியர் ஆதிக்கம் குறிப்பாக ஆஸ்திரியாவின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும். ஏனெனில் ஆஸ்திரியாவின் பிற்போக்கு சக்தி இத்தாலியில் உறுதியாக வேரூன்றியிருந்தது. எனவே இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

## இத்தாலிய இணைவு ஏற்படுவதற்கான காரணங்கள்:

இத்தாலியிலிருந்த அந்நிய அரசுகள் புரட்சி இயக்கங்களையும் தேசியக் கருத்துக் கொண்டவர்களையும் அடக்க முற்பட்டன. முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் பட்டார்கள். மெட்டர்னிக்கின் பிற்போக்கு ரதம் இத்தாலியின்

தலையையும், வாலையும் நசுக்கிப்போட்டது. ஆனாலும் தேசிய உணர்வு மக்களிடம் சிறிதுசிறிதாக வளர்ந்து வந்தது. விழிப்புணர்வு ஏற்பட்டது. தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த அவர்களிடம் தீவிர உணர்ச்சி ஏற்பட்டது. மேற்கண்ட காரணங்கள் இத்தாலிய இணைவு ஏற்பட வழிவகுத்தன.

### 1. கார்பொனாரி (Carbonari):

நாட்டின் ஒருமைப்பாட்டை உருவாக்கவும், அடக்குமுறை ஆட்சியை விரட்டவும் இத்தாலியில் பல இரகசியக் கழகங்கள் அமைக்கப்பட்டன. அவைகள் தேசியமும் விடுதலையும் கோரி கிளர்ச்சி செய்தன. அவைகளில் ஒன்று தான் 'கார்பொனாரி, என்ற ரகசியக் கழகமாகும். இக்கழகம் முதன் முதலில் 1820-ல் நேப்பிள்ஸ் நகரிலும் 1821-ல் பியட்மாண்டிலும் நடைபெற்ற புரட்சிகளுக்குப் பெரிதும் துணைபுரிந்தது. அந்நியர் ஆதிக்கத்தை இத்தாலியிலிருந்து அகற்றுவது, நாட்டை ஐக்கியப்படுத்தி அரசியல் சுதந்திரம் பெறுவது ஆகியவையே இதன் முக்கியப் பணி ஆகும். விடுதலை எண்ணம் கொண்ட வீரமிக்க இளைஞர்கள் இக்கழகத்தில் அதிகமாகச் சேர்ந்தார்கள். இக்கழகத்தின் கிளைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன.

### 2. இத்தாலியத் தத்துவ ஞானிகளும், கவிஞர்களும்:

இத்தாலிய தேசிய சுதந்திரப் போராட்டத்திற்கு இலக்கியமும் துணை புரிந்தது. இத்தாலியத் தத்துவ ஞானிகளும், கவிஞர்களும் மக்களிடையே புரட்சிக் கருத்துக்களைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றினார்கள். இத்தாலிய ஐக்கியம் ஏற்படும் முன்பு மக்கள் அனைவரும் ஒருமித்த அரசியல் கருத்துக்களை கொண்டிருக்க வேண்டுமென்று மஜினி, கியோபெர்ட்டி, டிசாங்டிஸ் ஆகியோர் விரும்பினர். மான்சோரி (Manzori) என்பவர். ஐ பிராமசி சோசி (I PROMESI SOSSI) என்ற நூலிலும், ஸில்வியோ பெல்லிஸ் (SILVIO PELLICE) என்ற தனது சுயசரிதையிலும் மக்கள் மனதில் தேசிய உணர்வை ஏற்படுத்தும் விதமாக எழுதினார். நாவலாசிரியரான விக்டர்ஹ்யூகோ (VICTOR HUGO) தனது நாவல்கள் மூலமாக குடியரசுக் கொள்கைகளைப் பரப்பினார்.

### 3. ரிஸ் ஆர்க்கிமென்டோ (Risorgimento):

இத்தாலியக் கவிஞர்களும் எழுத்தாளர்களும் தங்கள் கருத்துக்கள் மூலம் மக்கள் மனதில் தேசிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். அதன் மூலம் இத்தாலியில் ஒரு 'புத்துயிர்ப்பு' இயக்கம் தோன்றியது. இத்தாலியில் வேகமாக வளர்ந்துவந்த தேசிய இயக்கம் முழுவதுமே, "ரிஸ் ஆர்க்கிமென்டோ" அல்லது புத்துயிர்ப்பு என்ற சொல்லால் குறிக்கப் படுகிறது. 1847-ல் கவுண்ட்கவூர் ரிஸ்ஆர்க்கிமென்டோ என்ற பெயரில் ஒரு பத்திரிக்கையை ஆரம்பித்து தேசியக் கருத்துக்களைப் பரப்பினார். ரிஸ் ஆர்க்கிமென்டோ என்ற சொல் 'இத்தாலிய மக்களின் பழங்காலப்

பெருமைகளையும், ரோமானியப் பேரரசின் புகழைய பண்பாட்டையும், கவிஞர் தாந்தே (Dante) யின் பாடல்களையும் மறுமலர்ச்சிக்கான கலை, விஞ்ஞான வளர்ச்சியையும், மக்களுக் நினைவூட்டியது. இந்த எண்ணங்களின் அடிப்படையில் அரசிய ஒற்றுமையை தற்போது ஏற்படுத்த மக்கள் ஆர்வம் கொண்டனர்.



ஜோசப் மஜினி

## 4. ஜோசப் மஜினியின் தூண்டுதல்

**(Joseph Mazzini,(1805-1875)**

இவர் ஒரு சிறந்த சிந்தனையாளர், ஜெனோவா நகரவாசியான மஜினி, இத்தாலியின் ஒற்றுமையின்மையையும், நாட்டின் சீரழிந்த நிலையினையும் கண்டு கருஞ்சட்டை அணிந்து கொண்டார். இளமையில் கார்பொனாரி கழகத்தில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றினார். இவர் ஆஸ்திரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் நாடு கடத்தப்பட்டார். இவருடைய நோக்கம் 'இத்தாலி இணைக்கப்பட்டு, சுதந்திர நாடாக ஆவது எவ்வளவு முக்கியமோ அதுபோல இத்தாலி ஒரு ஜனநாயக குடியரசு நாடாகவும் ஆவது முக்கியம்' என்பதாகும். தாய்நாட்டின் விடுதலைக்காக ஒவ்வொருவரும் போராடக் கடமைப் பட்டவர்கள் என்று கூறினார். இவர் 1831-ம் வருடத்தில் 'மார்சிலஸ்' (Marseilles) என்ற இடத்தில் 'இளம் இத்தாலிய இயக்கம்' ஒன்றை ஆரம்பித்தார். இரண்டு வருடத்தில் அதில் 60,000 உறுப்பினர்கள் சேர்ந்தார்கள்.

## 5. இளம் இத்தாலிய இயக்கம் (Young Italy movement):

ஜோசப் மஜினியினால் 1831-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் தீவிரவாதத் தன்மை கொண்டது. இதன் நோக்கங்கள் பின்வருமாறு:

a) இத்தாலிய மக்களிடையே ஒற்றுமை, தேசியம் ஆகிய ...யங்களைப் பரப்புதல்.

b) அந்நிய நாடுகளின் ஆதிக்கத்தை ஒழித்து இத்தாலியை ...ணைத்தல்

c) நாட்டிற்காகத் தியாகம் செய்யும் உணர்வை மக்களிடம் ...த்தல்.

d) மக்களிடையே கல்வி அறிவை ஊட்டி நாட்டின் பழங்காலப் ...மையையும், தற்போதையச் சிறுமையையும் எடுத்துக்கூறுதல்.

e) இத்தாலியில் ஜனநாயகக் குடியரசு ஒன்றை நிறுவுதல்.

...ளம் இத்தாலியில் இயக்கம் மக்களின் ஆதரவைப் பெற்று ...மடைந்தது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இந்த இயக்கத்தில் ...ந்து இத்தாலிய இணைவிற்குத் தங்களை அர்ப்பணித்துக் ...ண்டார்கள். இவ்வாறு இத்தாலிய இணைவிற்காக அரும்பாடு ...வர் மஜினி என்று புகழப்படுகிறார்.

### சார்லஸ் ஆல்பர்ட் (Charles Albert):

இவரை இத்தாலிய இணைவின் முன்னோடி என்று கூறலாம். ...-ல் சார்டீனியாவின் அரசரானார். 1848-ம் ஆண்டின் தொடக்கத்தில் ...த்தாலிய தேசிய இயக்கத்தின் சிறந்த தலைவராக மதிக்கப்பட்டார். ...8-ம் வருடப் பிப்ரவரிப் புரட்சியின் விளைவாக இத்தாலியின் பல ...திகளில் புரட்சி ஏற்பட்டது. அப்போது இத்தாலிய மக்களும் ...சியவாதிகளும் சார்லஸ் ஆல்பர்ட் ஆஸ்திரியா மீது படையெடுத்து ...வர்களை இத்தாலியிலிருந்து விரட்டவேண்டும் என்று கேட்டுக் ...காண்டனர். அதன்படி 1848, மார்ச் 23-ல் ஆஸ்திரியா மீது போர் ...தொடுத்தார். ஆனால் 1848 ஜூலை 25-ல் கஸ்டோஸா (Custozza) என்ற ...டத்தில் ஆஸ்திரியர்களால் தோற்கடிக்கப்பட்டார். அவர் 1849-ல் ...ண்டும் படையெடுத்த போது 1849 மார்ச் 23-ல் நொவரா (Novarra) என்ற ...டத்தில் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டார். இதனால் தனது அரச ...தவியை இழந்தார். அதன்பின் இவரது மகன் இரண்டாம் விக்டர் ...இமானுவேல் அரசரானார். சார்லஸ் ஆல்பர்ட்டின் முயற்சிகள் ...வெற்றியடையாமல் போனாலும் பின்னர் அவரது மகன் தலைமையில் ...ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டு இத்தாலி ஐக்கியமடைந்தது.

### ...இரண்டாம் விக்டர் இமானுவேல் (Victor Emmanuel II):

சார்லஸ் ஆல்பர்ட்டுக்குப்பின் சார்டீனிய மன்னராகப் பதவி ...ற்றவர் இரண்டாம் விக்டர் இமானுவேல் ஆவார். இவர் துணிவு ...நிறைந்தவராகவும், நேர்மையான அரசியல்வாதியாகவும் இருந்தார். ...பொதுவாழ்வில் கண்ணியமிக்கவர். போரில் வெற்றியோடு திரும்பும்

வல்லமை பெற்றவர். இவரது தலைமையின்கீழ் பியட்மாண்ட் பி மட்டும் தன்னாட்சி பெற்று விளங்கியது. இந்த சார்டீனிய பியட் அரசிலிருந்தே ஐக்கிய சுதந்திர இத்தாலி உருவாகியது என்று கூ இத்தாலி இணைந்த பிறகு நாட்டின் தலைவராக பணியாற்ற சம்ம ஆஸ்திரியாவுடன் தனக்கிருந்த உறவுகளை எல்லாம் மு கொண்டார். இவர் மீது இத்தாலியத் தேசியவாதிகள் நம் வைத்தனர்.



கவுண்ட் கவூர்

## 8. கவுண்ட்கவூர் (Count Camillo Bensoi de Cavour, 1810 1861)

பியட்மாண்டில் ஓர் உயர்குடியில் பிறந்த கவூர் முதலி எதேச்சதிகார கொள்கையின் சார்பாளராகவே இருந்தார். படைய சேர்ந்து பணியாற்றினார். பின்னர் படையிலிருந்து விலகி தன கொள்கைகளை மாற்றிக் கொண்டு ஜனநாயக, தாராள கொள்கைகளை பின்பற்றினார். பல இடங்களுக்குச் சென்று அரசியல் நடவடிக்கைகளி ஈடுபட்டார். இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அரசியலை கற் அறிந்தார். சார்டீனிய பாராளுமன்றத்தின் உறுப்பினரா தேர்ந்தெடுக்கப்பட்டார். பியட்மாண்டில் திருச்சபை பெற்றிரு பொருளாதார, சட்ட சலுகைகளைச் சாடினார். 1852-ல் விக் இமானுவேலின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். இ சார்டீனிய அரசரின் கீழ் இத்தாலி இணைவதை விரும்பினார்.

கவூர் இரண்டு சக்திகளை உடையவராக இருந்தார். ஒன்று இத்தாலியின் மீது பற்று மற்றொன்று பியட்மாண்டின் படை. ஆனால் இத்தாலி ஐக்கியமடைய இவை போதாது என்றார். ஐரோப்பிய அரசுகளின் ஆதரவாலும் கூட்டுறவாலுமே, முக்கியமாக பிரான்ஸின் துணையுடனே இத்தாலிய இணைவை ஏற்படுத்த முடியும் என்று நம்பினார். இதுவே கவூரின் ராஜதந்திர யுக்தியாகும். இந்த யுக்திதான் இறுதியில் வெற்றியைத் தேடித் தந்தது. தனது கொள்கைகளை செயல்படுத்தும் முகமாக முதலில் பியட்மாண்டை நவீனப் படுத்தினார். அங்கு பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். இத்தாலிய ஐக்கியத்திற்கு அது தலைமை ஏற்கும்படியாக பியட்மாண்டை வலிமைப்படுத்தினார். மஜினி, கரிபால்டி ஆகியோரின் ஆதரவையும், பல ரகசியக் கழகங்கள் மற்றும் இளைஞர்களின் ஆதரவையும் பெற்று இத்தாலியை ஐக்கியப்படுத்தினார். இத்தாலிய ஐக்கியத்திற்காக தமது உயிரையே கொடுத்தார். இத்தாலிய இணைவிற்குக் காரணமான கவூர் ''இத்தாலியின் பிஸ்மார்க்'' என்று அழைக்கப்படுகிறார்.

### 9. கரிபால்டி (Giuseppe Garibaldi):

இத்தாலிய இணைவு இயக்கத்தில் பெரும்பங்கு எடுத்துக் கொண்ட வீரர் கெசப்போ கரிபால்டி ஆவார். 1807-ல் நைசில் (Nice) பிறந்த இவர் மஜினியின் சீடராவார். தீராத தேசப்பற்றும் தணியாத விடுதலை வேட்கையும் கொண்டவர். இளம் இத்தாலிய இயக்கத்தில் சேர்ந்து பல புரட்சிகளில் ஈடுபட்டார். தென் இத்தாலிய (நேப்பிள்ஸ், சிசிலி) விடுதலைக்குக் காரணமானவர் இவரே. தனது தலைமையின் கீழ் திறமை வாய்ந்த சுமார் முப்பதாயிரம் விரர்களைக் கொண்ட படையை உருவாக்கினார். இப்படை வீரர்கள் சிறந்த தேசிய உணர்ச்சி கொண்டவர்கள். நாட்டுக்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்ய தயாராக இருந்தார்கள். தங்கள் வலிமையின் அறிகுறியாக செஞ்சட்டை அணிந்தார்கள். எனவே அவர்கள் 'செஞ்சட்டையினர்' (Red Shirts) என்று அழைக்கப்பட்டனர். 'இத்தாலிய இணைவின் போர் வீரர்' என்று கரிபால்டி அழைக்கப்படுகிறார்.


## இத்தாலிய இணைவின் பல்வேறு நிலைகள்

இத்தாலிய இணைவு கீழ்க்கண்ட ஆறு நிலைகளில் நிறைவேறியது.

### 1. கிருமியப் போர் (Grimean War): 1853-56

1854-ல் தொடங்கிய கிருமியப் போரில் இங்கிலாந்தும் பிரான்சும் ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட்டன. இப்போரில் இங்கிலாந்தையும்

பிரான்சையும் ஆதரிக்கும்படி விக்டர் இமானுவேலிடம் ஆலோச
கூறினார் கவூர். இப்போரில் சார்டீனியா உதவி செய்தால் போருக்குப்
ஐரோப்பிய நாடுகளின் அரசியலில் முக்கிய இடத்தைப் பி
முடியுமென்றும் பின்னர் இத்தாலியிலுள்ள ஆஸ்திரியர்களை வி
பிரான்சிடம் உதவி கேட்க முடியும் என்று நம்பினார் கவூர். அதன்
பிரான்சுக்கு ஆதரவாக 15,000 சார்டீனிய வீரர்கள் அனுப்பப்பட்ட
கிருமியாவில் செர்னயா (Cernaya) என்ற இடத்தில் சார்டீனிய வீர
வெற்றியடைந்தனர். கிருமியப் போரில் பிரான்ஸ் வெற்றியடைந்தது.




1856-ல் நடைபெற்ற பாரிசு மாநாட்டில் பங்குகொண்ட கவூ
இத்தாலியப் பிரச்சனைகளை பிற ஐரோப்பிய நாடுகளுக்குத்
தெரியப்படுத்தினார். எவ்வாறு இத்தாலி வடக்கிலும் தெற்கிலு
மோசமாக ஆளப்படுகிறது என்று கூறினார். இதனால் பிற ஐரோப்பி
நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றார். இங்கிலாந்தின் வெளி உற

[illegible] பிளாரன்ஸ் (Florence) [illegible] [illegible] நெப்போலியன் [illegible] தெரிவித்தார். [illegible] சார்டினியா இத்தாலிய இணைவிற்கு [illegible] காவூரின் ராஜதந்திர [illegible]

## 2. ஆஸ்திரிய சார்டினியப்போர் (1859 ஆ) (லம்பார்டி இணைக்கப்படுதல்)

[illegible] நெப்போலியனின் [illegible] மூன்றாம் [illegible] இத்தாலிய [illegible] நெப்போலியனிடமிருந்தது. [illegible] இருந்தார். இந்த வாய்ப்பை காவூர் பயன்படுத்திக் கொள்வதில் ஆவல் [illegible] 1858 ஜூலை மாதம் பிளாம்பியர்ஸ் (Plombiers) என்ற நகரில் [illegible] பேச்சுவார்த்தையின் இறுதியில் [illegible] சந்திப்பை [illegible] உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது அதன்படி.

a) இத்தாலியின் வடபகுதியிலுள்ள லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளிலிருந்து ஆஸ்திரியாவை வெளியேற்றி அவைகளைச் சார்டினியாவுடன் இணைப்பதற்கு பிரான்ஸ் உதவி செய்யும்.

b) சார்டினியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் போர் மூண்டால் இரண்டு லட்சம் போர் வீரர்களை சார்டினியாவுக்கு ஆதரவாக அனுப்புவதாக நெப்போலியன் வாக்களித்தார்.

c) நெப்போலியன் செய்யும் உதவிக்குப் பரிசாக செவாய், நைஸ் (Savoy, Nice) ஆகிய பகுதிகள் நெப்போலியனுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

d) லம்பார்டி, வெனிஷியா தவிர மீதி உள்ள இத்தாலியப் பகுதிகள் எல்லாம் இணைக்கப்பட்டு போப்பாண்டவரின் தலைமையில் ஒரு கூட்டமைப்பாக வைக்கப்பட வேண்டும்.

e) ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி காவூர்தான் போரை ஆரம்பித்து வைக்க வேண்டும்.

இந்த உடன்படிக்கைக்குப் பிறகு, விக்டர் இமானுவேல் தமது பாராளுமன்றத்தைக் கூட்டி அதில் 'தான் இத்தாலி முழுவதிலுமுள்ள மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யப் போவதாக' அறிவித்தார்.

இதனைக் கேட்ட ஆஸ்திரியப் பேரரசர் வெகுண்டெழுந்து 1859, ஏப்ரல் 19-ம் தேதி பியட்மாண்டின் மீது படையெடுத்தார். போர் ஆரம்பமானது. பிளாம்பியர்ஸ் உடன்படிக்கைப்படி சார்டீனியாவுக்கு உதவுவதற்காக பிரெஞ்சுப்படை ஒன்றை அனுப்பினார் மூன்றாம் நெப்போலியன். 1859 ஜூன் 4-ல் மெஜண்டா (Megenta) என்ற இடத்தில் நடைபெற்ற கடும் சண்டையில் ஆஸ்திரியப் படைகளை ஜூன் 24-ம் தேதி சால்பரினோ (Solferino) என்ற இடத்தில் பிரெஞ்சு சார்டீனியக் கூட்டுப்படைகள் தோற்கடித்தன. லம்பார்டி, வெனிஷியா ஆகிய பகுதிகளிலிருந்து ஆஸ்திரியா விரட்டப்பட்டது.

இந்த வெற்றிகளுக்குப்பின் திடீரென போரை முடித்துக் கொண்டார் மூன்றாம் நெப்போலியன். ஏனெனில் அவர் சக்தி வாய்ந்த இத்தாலியை உருவாக்க விரும்பாததே காரணமாகும். தனது தளபதி புளூரி (Fleury) என்பவரை ஆஸ்திரியப் பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பைச் சந்திக்க அனுப்பினார். அவரும் போரை முடிக்க விருப்பம் கொண்டவராக இருந்தார். 1859, ஜூலை 11-ம் தேதி நெப்போலியனை வில்லாபிராங்கா (Villafranca) என்ற இடத்தில் சந்தித்து அவருடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இந்தப்பேச்சு வார்த்தையில் சார்டீனியா சேர்த்துக் கொள்ளப்படவில்லை. வில்லாபிராங்கா உடன்படிக்கை 1859 நவம்பர் 10-ல் சூரிச் அமைதி ஒப்பந்தப்படி (Peace of Zurich) உறுதிப்படுத்தப்பட்டது. வில்லாபிராங்கா உடன்படிக்கைப்படி.

a) லம்பார்டி மூன்றாம் நெப்போலியன் மூலம் விக்டர் இமானுவேலுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

b) வெனிஷியாவை ஆஸ்திரியாவே வைத்துக் கொள்ள வேண்டும்.

c) பிரான்சும், ஆஸ்திரியாவும், போப்பாண்டவரின் தலைமையில் ஐக்கிய இத்தாலி உருவாக்கப்பட உதவி செய்ய வேண்டும்.

d) பார்மா, மாடனா, டஸ்கனி ஆகிய பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட அரசர்கள் மீண்டும் அங்கு அமர்த்தப்பட வேண்டும்.

e) போப்பாண்டவர் தனது ஆட்சிப் பகுதியில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும்.

f) நைஸ், செவ்வாய், ஆகிய பகுதிகள் பிரான்சுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த உடன்படிக்கையினால் மூன்றாம் நெப்போலியன் இத்தாலிய மக்களால் நம்பத்தகாதவர் என்று தூற்றப்பட்டார். இத்தாலி

இணைவதை இவ்வுடன்படிக்கைத் தடுக்கிறது என்றும் எனவே இதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் இமானுவேலிடம் கவூர் கூறினார். ஆனால் இமானுவேல் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே பதவியை கவூர் ராஜினாமா செய்தார். ஆஸ்திரிய சார்டீனியப் போரின் விளைவாக லம்பார்டி சார்டீனிய-பியட்மாண்ட் அரசுடன் இணைக்கப்பட்டது.

### 3. பார்மா, மாடனா, டஸ்கனி, ரோமாக்னா ஆகியவை இணைதல் (Modena, Tuscany, Romagna):

ஆஸ்திரிய சார்டீனியப் போரில் மூன்றாம் நெப்போலியன் இத்தாலிக்கு துரோகம் செய்தார் என்றாலும் அது இத்தாலிக்குப் பல வழிகளில் நன்மையாகவே முடிந்தது. வில்லாபிராங்கா உடன்படிக்கை பின்படி, பார்மா, மாடனா, டஸ்கனி, ரோமாக்னா ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்ட பழைய ஆட்சியாளர்களை, மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தப்பகுதி மக்களிடம் மேலோங்கி நின்றவை கவூர், கரிபால்டி, மஜினி ஆகியோரின் பெயர்களே ஆகும். கவூரின் நெருங்கிய நண்பரான ஃபரினி (Farini) மாடனாவிலும் பார்மாவிலும் ரிகாசோலி (Ricasoli) என்பவர் டஸ்கனியிலும் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பினர். அங்கு தங்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். அதன் விளைவாக அங்கிருந்த ஆட்சியாளர்கள் ஓடிவிட்டனர். 1859-ஆகஸ்ட் மாதம் பிளாரன்ஸ் நகரில் கூடிய பாராளுமன்றம், டஸ்கனி இமானுவேலின் தலைமையை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது. 1860- ஜனவரியில் மீண்டும் பதவியேற்றிருந்த கவூர் இந்த மத்திய இத்தாலியப் பிரதேசங்கள் அங்குள்ள மக்களின் விருப்பப்படியே இணைக்கப்படும் என்றார். மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இத்தாலியுடன் இணைவதற்கு ஆதரவாக 3,86,000 ஓட்டுகளும், எதிராக 15,000 ஓட்டுகளும் கிடைத்தன. எவ்விதப் போரும் இல்லாமல் பார்மா, மாடனா, டஸ்கனி, ரோமாக்னா ஆகிய மத்திய இத்தாலியப் பகுதிகள் பியட்மாண்ட் சார்டீனிய அரசுடன் இணைக்கப்பட்டன.

### 4. நேப்பிள்ஸ், சிசிலி, போப்பின் பகுதிகள் இணைக்கப்படுதல்:

இத்தாலி முழுமையாக இணைக்கப்பட வேண்டும் என்ற கவூரின் எண்ணம் நிறைவேற வேண்டுமானால் போப்பின் பகுதிகளும் இத்தாலியின் தென்பகுதியிலுள்ள நேப்பிள்ஸ், சிசிலி ஆகியவைகளும், இத்தாலியுடன் இணைக்கப்படவேண்டும். போப்பாண்டவர் 9-ம் பயஸ் இத்தாலியின் விடுதலை மற்றும் ஐக்கியத்தை எதிர்ப்பவரானார். நேப்பிள்சும், சிசிலியும் 1859-ல் பதவி ஏற்ற இரண்டாம் பிரான்சிஸ் என்ற போர்பான் மன்னரின் கொடுமை வாய்ந்த பிற்போக்கான அரசரின் கீழ்

இருந்தன. இப்பகுதிகளை வெற்றிகரமாக இணைத்துக் கொடுத்த பெருமை கரிபால்டியையே சாரும்.

கவூரின் வேண்டுகோளுக்கிணங்க நேபிள்சையும், சிசிலியையும் கைப்பற்ற கரிபால்டி 1136 செஞ்சட்டை வீரர்களுடன் 1860 மே 5-ம் தேதி ஜெனாவா துறைமுகத்திலிருந்து இரண்டு கப்பல்களில் புறப்பட்டார். மே 11-ம் தேதி சிசிலியிலுள்ள மர்சலா (Marsala) என்ற இடத்தில் வந்து இறங்கினார். பின்னர் ராணுவத் தலைமையிடமாகத் திகழ்ந்த பாலர்மோவை (Palermo) நோக்கி முன்னேறினார். சிசிலி மக்களின் ஆதரவுடன் ராணுவத்தளபதி லான்சா (Lanza) வை மிக எளிதில் மர்சலாவுக்கு வெளியே தோற்கடித்தார் கரிபால்டி.

இதே நேரத்தில் நேப்பிள்சிலும் தேசிய இயக்கம் வலுவடைந்தது. தேசியவாதிகள் கரிபால்டியை உதவிக்கு அழைத்தார்கள். எனவே செஞ்சட்டையினர் டிரெனியன் கடலைக் கடந்து நேப்பிள்சின் தென்பகுதியில் நுழைந்தனர். நேப்பிள்ஸ் மன்னர் இரண்டாம் பிரான்சிஸ் 1860-செப் 6-ல் நாட்டை விட்டு ஓடி ரோமில் தஞ்சமடைந்தார். போர்பான் வம்ச அரசர் தூக்கி எரியப்பட்டதால் கவூர் மகிழ்ச்சி அடைந்தார். நேப்பிள்ஸ், சிசிலி ஆகிய பகுதிகளை இத்தாலியின் பெயராலும், விக்டர் இமானுவேலின் பெயராலும் ஆளப்போவதாக கூறிவிட்டார் கரிபால்டி. சார்டீனியாவுடன் இவை இணைக்கப்படும் என்று அறிவிக்க மறுத்துவிட்டார் கரிபால்டி.

எனவே கரிபால்டியின் எண்ணம் மீது ஐயம் கொண்ட கவூர், அவருக்கு முன்பு போப்பின் பகுதிகள் மீது படையெடுக்க முற்பட்டார். இதற்கிடையில் போப்பின் பகுதிகளிலுள்ள மார்ச்சஸ் (Marches), உம்பிரியா (Umbira) ஆகிய இடங்களில் புரட்சி தோன்றியது. போப்பின் படைகள் இக்கிளர்ச்சிகளை அடக்க முற்பட்ட போது கவூர் போப் ஒன்பதாம் பயசுக்கு (Pius IX) "புரட்சியாளர்களை அடக்க முற்பட்டால் அதனைத் தடுக்க சார்டீனியா அரசுக்கு உரிமை உண்டு'' என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல் அதனையே காரணமாகக் கொண்டு இத்தாலியப் படைகளைப் போப்பின் அரசுக்குள் அனுப்பினார். போப்பின் படைகள் கேசில்பிடார்டோ (Casteifidardo) என்ற இடத்தில் தாற்கடிக்கப்பட்டது. ரோம் நீங்கலாக போப்பின் பகுதிகள் இணைக்கப் பட்டது.

இதன் பின்னர் விக்டர் இமானுவேலின் வெற்றிப்படைகள் நேப்பிள்ஸ் நோக்கி வந்தன. அவரைச் சந்தித்த கரிபால்டி தனது வெற்றிகளை இத்தாலிய இணைவிற்கு அர்ப்பணித்தார். எவ்விதப் பிரதிபலனும் எதிர்பாராமல் தனது சொந்த ஊரான கேப்ரேரா (Caprera) போய்ச் சேர்ந்தார். நேப்பிள்சிலும் சிசிலியிலும் வாக்கெடுப்பு

நடத்தப்பட்டு மக்களின் பேராதரவுடன் அவை இத்தாலியுடன் இணைக்கப் பட்டன.

1861, பிப்ரவரி 18-ம்தேதி புதிய இத்தாலியப் பாராளுமன்றம் டூரின் (Turin) நகரில் கூட்டப்பட்டது. இதுவரை சார்டீனிய அரசாக இருந்தது இப்போது இத்தாலிய அரசாக (Kingdom of Italy) மார்ச் 17-ம் தேதி பிரகடனப்படுத்தப் பட்டது. இரண்டாம் விக்டர் இமானுவேல் 'இத்தாலிய அரசராகப்' பிரகடனப்படுத்தப்பட்டார். பதினெட்டு மாதங்களில் உருவான புதிய இத்தாலிய அரசு 22 மில்லியன் மக்களைக் கொண்டதாக இருந்தது. ஆனாலும் இத்தாலி அரசு முழுமையடைய எஞ்சியுள்ள வெனிஷியாவும், ரோம் நகரும் இத்தாலியுடன் இணைக்கப்பட வேண்டும்.,

## 5. வெனிஷியா இணைக்கப்படுதல் (ஆஸ்திரிய பிரஷ்யப்போர்) 1866

இத்தாலிய இணைவிற்காகப் பாடுபட்ட கவூர் 1861-ஜூன் மாதம் மரணமடைந்தார். அவரது எண்ணங்கள் கிட்டத்தட்ட எல்லாம் நிறைவேறி விட்டன. இத்தாலிய ஐக்கியம் நிறைவடைய வேண்டுமானால் எஞ்சியுள்ள ரோமைச் சுற்றியிருந்த போப்பின் பகுதியும், வெனிஷியாவும் இணைக்கப்பட வேண்டும்.

1866-ல் ஏற்பட்ட ஆஸ்திரிய-பிரஷ்யப் போரின் விளைவாக வெனிஷியா இணைக்கப்பட்டது, மத்திய ஐரோப்பாவில் வளர்ச்சி படைந்து கொண்டிருந்த பிரஷ்யா ஆஸ்திரியாவைத் தோற்கடிக்க பல ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதன் சான்சலரான பிஸ்மார்க் நட்பு நாடுகளைப் பெறுவதில் ஆர்வம் கொண்டார், ''வெனிஷியர்விலுள்ள ஆஸ்திரியர்களை இத்தாலி தாக்குமானால் அச்சமயத்தில் ஆஸ்திரியா தன்கவனத்தையெல்லாம் வெனிஷியாவில் வைத்திருக்கும் அவ்வேளையில் பிரஷ்யாவை ஆஸ்திரியாவால் வலிமையாக எதிர்க்க முடியாது'' என்று முடிவு செய்த பிஸ்மார்க் இமானுவேலின் நட்பை நாடினார். ''போர் ஆரம்பித்தவுடன் பிரஷ்யாவுக்கு ஆதரவாக இத்தாலியப் படைகள் வெனிஷியாவிலுள்ள ஆஸ்திரியர்களைத் தாக்க வேண்டுமென்றும், அதற்காக ஆஸ்திரியர்களை தோற்கடித்தபின் வெனிஷியாவை இமானுவேலுக்குக் கொடுப்பதாக'' உறுதியளித்தார் பிஸ்மார்க்.

1866- ஏப்ரலில் போர் மூண்டது. அப்போது இத்தாலியில் திறமை மிக்க படைத்தலைவர்களும் இல்லை; படையில் ஒழுங்குமில்லை. படையெடுப்பைக் குறித்து திட்டமான நடவடிக்கைகளும் இல்லை. எனவே இத்தாலியப்படைகள் சரியாகப் போரிடவில்லை. ஜூலை 24-ல் கஸ்டோசா (Custozza) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் இத்தாலிய

294

ராணுவம் தோற்கடிக்கப்பட்டது. இத்தாலியக் கப்பற்படை லிசா (Lissa) என்ற இடத்தில் தோற்றுப்போனது. ஆனால், பிஸ்மார்க்கின் கணிப்பின்படி, ஆஸ்திரியாவின் பெரியபடை ஒன்றை இத்தாலியில் தங்கியிருக்கச் செய்துவிட்டதின்படி பிரஷ்யாவுக்கு மதிப்பிட முடியாத உதவியைச் செய்தனர் இத்தாலியர். இப்போரில் பிரஷ்யா வெற்றியடைந்தது. போரின் முடிவில் 1866 ஆகஸ்ட் 23-ல் ஏற்பட்ட பிரேக் (Prague) உடன்படிக்கையின்படி வெனிஷியா இத்தாலிக்குக் கொடுக்கப்பட்டது. வெனிஷியாவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 6,40,000 வாக்குகள் ஆதரவுடன் இத்தாலியுடன் வெனிஷியா இணைந்தது.

## 6. ரோம் இணைக்கப்படுதல்: 1870

எஞ்சிய பகுதியான ரோம் மட்டும் ஐக்கிய இத்தாலியில் இணைக்கப்படாமல் இருந்தது. காரணம் 1849-ம் வருடம் முதல் பிரெஞ்சுப் படை ஒன்றை போப்பாண்டவருக்குப் பாதுகாப்பாக ரோமில் வைத்திருந்தார் மூன்றாம் நெப்போலியன். ரோமை இணைக்க இமானுவேல் விரும்பினாலும் அதற்காக பிரான்சுடன் போர் தொடுக்க விரும்பவில்லை. இதற்கிடையில் போப்பாண்டவர் 9-ம் பயஸ் மிதவாத எதிர்ப்பு சக்திகளுடன் சேர்ந்தார். 1864 டிசம்பரில் 'முன்னேற்றம், மிதவாதம், புதிய இத்தாலிய அரசு ஆகியவையுடன் இணங்கி நடக்க வேண்டும் என்பது தவறு'' என்று தெரிவித்திருந்தார்.

1870-ல் பிரான்சுக்கும் பிரஷ்யாவுக்குமிடையே போர் ஏற்பட்டதால் ரோம் நகரில் வைக்கப்பட்டிருந்த படைகளை திரும்ப அழைக்கும் நிலை மூன்றாம் நெப்போலியனுக்கு ஏற்பட்டது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்ட இமானுவேல் 1870செப் 20-ம் தேதி ஒரு படையை அனுப்பி ரோமைக் கைப்பற்றினார். ரோமில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்களின் ஆதரவுடன் இத்தாலியுடன் ரோம் இணைக்கப்பட்டது. ரோம் நகர் ஐக்கிய இத்தாலியின் தலைநகராக அறிவிக்கப்பட்டது.

## முடிவுரை:

இவ்விதமாக இத்தாலிய இணைவு முற்றுப் பெற்றது. இத்தாலியர் மகிழ்ச்சியடைந்தனர். தாந்தே முதல் மஜினி காலம் வரையிலுள்ள இத்தாலியத் தலைவர்களின் கனவு நனவாகியது. இரண்டாம் விக்டர் இமானுவேலின் தலைமையும், கவூரின் ராஜதந்திரமும், மஜினியின் இலட்சியக் கோட்பாடுகளும், கரிபால்டியின் செயல் திறனுமே வலிமையான, சுதந்திரமான ஐக்கிய இத்தாலி உருவாகக் காரணமாக அமைந்தன.

# 11. ஜெர்மானிய இணைவு

## (UNIFICATIN OF GERMANY)

கி.பி. 1800-ம் ஆண்டுக்கு முன்பு ஜெர்மனி 360-க்கும் மேற்பட்ட பல சிறுசிறு நாடுகளைக் கொண்டிருந்தது. இந்த நாடுகளுக்கெல்லாம் தலைமை வகித்திருந்தவர் புனித ரோமானியப் பேரரசர் ஆவார். ஆனால் பெயரளவுக்குத் தான் ரோமானியப் பேரரசர் தலைவராக இருந்தார். இந்த ஜெர்மானிய நாடுகள் அனைத்தும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் சுதந்திரமான கொள்கைகளையே பின்பற்றி வந்தன. 18-ம் நூற்றாண்டின் இறுதியில் ஜெர்மானியர்களிடம் தேசிய உணர்வு ஏற்பட்டது. அதனை ஜெர்மானிய எதேச்சதிகார மன்னர்கள் நசுக்கினர். மக்களால் சாதிக்க முடியாததை ஜெர்மானிய நாடுகளில் வலிமை பெற்று விளங்கிய பிரஷ்யாவின் தலைமையில் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெர்மானிய நாடுகள் அனைத்தும் இணைந்து 'ஐக்கிய ஜெர்மனி' உருவானது. இதற்கு முக்கியக் காரணமானவர் பிரஷ்யாவின் சான்சலர் பிஸ்மார்க் என்பவராவார். 'நவீன ஜெர்மானியை உருவாக்கியவர்' என்று பிஸ்மார்க் புகழப்படுகிறார்.

## ஜெர்மானிய இணைவு ஏற்படச் சாதகமாக இருந்த சூழ்நிலைகள்:

### 1. நெப்போலியனின் பங்கு:

நெப்போலியன் போனபார்ட் சிதறுண்டு கிடந்த சுமார் 360 ஜெர்மானிய நாடுகளை வென்றார். பின்னர் அவைகளை 39 நாடுகளாக ஒன்று சேர்த்து அதற்கு 'ரைன் கூட்டமைப்பு நாடுகள்' என்று பெயரிட்டார். இவ்வாறு தன்னையும் அறியாமலேயே ஜெர்மானிய இணைவுக்கு உதவினார் நெப்போலியன். ஜெர்மானிய மக்களிடம் தேசிய உணர்வு ஏற்படக் காரணமாக இருந்தார்.

### 2. வியன்னா மாநாடு:

1815-ல் கூடிய வியன்னா மாநாடு நெப்போலியனால் உருவாக்கப்பட்ட ரைன் கூட்டமைப்பைக் கலைக்கவில்லை. அதன் பெயர் மட்டும் 'ஜெர்மானியக் கூட்டமைப்பு நாடுகள்' என்று மாற்றப்பட்டது. ஆனால் இந்தக் கூட்டமைப்பு ஆஸ்திரியாவின் தலைமையில் வைக்கப்பட்டது. இவ்வாறு வியன்னா மாநாடும் ஜெர்மானிய நாடுகளின் இணைவுக்கு ஓரளவு உதவியது.

### 3. தேசிய உணர்வு:

பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் தேசிய உணர்வு ஐரோப்பா வெங்கு பரவியது. இத்தேசிய உணர்ச்சி ஜெர்மானிய மக்களிடையேயும் பரவியது 1830-ம் வருட ஜூலைப் புரட்சி, 1848-ம் வருட பிப்ரவரிப் புரட்சி ஆகியவற்றின் பிரதிபலிப்புகள் ஜெர்மானிய நாடுகளிடமும் காணப்பட்டது. தேசியமும், விடுதலை உணர்வும் மக்களிடம் வேகமாக வளர்ந்தன.

### 4. ஜெர்மானிய அறிஞர்களின் பங்கு:

ஜெர்மானிய மக்களிடம் தேசிய உணர்வை ஏற்படுத்தியதில் ஜெர்மானிய அறிஞர்கட்குப் பெரும் பங்கு உண்டு. அறிஞர்களான காண்ட், பிட்சே, ஹெய்ன், பீதோவன், ரிச்சர்ட் வாக்னர் (Kant, Fitche, Heine, Beethovan, Richard, Wagnar) போன்றவர்கள் தாங்கள் எழுதிய நூல்களின் மூலம் மக்களிடையே முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பினார்கள். அவர்கள் ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கவும் ஒரு குடியரசை ஏற்படுத்தவும் ஆதரவு தெரிவித்தார்கள். ஜெர்மானிய ஐக்கியம், தேசியம் ஆகிய கருத்துக்கள் பல்கலைக் கழகங்கள் மூலமாகவும் வளர்ந்தன. மாணவர்களும், கல்லூரிப் பேரசிரியர்களும் புரட்சி இயக்கங்கட்கு ஆதரவு தெரிவித்தனர். இவை ஜெர்மானிய இணைவிற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது.

### 5. பிரஷ்யாவின் எழுச்சி:

பிரஷ்யாவின் எழுச்சி ஜெர்மானிய இணைவு ஏற்பட முக்கியமான காரணமாகும். பல சிதறுண்ட பகுதிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட பிரஷ்யா ஹோகன் சோலர்ன் குடும்பத்தைச் சேர்ந்த மன்னர்களால் ஆளப்பட்டு மாபெரும் சக்தியாக ஐரோப்பாவில் விளங்கியது. முதலாம் பிரடரிக் வில்லியத்தின் காலத்தில் *(1713-1740)* பிரஷ்யாவில் ராணுவச் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டது. மாமன்னர் *(1740-86)* பிரடரிக் தன்னுடைய நாட்டை ஐரோப்பாக் கண்டத்திலேயே வலிமை வாய்ந்த நாடாக மாற்றியமைத்தார். எனவேதான் வலிமையான பிரஷ்யாவின் தலைமையில் மற்ற ஜெர்மானிய நாடுகள் இணைய முடிந்தது.

### 6. பிராங்பர்ட் பாராளுமன்றம்:

*1848*-ம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சியின் விளைவாக ஜெர்மானிய நாடுகளில் இருந்த விடுதலை இயக்கத் தலைவர்களும், தேசிய இயக்கத்தினரும் சட்டவரம்புக்குட்பட்ட ஆட்சி வேண்டுமென்று கேட்டனர். பிரஷ்ய மன்னர் நான்காம் பிரடரிக் வில்லியமும், தேசிய

...கத்தினர் கேட்டவற்றைக் கொடுக்க சம்மதித்தார். ஜெர்மனிக்குப் ...ய அரசியல் சட்டம் இயற்றும் நோக்கத்துடன் பிராங்பர்ட் (Frankfurt) ...னுமிடத்தில் நாடாளுமன்றம் ஒன்று ஜெர்மானிய இளவரசர்களால் ...ட்பட்டது. அதில் ஜெர்மானிய ஒருமைப்பாட்டிற்காக ஒரு ...சியலமைப்பு தயாரிக்கப்பட்டது. அதன்படி ஆஸ்திரியா நீங்கலாக ...ர்மானிய நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்த ஜெர்மானியப் பேரரசை ...வாக்கவும், அதன் தலைவராக 'ஜெர்மானியப் பேரரசைத்' ...ர்ந்தெடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. 1849, மார்ச் மாதம் இப்புதிய ...லைமையையும், பதவியையும் பிரஷ்ய மன்னர் நான்காம் பிரடரிக் ...ல்லியத்திடம் அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆனால் நான்காம் பிரடரிக் வில்லியம் ஜெர்மானிய இளவரசர்கள் ...ந்த பதவியையும், ஜெர்மானிய நாடுகளின் தலைமையையும் ஏற்றுக் ...காள்ள மறுத்து விட்டார். இதற்குக் காரணம், ஜெர்மானியப் பேரரசராக ...முடிசூட்டிக் கொண்டால் ஆஸ்திரியா தனது நாடான பிரஷ்யா மீது ...டையெடுக்கும் என்று பயந்ததே ஆகும். இவ்வாறு அவர் மறுத்து ...விட்டதால் பிராங்பர்ட் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. ஆனால் ...அதிலிருந்து ஜெர்மனி ஐக்கியம் அடைய வேண்டுமென்ற எண்ணம் ...நாடெங்கிலும் பரவியது. பெரும்பாலனவர்கள் வன்முறையால் ஜெர்மானிய இணைவை ஏற்படுத்த முடியும் என்று கூட நம்பினர்.

**7. சால்வரின் (Zollverin or Customs Union):**

ஜெர்மானிய இணைவிற்கு முதல்படியாக விளங்கியது. சால்வரின் என்ற ''சுங்க ஐக்கியமாகும்''. பொருளாதார ரீதியிலான இந்த அமைப்பு 1818-ல் மிகச்சிறிய அளவில் ஏற்ப்டுத்தப்பட்டது. ஜெர்மானிய நாடுகளுக்கிடையே வணிகக் கட்டுப்பாடுகள் அதிகமிருந்தது. ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் பொருட்களுக்கு சுங்கவரி போடப்பட்டதால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டது. கள்ளக் கடத்தல் அதிகமாகியது. எனவே பிரஷ்யா பல ஆண்டுகள் முயற்சி செய்து இந்த சுங்க வரி விதிப்பை நீக்கி தடையிலா வாணிப முறையை 1818-ல் ஏற்படுத்தியது. இதற்கு சால்வரின் என்று பெயர்.

இதன்படி பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மன் நாடுகள் தங்களுக்குள் இருந்த பொருளாதாரத் தடையை விலக்கி ஒற்றுமையை ஏற்படுத்தின. ஆஸ்திரியா இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இந்த சால்வரின் அமைப்பின்படி ஜெர்மானிய வியாபாரிகளும், உற்பத்தியாளர்களும் பயன் அடைந்தனர். சால்வரினில் அங்கம் வகிக்காத நாடுகள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. 1834-ல் பவேரியாவும், சாக்சனியும் சேர்ந்தன. பிரஷ்யாவின் தலைமையில்

உருவான இந்த அமைப்பின் விளைவுகளைப் பற்றி காலங்கடந்து உணர்ந்து கொண்ட மெட்டர்னிக் 1834-ல் எதிர்ப்பை ஏற்படுத்தினார். பலன் எதும் அளிக்கவில்லை. 1844-க்குள் ஹனோவர், ஓல்டன்பர்க், மெக்லன்பர்க். தவிர எல்லா ஜெர்மன் நாடுகளும் சால்வரினில் சேர்ந்து விட்டன.

இவ்வாறு ஜெர்மானிய நாடுகள் பிரஷ்யாவுடன் பொருளாதார வலையால் பின்னப்பட்டன. அந்த வலை வலிமையாகவும் இணைப்பு நெருக்கமாகவும் வளர்ந்தது. 1848-க்குள் பிரஷ்யா ஜெர்மனியில் பொருளாதார மேன்மை பெற்று விட்டது. பின்னர் இதுவே அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தி ஜெர்மானிய இணைவுக்கு வழிவகுத்தது.

## 8. பிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியம்:

1860-ம் ஆண்டுகளில் ஐரோப்பிய அரசியல் நடவடிக்கைகளின் மைய இடமாக விளங்கியது பிரஷ்யாவும், ஜெர்மனியுமே ஆகும். 1861-ல் பிரஷ்யாவின் மன்னராக முதலாம் வில்லியம் பதவி ஏற்றதிலிருந்து பிரஷ்ய அரசியலில் புதிய சகாப்தம் தோன்றியது. இவர் ஹோகன் சோலர்ன் வம்ச மன்னர்களின் கொள்கைகளை அப்படியே பின் பற்றினார். '' இந்த மன்னர் முடி கடவுளிடமிருந்தே வந்தது. கடவுளின் கைகளிலிருந்தே நான் இதனைப் பெற்றுக் கொண்டேன்'' என்றார். ஆனால் ஜெர்மானிய நாடுகளின் ஒற்றுமை உணர்வுக்கு மதிப்பளித்தார். அப்போது பிரஷ்யாவில் இருந்த தேசிய சங்கத்தின் (National Association) கோஷமான ஒற்றுமையாகஇரு ஒற்றுமையாக இரு'' என்பதை இவர் எதிர்க்கவில்லை. இவருடைய தலைமையில் தான் ஐக்கிய ஜெர்மனி உருவானது.

## 9. பிஸ்மார்க் (Otto von Bismark):

பிரஷ்யமன்னர் முதலாம் வில்லியம் ஆட்சியில் மக்கள் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் கேட்டுப் போராடினார்கள். பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத வில்லியம் 1862-ல் பிஸ்மார்க் என்பவரை முதலமைச்சராக நியமித்தார். அளவற்ற துணிவும், ஆற்றலும் பெற்றவர் பிஸ்மார்க். இவர் பதவி ஏற்றது ஜெர்மானிய வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. பிஸ்மார்க் பிரஷ்யாவின் தலைமையில்தான் ஜெர்மனி ஐக்கியப்பட வேண்டும் என்று விரும்பினார். அப்போது ஜெர்மனியில் பரவிய தேசிய இயக்கத்தை மிகக் கவனமாக அணுகினார். ஏனெனில் அந்த இயக்கத்தில் 'அரசியலமைப்பு சார்ந்த அரசு அமைக்கும் எண்ணமும், ஜெர்மானிய ஒற்றுமையை ஏற்படுத்தும் உணர்வும் கலந்திருந்ததுதான் காரணம். இரண்டாவது கோரிக்கைகாக மட்டுமே போராடும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார் பிஸ்மார்க்.

மேலும் ஜெர்மானிய நாடு ஆஸ்திரியாவின் நேரடி, மறைமுகக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்ததால், ஆஸ்திரியாவை ஜெர்மனியைவிட்டு விரட்டினால்தான் ஜெர்மானிய இணைவு நடைபெறும் என்று நம்பினார். இதற்காக இவர் பின்பற்றிய கொள்கைதான் 'இரும்பும் குருதியும் (Blood and Iron) என்பதாகும். ''வெறும் பாராளுமன்ற விவாதங்களினாலோ, பெரும்பான்மை வாக்களிப்பாலோ எந்தப் பிரச்சனையையும் தீர்க்க முடியாது. இரும்பும் குருதியுமே சாதனைகளைப் படைக்கும்'' என்று கூறி பலாத்காரத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அதன்படியே ஜெர்மானிய இணைவிற்காக கீழ்க்கண்ட மூன்று முக்கிய போர்களில் ஈடுபட்டார் பிஸ்மார்க்.

## ஜெர்மானிய இணைவை ஏற்படுத்திய மூன்று போர்கள்:

### 1. டென்மார்க்குடன் போர் (War with Denmark), 1864:

மிகவும் பழைமை வாய்ந்த, மதிப்பு மிகுந்த முடியாட்சியைக் கொண்ட நாடு டென்மார்க் ஆகும். அதன் தென்பகுதியின் எல்லையில் இருந்தவைதான் செலஸ்வீக், ஹோல்ஸ்டீன் (Schlewig, Holstein) என்ற இரு பகுதிகள் ஆகும். அவை டென்மார்க்கின் பகுதிகளாக இல்லையென்றாலும் நீண்டகாலமாகவே டென்மார்க்கைச் சார்ந்தே இருந்தன. செலஸ்விக்கில் டென்மார்க்கியர்கள் அதிகமாகவும், ஹோல்ஸ்டீனில் ஜெர்மானியர் பெரும்பான்மையினராகவும் இருந்தனர். இந்தஇரண்டும் தனித்தனியாகவே இருந்தாலும் பொதுவான மந்திரிசபையே செயல்பட்டு வந்தது. 1815-ம் வருட வீயன்னா ஏற்பாட்டின்படி ஹோல்ஸ்டீன் ஜெர்மானிய நெகிழ் கூட்டமைப்பில் ஒரு அங்கமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

1848-ம் வருட பிப்ரவரிப் புரட்சி இந்த இரண்டு பகுதிகளிலும் பரவியது. டென்மார்க்கிடமிருந்து பிரிந்து செல்ல முயற்சிக்கப்பட்டது. ஆனால் டென்மார்க் மன்னரான மூன்றாம் பிரடரிக் அம்முயற்சியினை முறியடித்தார். பின்னர் 1852-ல் பிரான்ஸ், பிரஷ்யா, ஆஸ்திரியா, ரஷ்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் லண்டனில் கூடி டென்மார்க்கின் எதிர்காலம் பற்றிய 'லண்டன் உடன்படிக்கை' ஒன்றைச் செய்து கொண்டன. அதன்படி வாரிசு இல்லாத டென்மார்க் மன்னர் மூன்றாம் பிரடரிக் காலத்திற்குப்பின் ஒன்பதாம் கிறிஸ்தியான் (Christian IX) என்பவர் அரசாவதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. பிரடரிக் இறந்த பின் 1863-ல் ஒன்பதாம் கிறிஸ்தியான் டென்மார்க்கின் மன்னரானார். ஆனால் இந்த ஏற்பாட்டை பிராங்பர்ட்டிலிருந்த ஜெர்மானிய பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்துடன் செலஸ்விக், ஹோல்ஸ்டீன் பகுதிகள் அகஸ்டன்பர்க் கோமகனான பிரடரிக் என்ற ஜெர்மானியருக்குத்தான் சேர வேண்டும் என்று கூறியது.




ஜெர்மானியரின் தேசிய உணர்வைப் பயன்படுத்தி இந்த இரண்டு பகுதிகளையும் பிரஷ்யாவுடன் இணைக்க திட்டமிட்டு விட்டார் பிஸ்மார்க். அவருடைய எண்ணம் நிறைவேறும் சந்தர்ப்பமும் கிட்டி வந்தது. அரசானவுடன் ஒன்பதாம் கிறிஸ்டியான் செய்த முதல் வேலை செலஸ்விக், ஹோல்ஸ்டீன் பகுதிகளின் சுயாட்சித் தன்மையை மதிக்காமல் ஒரு பிரகடனத்தின் மூலம் அவைகளை டென்மார்க்குடன் இணைத்ததேயாகும். இதனால் இவ்விரு பகுதிகளிலும் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. மேலும் ஜெர்மானிய தேசிய கூட்டமைப்பின் ஒரு பகுதியான ஹோல்ஸ்டீன் [illegible] இணைவுகள் [illegible] விட்டது.

இப்போது பிஸ்மார்க் தனது ராஜதந்திர நடவடிக்கைகளை ஆரம்பித்தார். [illegible] ஆஸ்திரியாவுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். [illegible] இரண்டு [illegible] செலஸ்விக்கையும் ஹோல்ஸ்டீனையும் டென்மார்க்கின் பிடியிலிருந்து விடுவிக்க முடிவு [illegible] டென்மார்க்கு [illegible] இணைக்கும் பிரகடனத்தை ரத்து செய்ய [illegible]

ஒன்பதாம் கிறிஸ்தியானுக்குக் கெடு விதித்தார் பிஸ்மார்க். இந்தக் கெடுவை டென்மார்க் மன்னர் நிராகரிக்கவே ஆஸ்திரிய பிரஷ்யக் கூட்டுப்படை களினால் எவ்வித எதிர்ப்புமின்றி செலஸ்விக்கும் ஹோல்ஸ்டீனும் 1864-ல் கைப்பற்றப்பட்டன. போர் எளிதாகவும் விரைவாகவும் முடிந்துவிட்டது.

டென்மார்க் மன்னர் ஐரோப்பிய அரசுகளிடம் முறையிட்டார். பலன் எதும் இல்லை. நார்வே, ஸ்வீடன் ஆகியவை டென்மார்க்கின் மீது இரக்கப்பட்டன. இங்கிலாந்தின் பால்மெஸ்டன் எதுவும் பேசவில்லை. மூன்றாம் நெப்போலியனோ மெக்ஸிகோ பிரச்சனையில் மூழ்கிக்கிடந்தார். ஜெர்மானியத் தேசியவாதிகளோ, பிஸ்மார்க்கின் செயல்களை ஜெர்மானிய இணைவிற்கான நடவடிக்கைகளாகக் கருதி வாய்மூடி மவுனிகளாக இருந்தனர். ரஷ்யா நடுநிலை வகித்தது. பிஸ்மார்க்கின் செயலைக் கண்டிக்க சர்வதேச சங்கமோ, ஐ.நா. சபையோ அப்போது இல்லை. இவ்வாறு பிஸ்மார்க்கின் நடவடிக்கைகளை ஐரோப்பாவில் கேட்பார் யாரும் கிடையாது.

போர் முடிந்தவுடன் சமாதான உடன்படிக்கையையும் வேகமாகச் செய்து கொண்டார் பிஸ்மார்க், 1864 அக், 30-ல் வியன்னா உடன்படிக்கை டென்மார்க்குடன் செய்து கொள்ளப்பட்டது. அதன் படி போட்டியாளர் அகஸ்டன்பர்க் கோமகன் பிரடரிக் டென்மார்க் அரசராக அங்கீகரிக்கப் பட்டார். பிரஷ்ய, ஆஸ்திரிய அரசர்களுக்காக செலஸ்விக், ஹோல்ஸ்டீன் பகுதிகளின் மீது உள்ள உரிமையை டென்மார்க் விட்டுவிட வேண்டும். இவ்வாறு செலஸ்விக் ஹோல்ஸ்டீன் பகுதிகள் பிரஷ்யா, ஆஸ்திரியாவால் கூட்டாக ஆக்கிரமிக்கப்பட்டது. இந்த ராஜதந்திர வெற்றி முழுவதும் பிஸ்மார்க்கையே சாரும். அதன்பின் 1865 ஆகஸ்ட் 14-ல் 'கேஸ்டீன் ஏற்பாட்டின்'படி (Convention of Gastein) தந்திரமாக செலஸ்விக்கை தான் வைத்துக் கொண்டு, ஜெர்மானியர்கள் அதிகம் வாழ்ந்த ஹோல்ஸ்டீன் பகுதியை ஆஸ்திரியாவுக்குக் கொடுத்தார் பிஸ்மார்க். இந்த இரண்டு பகுதிகளின் எதிர்காலம் மிகத்தெளிவாக்கப் படாததால் இன்னும் இரண்டு ஆண்டுகளில் பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடனே போர் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

## 2. ஆஸ்திரிய பிரஷ்யப் போர் (Seven Weeks War): 1866

ஜெர்மானிய இணைவு ஏற்பட வேண்டுமானால், ஜெர்மானிய சிற்றரசுகளிலிருந்து ஆஸ்திரியாவின் ஆதிக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்று திட்டமாக நம்பினார் பிஸ்மார்க். எனவே ஆஸ்திரியாவுடன் ஒரு போர் அவசியம் தேவை என்பதனை உணர்ந்து செயல்பட்டார் பிஸ்மார்க். தான் ஆரம்பிக்கப் போகும் போரின் போது, ஆஸ்திரியாவைத் தோற்கடிப்பதற்காக தனது ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டார் பிஸ்மார்க்.

## பிஸ்மார்க்கின் இராஜதந்திர நடவடிக்கைகள்

அப்போது பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் ஐரோப்பாவில் சமாதானத்தை நிலை நாட்டும் தூதுவராக தன்னை எண்ணிக் கொண்டு கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். 1865, அக்டோபரில் பயரிட்ஸ் (Biarritz) என்ற இடத்தில் நெப்போலியனைச் சந்தித்தார் பிஸ்மார்க். அவருடன் பேசி அவரது நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொண்டார். ''பிரஷ்யாவும், பிரான்சும் ஐரோப்பாவிலுள்ள ஒத்த கருத்துக்களைக் கொண்ட இரு நட்பு நாடுகளாகும்'' என்று வாய் கூசாமல் பேசினார் பிஸ்மார்க். (ஐந்து வருடங்களுக்குப் பின் இதே பிரான்சைத்தான் செடானில் தோற்கடித்து, மூன்றாம் நெப்போலியனை ஒழித்துக் கட்டினார்). போலந்து கிளர்ச்சியில் ரஷ்யாவுக்கு உதவி செய்ததால் ஆஸ்திரிய-பிரஷ்யப் போரில் நடுநிலை வகிக்க ரஷ்யா ஒப்புக் கொண்டது. நடுநிலை வகிக்க மூன்றாம் நெப்போலியனும் ஒப்புக் கொண்டார். அதற்கு ஈடாக ரைன்நதிப் பகுதிகள் சிலவற்றைக் கொடுப்பதாக வாக்களித்தார் பிஸ்மார்க். ஆஸ்திரியாவின் எதிரியான சார்டீனிய அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்டு, போரின் இறுதியில் சார்டீனியாவுக்கு வெனிஷியாவைக் கொடுப்பதாக வாக்களித்தார். ''வெனிஷியா இத்தாலிக்குக் கிடைக்காத எந்த ஒரு சமாதானத்தையும் செய்து கொள்ள போவதில்லை'' என்று பிஸ்மார்க் அடித்துக் கூறினார்.

### போரின் ஆரம்பம்:

எப்படியாவது ஆஸ்திரியாவின் மீது போர் தொடுக்க நினைத்த பிஸ்மார்க், ஹோல்ஸ்டீனை ஆஸ்திரியா நிர்வகிக்கும்முறை சரியல்ல என்று கூறி ஹோல்ஸ்டீனுக்கு ஒரு படையை அனுப்பினார். கலக்கமடைந்த ஆஸ்திரியா பிரச்சனையை ஜெர்மன் டயட்டில் முறையிட்டது. உடனே, கேஸ்டின் ஏற்பாட்டை ஆஸ்திரியா மீறிவிட்டதாகக் குற்றம் சாட்டினார் பிஸ்மார்க். ஆஸ்திரியா மீது போர் தொடுக்க இப்பிரச்சனையே காரணமானது.

1866 ஜுன்மாதம் ''தற்போது உள்ள ஜெர்மன் டயட் கலைக்கப்பட வேண்டுமென்றும், புதிய தேர்தல் நடத்தப்பட்டு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க தேசிய சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும்'' என்றும் பிஸ்மார்க் கூறினார். உடனே ஆஸ்திரியா ''பிஸ்மார்க்கின் இந்த பிரேரணைகள் 1864ம் வருட வீயன்னா உடன்படிக்கையையும், 1865-ம் வருட கேஸ்டின் ஏற்பாட்டையும் மீறிய செயலாகும்'' என்று குற்றம் சாட்டி பிரஷ்யாவுக்கு எதிராகப் படைகளைத் திரட்டியது. பிஸ்மார்க் நினைத்தது நடந்தது. போர் ஆரம்பமானது.

**போரின் போக்கு:**

ஆஸ்திரியாவுக்கு பவேரியா சாக்சனி, ஹனோவர், பேடன் ஆகிய ஜெர்மானிய நாடுகள் ஆதரவு அளித்தன. ஆஸ்திரியப் படைகளுக்கு பெனடக் (Benedek) என்பவர் தலைமை தாங்கினார். பிரஷ்யப் படைகளுக்கு மோல்ட்கே தலைமை வகித்தார். போர் 1866 ஜன் 16-ல் ஆரம்பம் ஆனது. பிரஷ்யப் படைகள் ஹனோவரியப் படைகளை ஜுன் 28-ல் லாங்கன்சால்சா (Langensalsa) என்ற இடத்தில் தோற்கடித்தது. எவ்வித எதிர்ப்புமில்லாமல் பிரஷ்யப்படைகள் முன்னேறின. ஏழுவாரங்களே நீடித்த இப்போரின் இறுதியில் ஜுலை 3-ல் ஆஸ்திரியப் படைகளை சடோவா (Sadowa) என்ற இடத்தில் முழுமையாகத் தோற்கடித்து, வீயன்னாவை நோக்கி முன்னேறியது பிரஷ்யபடை.

''பிரஷ்யாவும் ஆஸ்திரியாவும் சமமான படைபலம் கொண்டவை என்றும், எனவே போர் ஏற்பட்டால் அது அதிக நாள் நீடிக்கும் என்றும், அப்போது தான் தலையிட்டு பிரான்சுக்காகப் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்று நினைத்திருந்த மூன்றாம் நெப்போலியன் அதிர்ச்சி அடைந்தார். ஏமாற்றமடைந்தார். ஆனால் இச்சூழ்நிலையிலும் சமரசம் செய்து வைக்க முன்வந்தார். தனது தூதரான பெனடிட்டி (Beneditte) என்பவரை நிக்கோல்ஸ்பர்க் (Nickolsburg) என்ற பிரஷ்ய ராணுவ தலைமையிடத்துக்கு அனுப்பினார். ஆனால் பிரான்ஸ் தலையிடுமுன், வீயன்னாவை நோக்கி சென்ற படையை நிறுத்தி ஆஸ்திரியாவுடன் 1866-ஆகஸ்ட் 23-ல் பிரேக் உடன்படிக்கை செய்து கொண்டு போரை முடித்துக் கொண்டார் பிஸ்மார்க்.

**பிரேக் உடன்படிக்கை (Treaty of Prague):**

**பிரேக் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் பின்வருமாறு:**

1. செலஸ்விக்-ஹோல்ஸ்டின் பகுதிகள் பிரஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் செலஸ்விக் பகுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்கள் விரும்பினால் டென்மார்க்குடன் இது இணைக்கப்பட வேண்டும். (ஆனால் இந்த வாக்கெடுப்பு 1919 வரை நடத்தப்படவேயில்லை. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் 106-114 ஷரத்துப் படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டு செலஸ்விக்கின் வடபகுதி மட்டும் டென்மார்க்குடன் இணைக்கப்பட்டது.)

2. ஹனோவர், ஹெஸ்ஸி-கேசல், நாசா, பிராங்பர்ட் ஆகியவைகளை பிரஷ்யா இணைத்துக் கொண்டது. ஒரு வட ஜெர்மானியக் கூட்டமைப்பு நிறுவப்பட வேண்டும். அதனுடன் தென்ஜெர்மானிய நாடுகள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். பழைய ஜெர்மானிய கூட்டமைப்பு கலைக்கப்பட வேண்டும்.

3. இத்தாலிக்கு வெனிஷியா கொடுக்கப்பட்டது.

**போரின் முக்கியத்துவம்:**

1. ஜெர்மானிய இணைவிற்கு இப்போர் வகுத்துக்கொடுத்தது. வடக்கிலிருந்த 22 ஜெர்மானிய அரசுகள் வடக்கு ஜெர்மன் நெகிழ் கூட்டமைப்பு (North German Confederation) ஒன்றை அமைத்துக் கொண்டு பிரஷ்யாவின் அரசரை தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டன. இன்னும் பதினாறு தென்ஜெர்மன் நாடுகள் பிரஷ்யாவின் தலைமையை ஏற்காமல் தனித்து நின்றன. ஆனால் அவை பிரான்சுடன் சேர்ந்துவிடாதபடி மிகக் கருணையுடன் நடந்து கொண்டார் பிஸ்மார்க்.

2. ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டதால் பழைய ஜெர்மன் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது. புதிய கூட்டமைப்பில் ஆஸ்திரியாவின் பலமும், மதிப்பும் வீழ்ச்சியடைந்தது. ஆஸ்திரியா ஜெர்மனியின் தலைமைப் பதவியை இழந்தது.

3. இத்தாலிக்கு வெனிஷியா கொடுக்கப்பட்டதால் இத்தாலிய இணைவிற்கு வழி ஏற்பட்டது.

4. போரில் ஆஸ்திரியா தோற்கடிக்கப்பட்டதால் ஆஸ்திரியாமீது கடுமையான நிபந்தனைகள் விதித்திருக்கலாம். ஆனால் பிஸ்மார்க் ராஜதந்திரத்துடன் நடந்துகொண்டார். ஏனெனில் வருங்காலத்தில் ஆஸ்திரியா ஜெர்மனியுடன் நட்பு நாடாக மலரும் என்று நம்பினார். அதன்படியே நடந்தது.

5. இப்போரின் மூலம் பிஸ்மார்க்கின் புகழ் நாடெங்கிலும் பரவியது. National Hero- வாக ஆனார். பிஸ்மார்க்கின் சகாப்தம் ஆரம்பமானது.

6. பிரஷ்யாவின் வெற்றி பிரான்சுக்கு பேரிடியாகும். ''சடோவா போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டது ஆஸ்திரியா அல்ல. பிரான்சே'' என்று கூறப்பட்டது. பிரஷ்யாவின் மின்னல் வேக வளர்ச்சியைக் கண்டு பிரான்ஸ் பொறாமைப்பட்டது. பயமடைந்தது. அதுவே பிராங்கோ பிரஷ்யப் போர் ஏற்பட வழிவகுத்தது.

## 3. பிராங்கோ-பிரஷ்யப் போர் (1870-71)

**காரணங்கள்:**

I. ஆஸ்திரியப் பிரஷ்யப் போரில் பிரஷ்யா பெற்ற வெற்றி மூன்றாம் நெப்போலியனுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''பிரஷ்யாவின் வெற்றி, தான் எப்பொழுதும் ஆதரித்து வரும் தேசியக் கொள்கைகளுக்குக் கிடைத்த

பெரிய வெற்றியாகும்'' என்று கூறினார். ஆனால் ஜெர்மானிய நாடுகள் இன்னும் மூன்று பிரிவுகளாக இருப்பதால் தனது இராணுவ வலிமையைக் கொண்டு தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்று நம்பினார்.

2. பிரஷ்யாவின் வலிமை நாளுக்கு நாள் பெருகி வருவதைக் கண்டு அச்சமடைந்தார். ஐக்கிய ஜெர்மனி ஏற்படுவதை நெப்போலியன் விரும்ப வில்லை. பிரஷ்யாவுடன் போரிட்டு ஜெயித்து விட்டால் ஐக்கிய ஜெர்மனி ஏற்படுவதைத் தடுத்துவிடலாம் என்று நம்பினார்.

3. மேலும் மூன்றாம் நெப்போலியன் வயதாகி நோய்வாய்ப் பட்டிருந்தார். அரசியல் நடவடிக்கைகள் எல்லாம் மந்திரிகள் மூலமே நடைபெற்றன. தனது வெளிநாட்டு, உள்நாட்டுக் கொள்கைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்ப போர் அவசியம் தேவை என்று நினைத்தார் நெப்போலியன்.

4. நெப்போலியன் பிரஷ்யாவிலிருந்த தனது தூதர் பெனடிட்டி மூலம், ரைன் நதிப்பகுதியில் சில பகுதிகளையும், பின்னர் பெல்ஜியத்தையும், லக்சம்பர்க் கோமக நாட்டையும் வசப்படுத்த எடுத்த முயற்சிகளை பிஸ்மார்க் தனது ராஜதந்திரத்தால் தோற்கடித்தார். இவ்வாறு ஐரோப்பாவில் தான் இழந்த மரியாதையையும், வலிமையையும் நிலைநாட்ட எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதால் பிரஷ்யா மீது போர் தொடுக்க விரும்பினார்.

5. அதே சமயம் பிஸ்மார்க், ஜெர்மானிய இணைவிற்காக பிரான்ஸ் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். பிரான்சின் தோல்விதான் பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மானியப் பேரரசை ஏற்படுத்தும் என்று நம்பினார். எனவே பிரான்சின் மீது போர் தொடுக்கத்தக்க சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தார். சீக்கிரமே அந்த சந்தர்ப்பமும் வந்தது.

**6. ஸ்பானிய அரியணை பிரச்சனை:** போருக்கான ஒரு காரணத்தை பிரான்சும், பிரஷ்யாவும் எதிர்நோக்கியிருந்த போதுதான் 'ஸ்பானிய அரியணை பிரச்சனை' தோன்றி போர் ஏற்பட வழிவகுத்தது. ஸ்பானிய அரசி இசபெல்லாவின் (Queen Isabella) ஆட்சிக் கெதிராக கிளர்ச்சி ஏற்பட்டது. 1868 செப் 30-ல் இசபெல்லா நாட்டை விட்டு ஓடிவிட்டார்: அவருக்கு அடுத்த வாரிசு யார் என்று முடிவு செய்ய வேண்டியிருந்தது. ஸ்பானிய அரியணைக்கு ஏழு பிரேரணைகள் வந்தாலும், பிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியத்தின் தூரத்து உறவினரான, ஹோகன் சோலன் வம்சத்தைச் சார்ந்த கத்தோலிக்கரான லியோபோல்ட் (Prince Leopold) என்பவரை தன் நாட்டுக்கு மன்னராகும்படி ஸ்பானிய பாராளுமன்றம் கேட்டுக் கொண்டது.

இந்த முடிவை பிஸ்மார்க், ரூன், மோல்ட்கே ஆகியோர் "அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பிரஷ்யாவுக்கு நன்மை பயக்கும்" ஒன்றாகக் கருதினர். எனவே லியோபோல்டை ஸ்பானிய அரியணையை ஏற்றுக் கொள்ள சம்மதிக்க வைத்துவிட்டு அச்செய்தியை பெர்லினிலிருந்து பிரான்சுக்கு தெரிவித்தனர். செய்தி கிடைத்ததும் பிரெஞ்சு வெளி உறவு அமைச்சர் டி கிராமண்ட் (De Gramont) கடுமையாக எதிர்த்தார். பிரஷ்யாவும் ஸ்பெயினும் சேர்ந்தால் அது 'ஐரோப்பாவின் சக்தி சமநிலை'யைப் பாதிக்கும் என்று நெப்போலியன் கருதினார். 1870 ஜூலையில் பிரெஞ்சு சட்டமன்றத்தில் தலைமை அமைச்சர் ஆலிவியர் (Ollivier) "வேட்பாளர் லியோபோல்ட் வாபஸ் பெறப்படாவிட்டால் அது போருக்கான காரணமாக எடுத்துக் கொள்ளப்படும்" என்று அறிவித்தார். போர் மேகம் சூழ்ந்தது. ஆனால் சமாதான முயற்சியின் விளைவாகவும் பிரஷ்ய மன்னர் வில்லியம் கேட்டுக் கொண்டதனாலும், லியோபோல்ட் வேட்பாளராக இருக்கும் தனது எண்ணத்தைக் கைவிட்டார். "சடோவா தோல்வி பழி தீர்த்துக் கொள்ளப்பட்டது" என்று பெருமையுடன் கூறினார் தியர்ஸ்.

## எம்ஸ் தந்தி (Ems Telegramme):

அதன்பின் தான் தற்கொலைக்குச் சமமான ஒரு தவறை பிரான்ஸ் செய்தது. பிரச்சனையை இத்துடன் விட்டுவிடக்கூடாது என்றும் பிரஷ்யா மீது ஒரு ராஜதந்திர வெற்றிபெற வேண்டுமென்றும் நெப்போலியன் விரும்பினார். எனவே "எதிர்காலத்தில் எந்த சமயத்திலும் லியோ போல்டை ஸ்பானிய அரியணைக்கான வேட்பாளராக நிறுத்துவதில்லை" என்ற வாக்குறுதியை பிரஷ்ய மன்னரிடமிருந்து பெற நினைத்தார். அந்த வாக்குறுதியைப் பெறுவதற்காக பிரஷ்யாவிலிருந்த தனது தூதர் பெனடிட்டியை பிரஷ்ய மன்னர் வில்லியத்தைச் சந்திக்கும் படி கேட்டுக் கொண்டார்.

பெனடிட் எம்ஸ் என்ற இடத்தில் தங்கியிருந்த பேரரசரை 1870 ஜூலை 13-ல் சந்தித்தார். 'அப்படி ஒரு வாக்குறுதியை அளிக்க முடியாது' என்று வெளிப்படையாகவே கூறிவிட்டார் பேரரசர் வில்லியம். அதே நேரம் லியோபோல்டும் வாபஸ் பெற்றுவிட்டதால் சமாதானம் ஏற்பட்டது. ஆனால் பிஸ்மார்க் போரின் அவசியத்தை உணர்ந்தார். ஜெர்மானிய இணைவிற்கு பிரான்சுடனான போர் தவிர்க்கமுடியாது என நினைத்தார். எனவே அரசர் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிடிக்காததால் ராஜினாமா செய்ய நினைத்தார்.

அன்று மாலை பெர்லினில் ஒரு ஹோட்டலில் ஆதுசாகாக்களான மோல்ட்கே , ரூன் ஆகியோரைச் சந்தித்து தனது ராஜினாமா செய்யும் முடிவைத் தெரிவித்தார். அப்போதுதான்

எம்ஸிலிருந்து பிஸ்மார்க்குக்கு பேரரசர் அடித்த தந்தி வந்தது. அதில் 'பெனடிட்டியின் பிரேரணைகள் ஏற்க முடியாதது என்று சொல்லிவிட்டேன். லியோபோல்ட் வாபஸ் பெற்று விட்டதால் பிரச்சனை முடிந்தது. இனி இது பற்றி பேச சந்திக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி விட்டேன்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனைப் படித்த பிஸ்மார்க் இது 'பிரான்சுக்கு நிபந்தனையின்றி சரணடைவதைப் போன்றது' என்று நினைத்து, தான் இருந்த சாப்பாட்டு மேஜையில் வைத்து தந்தியின் வாசகங்களைத் திருத்தி எழுதி வெளியிட்டார்.

''பிரெஞ்சுத் தூதர் பிரஷ்ய மன்னரை இழிவு படுத்தி விட்டதாக ஜெர்மானிய மக்கள் உணரும்படி ஜெர்மனியிலும், பிரெஞ்சுத் தூதரைப் பார்க்க பிரஷ்ய மன்னர் மறுத்து அவரை அவமதித்து விட்டதாக பிரான்சிலும்'' பரவும்படி செய்தியை திரித்து வெளியிட்டார். பிரான்சிற்கு இச்செய்தி போய் சேர்ந்தவுடன் செய்தி உண்மையா என்று கூடத் தெரிந்து கொள்ளாமல் பிரான்ஸ் இழிவு படுத்தப்பட்டு விட்டதாக தலைமை அமைச்சர் ஆலிவியர் நினைத்தார். பிரஷ்யா மீது போர் தொடுக்க வேண்டுமென்று பிரெஞ்சு மக்கள் நினைத்தனர். 1870- ஜூலை 15-ல் பிரான்ஸ் பிரஷ்யா மீது போர் தொடுத்தது. இவ்வாறு சாப்பாட்டு மேஜையில் வைத்து பிஸ்மார்க் திருத்தி எழுதிய தந்தி வாசகங்கள் பிராங்கோ-பிரஷ்யப்போருக்கும், பின்னர் பல நிகழ்ச்சிகளின் விளைவாக ஏற்பட்ட முதல் உலகப் போருக்கும் வழி வகுத்து உலக வரலாற்றின் போக்கையே மாற்றி விட்டதென்றால் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா?

## போரின் போக்கு: (Course of the War):

பிரஷ்யப் படைகளுக்கு திறமைமிக்க தளபதி வான் மோல்ட்கே தலைமை தாங்கினார். பிரெஞ்சுப் படைகளுக்கு மூன்றாம் நெப்போலியனே நேரடியாகத் தலைமை தாங்கினார். பிரெஞ்சுப் படையில் போர்த் தலைமையில் ஒற்றுமையோ, போர்த்திட்டங்களோ இல்லாதிருந்தது. மேலும் பிரெஞ்சுப்படை வலிமையற்றதாகவும் உற்சாகமற்றதாகவும் காணப்பட்டது. எனவே பிரஷ்யப்படைகள், ஆரம்பத்திலிருந்தே வெற்றி பெற்றன. 1870, ஆகஸ்ட் 6-ல் அல்சேய்ஸிலுள்ள வொர்த் (Worth) என்ற இடத்தில் பிரெஞ்சுப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. அப்பகுதியிலிருந்த படைத்தளபதி மெக்மோகன் (Macmohan) தலைமையிலிருந்த படைகள் விரட்டியடிக்கப்பட்டன. பின்னர் கிரோவிலோட் (Graveloot) என்ற இடத்திலிருந்த பிரெஞ்சுப் படைத்தளபதி பசைனின் (Bazaine) படைகள் சுற்றி வளைக்கப்பட்டன. அதன்பின் செப்டம்பர் 1-ல் பிரெஞ்சுப் படைகள் செடான் (Sedan) என்ற இடத்தில் தாக்கப்பட்டது. மெக்மோகன்

காயமடைந்து விட்டார். மூன்றாம் நெப்போலியன் தனது 1... படைவீரர்களுடன் பிரஷ்யப்படைகளிடம் சரணடைந்தார்.

ஆனாலும் போர் முடியவில்லை. நெப்போலியன் சரண... செய்தியால் பிரான்சில் குழப்பம் ஏற்பட்டது. அதன்விளை... முடியாட்சி ஒழிக்கப்பட்டு ஒரு 'தேசியப் பாதுகாப்பு அரசா... அமைக்கப்பட்டது. அந்த அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்... பிரஷ்யப்படைகள் பாரிசை முற்றுகையிட்டன. முற்றுகை 1870 செப்... முதல் 1871 ஜனவரி வரை நீடித்தது. பாரிசு சரணடைந்ததுடன் ... முடிவடைந்தது. போரின் முடிவில் பிராங்பர்ட் ஒப்ப... கையெழுத்தானது.

### பிராங்பர்ட் உடன்படிக்கை (Treaty of Frank furt): 1871 மே 10

பிராங்பர்ட் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் மிகவும் கடுமை... தாகவும், இரக்கமற்றும் காணப்படுகிறது. இந்த உடன்படிக்கையின்...

1. பிரான்சிடமிருந்து அல்சேஸ், லொரைன் (Alsace, Lorra... ஆகிய பகுதிகளை பிரஷ்யா பெற்றுக் கொண்டது.

2. போர் இழப்பீட்டுத் தொகையாக பிரான்ஸ் 500 கோ... பிராங்குகள் பிரஷ்யாவுக்குக் கொடுக்க வேண்டும்

3. போர் இழப்பீட்டுத் தொகை முழுவதையும் கொடுக்கும் வ... முப்பது ஆயிரம் ஜெர்மானிய வீரர்கள் பிரான்சில் நிறுத்தி வைக்கப்படு...


### போரின் முக்கியத்துவம்:

1. பிராங்கோ-பிரஷ்யப் போரின் இறுதியில் தான் ஜெர்மானி... ஐக்கியம் நிறைவடைந்தது. வடஜெர்மன் நாடுகளுடன் தென் ஜெர்மன் நாடுகள் இணைக்கப்பட்டு 'ஐக்கிய் ஜெர்மனி' பிரகடன... படுத்தப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய ஜெர்மனியின் பேரரசராக 'கெய்சர்' என்ற பட்டத்துடன் முதலாம் வில்லிய... வெர்செய்ல்ஸ் மாளிகையிலுள்ள கண்ணாடி மாளிகையில் பிரகடன... படுத்தப்பட்டார். பிஸ்மார்க் ஐக்கிய மடைந்த ஜெர்மனியின் முதல் சான்சலர் ஆனார்.

2. இப்போரின் இறுதியில் தான் இத்தாலிய இணைவும் முற்று... பெற்றது.

3. தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் நாட்டில் குழப்பம் ஏற்பட்ட... அங்கு மூன்றாவது 'பிரெஞ்சுக் குடியரசு' தோன்றியது.

4. போரின் இறுதியில் பிரான்சிடம் ஜெர்மனி இரக்கமில்லாம... நடந்து கொண்டதால், ஜெர்மனி மீது பிரஞ்சு மக்களுக்கு வெறுப்பும் பழி...


1871-ல் ஐரோப்பா
ரஷ்யா
மாஸ்கோ
கருங்கடல்
போலந்து
பால்டிக்
ஜெர்மனி
பெர்லின்
டென்மார்க்
கோபன்ஹேகன்
நார்வே
ஸ்வீடன்
வடகடல்
ஹாலந்து
ஆம்ஸ்டர்டாம்
பெல்ஜியம்
இங்கிலாந்து
லண்டன்
அயர்லாந்து
பிரான்ஸ்
பாரிஸ்
ஆஸ்திரியா - ஹங்கேரி
வியன்னா
புடாபெஸ்ட்
இத்தாலி
ரோம்
ருமேனியா
செர்பியா
பல்கேரியா
அல்பேனியா
ஸ்பெயின்
போர்ச்சுகல்
மத்தியதரைக்கடல்
JD

வாங்கும் உணர்வும் ஏற்பட்டது. அதுவே முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணமானது.

3. பிரான்ஸ் ஐரோப்பிய அரசியலில் தனது முக்கியத்துவத்தை இழந்து விட்டது. பிஸ்மார்க் ஐரோப்பாவில் மதிப்பும், மரியாதையும் பெற்ற தலைவரானார். "Europe found that she had lost a mistress, but had gained a master. The Centre of European gravity shifted from Paris to Berlin"

இவ்வாறு ஜெர்மானிய இணைவிற்கு பிஸ்மார்க் தீட்டிய திட்டங்கள் யாவும் இறுதியில் வெற்றியை அளித்தது. ஜெர்மானிய இணைவு 'தனிநபர் ஒருவரின் சாதனை' என்று கூறும் அளவிற்கு பிஸ்மார்க் அயராது பாடுபட்டார். ஜெர்மானிய இணைவுடன் உலக வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பித்தது என்றே கூறலாம்.

# 12. பிஸ்மார்க்

## (OTTO VON BISMARK - *1815 -1898)*

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த ராஜதந்திரி ஆட்டோ வான் பிஸ்மார்க் ஆவார். 1862-ல்பிரஷ்யாவின் தலைமை அமைச்சராக நியமிக்கப் பட்டார். அப்போது பிரஷ்யா பல பிரச்சனைகளை எதிர்நோக்கியிருந்தது. பிரஷ்ய மன்னர் முதலாம் வில்லியத்தின் எதேச்சதிகாரத்தை எதிர்த்து மக்கள் போராடி வந்தனர். அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் கேட்டு மன்னரிடம் கோரிக்கைகளை சமர்ப்பித்தனர். இதனால் பிரஷ்யாவில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. இச்சூழ்நிலையில் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட பிஸ்மார்க் தனது ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம், நிலைமையைச் சமாளித்து முடியாட்சியைப் பலப்படுத்தினார். பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மானிய நாடுகளை இணைத்து வலிமை பொருந்திய ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கினார். 1862 முதல் 1890 வரை ஐரோப்பிய அரசியலில் மாபெரும் சக்தியாக விளங்கிய பிஸ்மார்க் நவீன ஜெர்மனியை உருவாக்கியவர் என்று புகழப்படுகிறார்.

**பிஸ்மார்க்கின் வாழ்க்கைக் குறிப்பு:**

பிஸ்மார்க் 1815-ஏப்ரல் 1-ம் தேதி பிராண்டன் பர்க்கிலுள்ள 'சோன்ஹாசன்' (Schonhausen) என்ற சிறிய ஊரில் ஒரு உயர்குடி

செல்வந்தரின் மகனாகப் பிறந்தார். பெர்லின், கோடிஞ்சன் (Gottingen) ஆகிய பல்கலைக்கழகங்களில் சட்டக்கல்வி கற்றார். அப்போது ஆயுதங்களை உபயோகிப்பதிலும், குதிரை ஏற்றத்திலும் தேர்ச்சி பெற்றார். படிப்பை முடித்த பின் பிரஷ்ய நாட்டு ஆட்சிப் பணித்துறையில் சேர்ந்தார். பின்னர் அந்த வேலையை விட்டு விட்டு அரசியலில் ஈடுபட்டார். 1845-ல் பொமரேனிய மாநில சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். 1849ல் பிரஷ்ய நாட்டு கீழ்சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 1859 முதல் 1862 வரை பிரஷ்யாவின் தூதுவராக ரஷ்யாவிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் பணிபுரிந்தார். 1862-ம் வருட இறுதியில் பாரிசில் பிரஷ்ய நாட்டின் தூதுவராக நியமிக்கப்பட்டார்.



ஆட்டோ வான் பிஸ்மார்க்

**பிரஷ்யாவின் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றல்** (1862-73):

1861-ல் பிரஷ்யாவின் அரசராகப் பதவி ஏற்றார் முதலாம் வில்லியம். அதே ஆண்டு பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் 'தாராள சீர்திருத்தவாதிகள்' பெரும்பான்மை பெற்றார்கள். அவர்கள் முதலாம் வில்லியமும் அவரது ராணுவ மந்திரி ரூன் (Roon) என்பவரும் செயல்படுத்த நினைத்த இராணுவச் சீர்திருத்தங்களை எதிர்த்தார்கள். 1862 செப்டம்பரில் கூடிய பாராளுமன்றத்தில் சீர்திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட போது 308-க்கு 11 என்ற பெரும்பான்மை வாக்குகளால் அதனைத் தோற்கடித்தனர். மனது உடைந்த போன பேரரசர்

வில்லியம் முடிதுறந்துவிட நினைத்தார். ஆனால் மந்திரி ரூன் மன்னருக்குத் தைரியமளித்தார். அப்போது அடால்ப் ஹோகன்லோ (Adolph Hohenlohe) என்பவர் தலைமையில் இருந்த மந்திரி சபையை டிஸ்மிஸ் செய்துவிட்டு பாரிசிலிருக்கும் பிரஷ்யத் தூதுவர் பிஸ்மார்க்கின் தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்குமாறு அரசருக்கு அலோசனை கூறினார் ரூன்.

அதன்படி உடனே பெர்லினுக்கு வருமாறு பிஸ்மார்க்குக்கு தந்தியடிக்கப்பட்டது. ஓடோடி வந்த பிஸ்மார்க் அரசருக்குத் தைரிய மூட்டினார். பாராளுமன்ற எதிர்ப்புக்குத் தலை சாய்க்க வேண்டிய அவசியமில்லை என்றார். ''பாராளுமன்ற எதிர்ப்பினால் முடியரசு வீழ்ந்துவிட அனுமதிப்பதை விட அரசருடன் அழிந்து போகவும் தயாராக இருக்கிறேன்'' என்று வீரவசனம் பேசினார். எனவே பிஸ்மார்க் பிரஷ்யாவின் தலைமை அமைச்சராக 1862-ல் நியமிக்கப்பட்டார். இறுதியில் அரசனும் பிஸ்மார்க்கும் ஜெயித்தார்கள். பாராளுமன்றம் அவமானப்படுத்தப் பட்டது.

## பிஸ்மார்க்கின் கொள்கைகள்:

1. பிஸ்மார்க் ஜனநாயக, தராள முற்போக்குக் கொள்கைகளுக்கு எதிரானவர். பாராளுமன்றத்தை அறவே வெறுத்தார். ''இன்றைய பெரும் பிரச்சனைகளை பெரும்பான்மை வாக்குகளாலும் பேச்சுகளாலும் முடிவு செய்ய முடியாது. ஆனால் இரத்தத்தாலும் இரும்பு இதயத்தாலும்தான் முடிவு செய்ய முடியும்'' என்று பிஸ்மார்க் கூறினார். (The greatest question of the day is not to be decided by speeches and by majority votes but by blood and iron). இதுவே அவரது எதிர்கால நடிவடிக்கைகளின் அடிப்படைக் கொள்கையாக அமைந்தது. அதாவது 'வலிமையே வெல்லும்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார் பிஸ்மார்க்.

2. பிஸ்மார்க் முடியாட்சியின் ஆதரவாளர். தெய்வீக உரிமைக் கொள்கையின்படி செயல்படும் மன்னராட்சியின்மீது நம்பிக்கை கொண்டிருந்தார். பிரஷ்யாவின் வலிமைக்கும், பெருமைக்கும் காரணமே மன்னராட்சிதான் என்பது அவருடைய வாதம். எனவே தான், மன்னரின் அதிகாரங்களையும் கொள்கைகளையும் செயல்படுத்த தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். 'அரசனின் வேலைக்காரன்' என்றே தன்னைக் கருதிக் கொண்டார்.

3. பிஸ்மார்க் பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மானிய நாடுகளை இணைப்பதைத் தனது குறிக்கோளாகக் கொண்டார். ஜெர்மானிய ஐக்கியத்தை பிரஷ்யா மட்டும் தான் உருவாக்கமுடியும் என்பது

பிஸ்மார்க்கின் அசைக்கமுடியாத நம்பிக்கை. ''ஜெர்மானிய இணைவு என்பது பிரஷ்ய அதிகாரத்தின் விரிவாக்கமே'' என்று கூறினார். எனவேதான் 'நாமெல்லாம் பிரஷ்யர்கள், பிரஷ்யர்களாகவே இருப்போம்' என்றார்.

## 1. பிஸ்மார்க்கும் போலந்துக் கிளர்ச்சியும்: 1863

போலந்து ஐரோப்பிய நாடுகளால் பங்குபோடப்பட்டிருந்தாலும், போலந்து மக்களிடம் காணப்பட்ட சுதந்திர உணர்வு மறைந்துவிடவில்லை. ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள போலந்தில் 1848-ம் வருடத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அது நசுக்கப்பட்டது. ரஷ்ய சார் இரண்டாம் அலெக்சாந்தர் பதவி ஏற்றபின் 1863-ல் போலந்து மக்களுக்குச் சில சீர்திருத்தங்களைச் செய்தார். ஆனால் அவை நடுத்தர, உயர்நிலை வர்க்கத்தினரைப் பாதித்தது. ரஷ்ய ராணுவச் செலவையும் போலந்து மக்கள் மீது சுமத்திய போது பெரும் கிளர்ச்சி வெடித்தது. ஐரோப்பாவே பரபரப்பானது. இங்கிலாந்தில் போலந்து கிளர்ச்சியாளர்களின் மீது இரக்கம் ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகளின் தலையீடு இல்லாவிட்டால் இக்கிளர்ச்சியை எளிதில் அடக்கிவிடும் நிலையில் இருந்தது.

பிஸ்மார்க் போலந்து கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவளிக்க மறுத்தார். பிரஷ்ய தேசியவாதிகள், பிரஷ்ய சட்டமன்றம் ஆகியோர் வேண்டுகோள் விடுத்தும் பிஸ்மார்க் கேட்கவில்லை. சார் இரண்டாம் அலெக்சாந்தருக்கு தனது முழு ஆதரவை அளித்தார். போலந்து கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது. ரஷ்யாவுடன் பிஸ்மார்க் செய்து கொண்ட நல்லுறவுதான் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் அவர் பின்பற்றப்போகும் கொள்கைகளின் தூண் போல விளங்கியது.

## 2. பிஸ்மார்க்கும் ஜெர்மானிய ஐக்கியமும்: 1862-1871

வெஸ்ட்பேலியா உடன்படிக்கையின் படியும் 1815-ம் வருட வியன்னா ஏற்பாட்டின்படியும் தனித்தனியே பிரிக்கப்பட்ட ஜெர்மானிய நாடுகளை பிரஷ்யாவின் தலைமையில் இணைக்க அரும்பாடுபட்டார் பிஸ்மார்க். ஜெர்மானிய இணைவிற்குத் தடையாக இருப்பது ஆஸ்திரியா தான் என்று தெரிந்துகொண்டு, ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தை ஜெர்மானிய நாடுகளிலிருந்து ஒழித்துக்கட்டத் திட்டமிட்டு செயல்பட்டார். ஜெர்மானிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக டென்மார்க், ஆஸ்திரியா, பிரான்ஸ், ஆகிய நாடுகளுடன் போரிட்டார். (மேலும் விபரங்கட்கு 'ஜெர்மானிய இணைவு' அத்தியாயத்தைப் பார்க்கவும்) இணைக்கப்பட்ட ஜெர்மனியின் முதல் சான்சலராக 1871-ல் பிஸ்மார்க் பதவி ஏற்றார். ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கிய பிஸ்மார்க் 'பிரஷ்யாவின் இரும்பு மனிதர்' என்று அழைக்கப்படுகிறார்.

## 3. பிஸ்மார்க்கின் உள்நாட்டுக் கொள்கை:

*(1871 முதல் 1890 வரை)*

1871-ல் ஜெர்மனியின் முதலாவது சான்சலராகப் பதவி ஏற்ற பிஸ்மார்க் உள்நாட்டில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். நாட்டில் அமைதி, அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### 1. அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் (Constitutional reforms):

1871 ஏப்ரல் 16-ம் தேதி ஜெர்மனிக்கு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அப்போது ஜெர்மானியப் பேரரசு பிரஷ்யா, பவேரியா, சாக்சனி, வுட்டம்பர்க் ஆகிய நான்கு முடியரசுகளையும் ஏழு சிற்றரசுகளையும், பதினொன்று கோமக ஆட்சிப் பகுதிகளையும், மூன்று நகரங்களையும் கொண்டிருந்தது. இவை எல்லாம் சேர்ந்தது தான் கூட்டாட்சிக் குழு (Federal League) ஆகும்.

பிஸ்மார்க் முடியாட்சியைத்தான் தேசியக் கூட்டாட்சி அரசாங்கமாக அங்கீகரித்தார். அரசர்தான் கூட்டாட்சி அரசாங்கத்தின் நிர்வாகத் தலைவர். வெளிநாட்டுறவு, போர் பிரகடனம் செய்தல், அமைதி உடன்பாடு செய்தல் போன்ற அதிகாரங்கள் அரசரிடமே இருக்கும். அரசரே சான்சலரை நியமிப்பார். அரசாங்கக் கொள்கைகளை நாட்டில் செயல்படுத்தும் பொறுப்பு சான்சலரையே சாரும்.

ஜெர்மானியப் பாராளுமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டது. பந்தெஸ்ரட் (Bundesrat) என்பது மேல் சபை ஆகும். ரெய்ஸ்டாக் (Reichstag) என்பது கீழ்சபை ஆகும். மேல் சபை மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கிறது. (தற்கால அமெரிக்க செனட் சபை போல). அதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 58 ஆகும். அதில் பெரும்பான்மை பிரதிநிதித்துவம் (17 உறுப்பினர்கள்) பிரஷ்யாவுக்கே அளிக்கப்பட்டது. இச்சபை மிகவும் வலிமைமிக்கது. எந்த அரசியலமைப்பு மாற்றத்தையும் ரத்து செய்யும் (Veto Power) அதிகாரம் பிரஷ்யாவுக்கு உண்டு. வெளி உறவுக் கொள்கையில் மாற்றம் செய்வதற்கோ ராணுவ அமைப்பை மாற்றுவதற்கோ அல்லது அதன் வலிமையைக் குறைப்பதற்கோ இச்சபைக்கு அதிகாரம் கிடையாது. கீழ்சபை உறுப்பினர்கள் வயதுவந்த ஆண்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 397 ஆகும். இச்சபைக்கு சட்டம் இயற்றுதல், பேரரசருக்கு ஆலோசனை வழங்குதல் ஆகிய பணிகள் உண்டு. இதில் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட மசோதாக்கள் தோற்கடிக்கப்பட்டால் கூட்டாட்சி சான்சலரோ அவரது மந்திரி சபையோ ராஜினாமா செய்ய வேண்டியதில்லை.

நீதித்துறை அதிகாரங்கள் ரெய்சரீச் (Reichareich) என்ற கூட்டாட்சி உயர்நீதிமன்றத்திடம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு பிஸ்மார்க் ஜெர்மனிக்கு ஒரு நிலையான அரசியலமைப்பை உருவாக்கினார்.

## 2 உள் நாட்டு முன்னேற்றம்:

ஜெர்மனியின் உள்நாட்டு முன்னேற்றத்திற்காக பிஸ்மார்க் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஜெர்மானிய நாடுகளையும், மக்களையும் ஒன்றுபடுத்தும் பல சட்டங்களை இயற்றினார். ஜெர்மானியப் பேரரசிலுள்ள வெவ்வேறு நாடுகளில் காணப்பட்ட தனித்தனிச் சட்டங்களை ஒழித்து எல்லா ஜெர்மன் நாடுகளுக்கும் ஒரே சீரான சட்டத்தை ஏற்படுத்தினார். ஜெர்மன் நாடுகளிலுள்ள பல்வேறு நாணயங்களை ஒழித்து ஒரே சீரான நாணய முறையை புகுத்தினார். 1873-ல் ஒரு ரயில்வே திட்டத்தை வகுத்து எல்லா ஜெர்மன் நாடுகளையும் இருப்புப் பாதைகளால் இணைத்தார். பேரரசில் உள்ள எல்லா தந்தி, தபால் ராணுவ அமைப்புகளை ஒன்றோடொன்று இணைத்தார்.

1875-ல் வங்கிகள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தார் பிஸ்மார்க். 1876-ல் 'இம்பீரியல் வங்கி' ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவை தவிர. ஜெர்மானிய ராணுவ பலத்தையும் அதிகரித்தார். கட்டாய ராணுவ முறையை நாடெங்கும் அமுலாக்கினார். ராணுவத்திற்கு வேண்டிய செலவை பாராளுமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்த போது 'யுத்த கால நிதி' மூலம் பணம் திரட்டினார். இவ்வாறு உள்நாட்டில் ஒற்றுமையுணர்வை வளர்த்து முன்னேற்றமடையச் செய்தார் பிஸ்மார்க்.

## 3. பிஸ்மார்க்கும் கத்தோலிக்கத் திருச்சபையும்:
### (குல்டுர்காம்ப் (Kulturkampf) – நாகரிகக் காப்பு போராட்டம்)

பிஸ்மார்க்கிற்கும், ஜெர்மானிய ரோமன் கத்தோலிக்கர்கட்கும் இடையே பகைமை இருந்து வந்தது. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. புரட்டஸ்தாந்துகள் பெரும்பான்மையாக உள்ள ஜெர்மனியின் இணைவை கத்தோலிக்கர்கள் விரும்பவில்லை. ஆஸ்திரிய பிரஷ்யப் போரின் போது வெளிப்படையாகவே ஆஸ்திரியாவுக்கு போப் ஆதரவு அளித்தார். ஆஸ்திரிய வெற்றிக்காக போப்பும், கத்தோலிக்கர்களும் தேவாலயங்களில் ஆராதனைகள் நடத்தினர். இதனை பிஸ்மார்க் விரும்பவில்லை.

2. ஜெர்மானிய நாடுகளின் இணைவிற்குப் பிறகும் ஜெர்மனியின் உள்நாட்டு வளர்ச்சிக்குப் போப்பாண்டவரின் அதிகாரம் ஒரு தடையாகவே இருந்தது. மேலும் பிஸ்மார்க்கின் அரசியல்

கொள்கைகளுக்கு எதிராக 'மையம்' (The Center Party) என்ற அரசியல் கட்சியை ஆரம்பித்து கத்தோலிக்கர்கள் போராடி வந்தனர்.

இவ்வாறு பிஸ்மார்க்கிற்கும், ஜெர்மானிய ரோமன் கத்தோலிக்கருக்கு மிடையே பகைமை ஏற்பட்டது. எனவே கத்தோலிக்கத் திருச்சபையை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர பிஸ்மார்க் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். போப்பாண்டவரை ஜெர்மானிய அரசாங்கத்தின் எதிரியாகக் கருதினார். கத்தோலிக்கர்களுக்கு எதிரான தனது நடவடிக்கைகளுக்கு 'குல்டுர்காம்ப்' என்று பெயரிட்டார். அதற்கு 'நாகரிகத்தைக் காப்பதற்கான போராட்டம்' என்று அர்த்தம் ஆகும்.

## கத்தோலிக்கர்கட்கு எதிரான நடவடிக்கைகள்:

1871-ம் ஆண்டு போப்பாண்டவரின் அதிகாரத்திற்குக் கட்டுப்படாத ஒரு சிறு கத்தோலிக்கப் பிரிவினர் மியுனிச்சில் கூடினர். எனவே அவர்களை மதத்திலிருந்து தள்ளிவைத்து போப் ஒன்பதாம் பயஸ் (Pope Pius IX) ஆணை பிறப்பித்தார். ஆனால் அந்த வாடிகன் ஆணையைச் செயல்படுத்த மறுத்தார் பிஸ்மார்க். அத்துடன் 1871-டிசம்பரில் ஜெர்மானிய பாராளுமன்றத்தின் கீழ்சபையான ரெய்ஸ்டாக் 'பாதிரியார்கள் தங்கள் மதப் பிரசங்கத்தின் போது அரசியல் பேசக்கூடாது' என்று கட்டுப்பாடு விதித்தது.

1872-ல் கார்டினல் ஹோகன் லோஹி என்பவர் ஜெர்மன் தூதுவராக வாடிகன் நகருக்கு நியமனம் செய்யப்பட்டார். இதனை போப் ஏற்றுக்கொள்ள மறுத்தார். கோபமடைந்த பிஸ்மார்க் ''கனோசாவை நோக்கி திருப்பிப் போக மாட்டோம்'' என்று கூறினார். (To Canossa we shall not go, either in the flesh, or in the Spirit- கனோசா என்ற இடத்தில் பேரரசர் நான்காம் ஹென்றி போப் ஏழாம் கிரேகரியிடம் மன்னிப்பு கேட்க காத்துக் கிடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது). அத்துடன் போப்பாண்டவரின் தீவிர ஆதரவாளர்களான ஜெஸ்யூட்டுகளை (Jesuits) நாட்டிலிருந்து வெளியேற்றினார். போப்பாண்டவருடன் 1872-ல் ராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்டார் பிஸ்மார்க்.

## மே சட்டங்கள் (May laws or Falk laws):

அரசாங்கத்தின் அதிகாரங்களை மீறும் கத்தோலிக்க திருச்சபையைக் கட்டுப்படுத்த 1873 மே, 1874 மே மாதங்களில் தொடர்ச்சியாக பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இதற்கு 'மே சட்டங்கள்' என்று பெயர். பிரஷ்யப் பாராளுமன்றத்தில் இச் சட்டங்களை கல்வி, மத விவகார அமைச்சர் ...

அறிமுகப்படுத்தியதால் 'பாக் சட்டங்கள்' என்று கூறப்படுவதும் உண்டு.

இந்த மே சட்டங்களின் படி,

a) போப்பாண்டவரின் மதவிலக்கு அதிகாரம் ரத்து செய்யப்பட்டது.

b) கத்தோலிக்க பிஷப்புகளும், பாதிரிமார்களும் ஜெர்மானிய குடிமகனாக இருத்தல் வேண்டும். அவர்கள் ஜெர்மானியப் பல்கலைக்கழகங்களிலேயேபடித்து பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

c) திருச்சபையின் நியமனங்கள், மற்றும் நடவடிக்கைகள் அரசுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். மதபோதனைகள் எல்லாம் ஜெர்மன் மொழியிலேயே நடைபெற வேண்டும்.

d) கத்தோலிக்கத் திருச்சபையின் கல்வி நிர்வாகம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. மக்களைத் தண்டிக்கும் திருச்சபையின் அதிகாரம் ரத்து செய்யப்பட்டது.

e) கடைசியாக, மே சட்டங்களை எதிர்க்கும் பிஷப்புகள், பாதிரிமார்களின் சம்பளம் நிறுத்தப்படும். அவர்களின் குடி உரிமை ரத்து செய்யப்படும்.

இவ்வாறு பிஸ்மார்க் கத்தோலிக்கர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டார். இதனால் ஒரு வருடத்திற்குள்ளாக ஆறு கத்தோலிக்க பிஷப்புகள் கைது செய்யப்பட்டனர். சுமார் 1300 தேவாலயங்களில் ஆராதனை நடத்துவது நிறுத்தப்பட்டு விட்டது. போப்பாண்டவர் ஒன்பதாம் பயஸ் இந்த மே சட்டங்களை கடுமையாக எதிர்த்தார். ஜெர்மானியக் கத்தோலிக்கர்கள் அனைவரும் ஒன்று பட்டனர். கத்தோலிக்க அரசியல் கட்சியான 'சென்டர் கட்சியும்' மத சுதந்திரம் கேட்டு போராடியது. அதன் தலைவரான வின்த்ராஸ்ட் (Windthrost) என்பவர் தலைமையில் பிஸ்மார்க்கின் எதிர்ப்பு சக்திகள் ஒன்றுசேர்ந்து பலமடைய ஆரம்பித்தன. 1874-ல் ரெய்ஸ்டாக்கிற்கு நடைபெற்ற தேர்தலில் கத்தோலிக்கர்கள் ஐம்பது லட்சம் வாக்குகள் பெற்றனர். அறுபது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தனக்கு எதிராக வளர்ந்து வந்த எதிர்ப்பைக் கண்டு பிஸ்மார்க் அச்சமடைந்தார். எனவே கத்தோலிக்கர்களுடன் சமாதானம் செய்து கொள்வதே மேல் என்று நினைத்தார். புதிய போப்பாண்டவர் பதிமூன்றாம் லியோவுடன் (1878-1903) பேச்சுவார்த்தை நடத்தி இறுதியில் 1886-ல் மே சட்டங்களை ரத்து செய்தார். கத்தோலிக்கர்கட்கு எதிரான தனது போராட்டத்தில் (குல்டூர்காம்ப்) தோல்வியடைந்து விட்டதாக ஒத்துக் கொண்டார் பிஸ்மார்க்.

## 4. பிஸ்மார்க்கும் சோஷலிசமும் (Bismark and Socialism)

ஜெர்மனியில், சாக்சனி, ரைன்லாந்து, அல்சேஸ் வெஸ்ட் பேலியா, சைலீசியா ஆகிய பகுதிகளில் தொழில்வளம் பெருகியது. தொழிலாளர்கள் மத்தியில் சமதர்மக் கொள்கைகள் வேகமாகப் பரவின. ஆனால் சமதர்மக் கொள்கைகளை ஜெர்மானிய அரசின் விரோதி என்று கருதினார். பிஸ்மார்க் 1875-ல் 'சமதர்ம ஜனநாயகக் கட்சி' (Social Democratic Party) தோற்றுவிக்கப்பட்ட போது பிஸ்மார்க் பீதியடைந்தார். 1877-ம் வருடம் நடந்த தேர்தலில் இக்கட்சியின் சார்பாக ரெய்ஸ்டாக்கிற்கு 12 உறுப்பினர் கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே சோஷலிசக் கருத்துக்களைப் பரவ விடாமல் தடுக்க நினைத்தார் பிஸ்மார்க்.

1878-ல் பேரரசர் வில்லியத்தை கொலை செய்ய முயற்சிக்கப் பட்டதை காரணமாகக் கொண்டு ரெய்ஸ்டாக்கை கலைத்தார் பிஸ்மார்க். புதிதாக அமைக்கப்பட்ட ரெய்ஸ்டாக்கில், சோஷலிசத்திற் கெதிரான பல சட்டங்களை 1878-அக்டோபரில் இயற்றினார். அதன்படி சமதர்மக் கருத்துக்களையுடைய இலக்கியங்கள் தடைசெய்யப்பட்டன. சமதர்மவாசிகளின் பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரம் நீதி மன்றங்களிடமிருந்து எடுக்கப்பட்டு போலீஸ் துறையிடம் ஒப்படைக்கப் பட்டது. இச்சட்டம் முதலில் நான்கு வருடங்களுக்கென்று இயற்றப் பட்டது. ஆனால் 1890-ல் பிஸ்மார்க் ராஜினாமா செய்யும் வரை பல தடவை புதுப்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.

ஆனால் சமதர்மவாதிகளை நசுக்க, நசுக்க அவர்கள் பலம் பெருகிக் கொண்டேதான் வந்தது. பக்கத்து நாடுகளிலிருந்து கொண்டு தங்கள் கொள்கைகளைப் பரப்பினர். ரெய்ஸ்டாக்கில் சமதர்ம உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வந்தது. எனவே இதிலும் தோல்வியடைந்த பிஸ்மார்க் தொழிலாளர்களின் ஆதரவைப் பெற பல சட்டங்களை இயற்றினார். 1883, 1884-ல் தொழிலாளர்களின் நோய், விபத்து, வயோதிகம் ஆகியவற்றிற்கெதிரான பாதுகாப்புச் சட்டங்களை இயற்றினார். 1887-ல் பெண் குழந்தைத் தொழிலாளர் கட்டுப்பாட்டு சட்டமும், அதிகபட்ச வேலைநேரக் கட்டுப்பாட்டு சட்டமும், ஞாயிற்றுக்கிழமை கட்டாய ஓய்வு சட்டமும் இயற்றப்பட்டது. இவ்விதம் பயன் நிறைந்த சட்டங்களை இயற்றி தொழிலாளர் நலன் காத்தார். ஆனாலும் சமதர்ம வாதிகள் பிஸ்மார்க்கின் பிற கொள்கைகளை குறை கூறியே வந்தனர். சமதர்ம வாதிகளின் வளர்ச்சியை பிஸ்மார்க்கினால் தடுக்க முடியவில்லை.

## 5. வரிக் காப்பீடும், வாணிப வளர்ச்சியும் (Tariff Protection):

ஜெர்மனியின் பொருளாதார நிலையை உயர்த்த பல திட்டங்களைத் தீட்டினார் பிஸ்மார்க். தடையிலா வாணிப முறையை ஒழித்து உள்நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளித்தார். 1879-ல் 'வரிக்காப்பீட்டுச் சட்டம்' ஒன்றை இயற்றி இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீது அதிக அளவில் சுங்கவரியை விதித்தார். இச்சட்டம் இயற்றப்பட முக்கியக் காரணம் 1) வளர்ச்சியடைந்து கொண்டுவரும் ஜெர்மானிய தொழில்களை, வளர்ச்சியடைந்த பழைய, ஆங்கில தொழிற்துறையின் போட்டியிலிருந்து பாதுகாப்பதும், 2) வரிவிதிக்கப்படும் சொத்தின் அளவை உயர்த்துவதும், 3) நாட்டிற்குத் தேவையான பண வருவாயைப் பெறுவதும் ஆகும். ''ஜெர்மானிய வாணிகக் கழகம்'' ஒன்று அமைக்கப்பட்டது.

இவ்வாறு பிஸ்மார்க்கின் பொருளாதாரக் கொள்கையால் ஜெர்மனி யில் பொருட்களின் உற்பத்தி அதிகரித்தது. உலக சந்தையில் ஜெர்மனி வலுவான ஓர் இடத்தைப் பெற்றுக் கொண்டது. ஒரு 'ஐரோப்பிய நாடு' என்ற அந்தஸ்திலிருந்து 'குடியேற்றங்களுடன் கூடிய ஓர் உலக வல்லரசு' என்ற நிலையை அடைந்தது ஜெர்மனி.

## 6. குடியேற்றங்கள் அமைக்கப்படல்:

ஆரம்பத்தில் பிஸ்மார்க் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதை எதிர்த்தே வந்தார். 1871-ல் அல்சேஸ்-லொரைன் பகுதிகட்கு ஈடாக பிரான்ஸ் சில குடியேற்றங்களைத் தருவதாகக் கூறினாலும் பிஸ்மார்க் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. உள்நாட்டிலும், ஐரோப்பாவிலும் ஜெர்மனியின் வலிமையை அதிகப்படுத்துவதே அவர் நோக்கமாக இருந்தது. ஆனால் 'வரிக் காப்பீட்டு முறை'யை அமுல்படுத்தியதிலிருந்து ஜெர்மனியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. வியாபாரிகள் தாங்கள் அதிகமாக உற்பத்தி செய்த பொருட்களை பிற நாடுகளில் விற்பனை செய்ய விரும்பினர். முதலீட்டாளர்கள் நல்ல வருமானம் தரும் முதலீடுகளைப் பிற நாடுகளில் செய்ய விரும்பினர். கிறிஸ்தவ மிஷினரிமார்கள் பிற நாடுகளுக்குச் சென்று மக்களை மதமாற்றம் செய்ய விரும்பினர். ஜெர்மானிய தேசியவாதிகளோ பிற நாடுகளில் குடியேற்றங்களை நிறுவி ஜெர்மனி ஒரு உலக வல்லரசாக வேண்டுமென்று விரும்பினர்.

இவ்வாறு அனைத்து மக்களின் விருப்பங்களின் அடிப்படையில் ஜெர்மனி பல குடியேற்றங்களை அமைத்தது. 1879-ல் சமோவன் தீவுகளில் (Samoan Island) ஒரு ஜெர்மானியக் கம்பெனி வாணிப உரிமை பெற்றது. 1882-ல் ஹம்பர்க், லூபக், பிரமன் (Humburg, Lubeck, Bremen) ஆகிய இடங்களிலுள்ள ஜெர்மானிய வாணிபக் கம்பெனிகள்,

தென்மேற்கு ஆப்பிரிக்கா, டோகா, கெமரூன், கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய இடங் களிலும், பசிபிக் தீவுகளிலுள்ள மார்ஷல் தீவுகள், நியுகினியா ஆகிய இடங்களிலும் குடியேற்றங்களை நிறுவின. 1890-ம் வருட இறுதியில் ஜெர்மனி பத்து லட்சம் சதுர மைல் பரப்பளவுள்ள குடியேற்றப் பகுதிகளுக்குச் சொந்தமாக இருந்தது. பரப்பளவில் இது ஜெர்மனியைவிட ஐந்துமடங்கு அதிகம்.

## பிஸ்மார்க்கின் வெளிநாட்டுக் கொள்கை: 1871-1890

*1871*-ல் ஜெர்மானிய ஐக்கியம் நிறைவடைந்தபின் பிஸ்மார்க்கின் பணி அதிகரித்தது. ஜெர்மனியைப் பலமிக்க ஓர் உலக வல்லரசாக்க விரும்பினார். ஜெர்மனியை உருவாக்க மூன்று போர்களில் ஈடுபட்டார் பிஸ்மார்க். ஆனால் அதன்பின் அவரது கொள்கையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. அவர் பின்பற்றிய வெளிஉறவுக் கொள்கை ஐரோப்பிய வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. பிஸ்மார்க்கின் வெளிஉறவுக் கொள்கை கீழ்க்கண்ட நோக்கங்களின் அடிப்படையிலேயே உருவானது.

a) ஜெர்மனியில் அமைதியை ஏற்படுத்த எதிர்காலத்தில் பிற நாடுகளுடன் போரைத் தவிர்த்தல், ஐரோப்பாவில் ஜெர்மனியை வலிமையான நாடாக்குதல்..

b) *1871*-பிராங்கோ பிரஷ்யப் போரில் தோல்வியடைந்து, அல்சேஸ் லொரைன் பகுதிகளை இழந்து நிற்கும் பிரான்சை ஐரோப்பிய அரசியலில் தனிமைப்படுத்த விரும்பினார். பிரான்சின் பழிவாங்கும் உணர்வைத் திசை திருப்புவதற்காகவும், ஜெர்மனிக்கு எதிராக பிறநாடுகள் கூட்டு சேர்வதைத் தடுப்பதற்காகவும் நட்பு ஒப்பந்தங்கள் செய்துகொள்வது ஆகியவையாகும். "As long as France has no allies she is not dangerous to Germany' -என்றார் பிஸ்மார்க்.

உள்நாட்டில் பிஸ்மார்க்கிற்கு பிரச்சனைகளும், எதிர்ப்பும் இருந்தது. ஆனால் வெளி உறவில் தன்னிகரில்லாத தலைவராக உலா வந்தார். பிஸ்மார்க்கின் அரசியல் வெல்திறன் ஐரோப்பிய அரசியல் நிகழ்ச்சிகளையும், அரசியல் உறவுகளையும் மாற்றியமைத்தது. சுயநலத்துடனும்,, ஜெர்மனியின் பாதுகாப்பையும், எதிர்காலத்தையும் மையமாக வைத்து பிறநாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டார்.

### 1. மூன்று பேரரசர்களின் உடன்படிக்கை (Dreikaiser bund): 1872-டிரெக்கெய்சர்பண்ட்.

பிராங்கோ பிரஷ்யப் போருக்குப்பின் பிரான்சில் மூன்றாவது குடியரசு ஏற்பட்டது...

பொருளாதார வளர்ச்சியினால் பிரான்ஸ் முன்னேறியது. இதனால் ஜெர்மனியின் மீது பழி வாங்கவும், இழந்த அல்சேஸ், லொரைன் பகுதிகளைத் திரும்பப் பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சூழ்நிலையில்தான் பிரான்சைத் தனிமைப்படுத்த ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொள்ள முடிவு செய்தார் பிஸ்மார்க்.

1863-ல் போலந்துக் கிளர்ச்சியை முறியடிக்க பிஸ்மார்க் உதவியதாலும், 1871-ல் கருங்கடல் பகுதியில் போர்க்கப்பல்கள் வைத்துக்கொள்ள பிஸ்மார்க் எதிர்ப்புத் தெரிவிக்காததாலும் ரஷ்ய சார் இரண்டாம் அலெக்சாந்தர் பிஸ்மார்க்குடன் நட்புறவு வைத்திருந்தார். மேலும் அவர் ஆசியாவிலும், பால்கனிலும் தனது விரிவாக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இங்கிலாந்தை மட்டம் தட்ட ஜெர்மனியின் ஆதரவு அவசியம் என்பதை உணர்ந்துகொண்டார். 1872, செப்டம்பர் மாதம் ஜெர்மானியப் பேரரசர் முதலாம் வில்லியம் ஆஸ்திரியப் பேரரசர் இரண்டாம் ஜோசப், ரஷ்ய சார் இரண்டாம் அலெக்ஸாந்தர் ஆகியோர் தங்கள் நாடுகளின் மந்திரிகளுடன் பெர்லின் நகரில் கூடினர். ''தங்கள் மூன்று பேரரசுகளுக்குள் நெருக்கமான உறவு ஏற்பட்டுள்ளது'' என்று உலகத்திற்கு அறிவித்தனர். இவ்வாறு ''மூன்று பேரரசர்களின் கழகம்'' (டிரைக்கெய்சர்பண்ட்) உருவானது. ஆஸ்திரியா சடோவாவில் அடைந்த தோல்வியைக்கூட மறந்து ஜெர்மனியுடன் கூட்டு சேர்ந்தது. இது பிஸ்மார்க்கின் ராஜ தந்திரத்தையே காட்டுகிறது.

மூன்று பேரரசர்களின் கழகம் ஆரம்பத்தில் சுமூகமாகவே இயங்கி வந்தது. ஆனால் கிழக்கத்தியப் பிரச்சனையில் ரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. துருக்கியுடன் ரஷ்யா செய்து கொண்ட சான்ஸ்டீபனோ உடன்படிக்கையை ஆஸ்திரியா ஏற்றுக் கொள்ள மறுத்தது. 1878-ல் பிஸ்மார்க் தலைமையில் நடைபெற்ற பெர்லின் மாநாட்டில் அந்த உடன்படிக்கை திருத்தி அமைக்கப்பட்டது. பெர்லின் மாநாட்டை ''ரஷ்யாவுக்கு எதிராக பிஸ்மார்க்கின் தலைமையில் உருவான ஐரோப்பியக்கூட்டு'' என்று குறை கூறினார் சார் இரண்டாம் அலெக்ஸாந்தர். இதனால் மூன்று பேரரசர்களின் கழகம் வலிமை குன்றியது. எனவே பிஸ்மார்க் ஆஸ்திரியாவுடனும், இத்தாலியுடனும் நெருங்கி வந்து 'முக்கூட்டு உடன்படிக்கை'யைச் செய்து கொண்டார்.

## 2. மறுகாப்புறுதி உடன்படிக்கை (Reinsurance Treaty) 1887:

1881-ல் சார் இரண்டாம் அலெக்சாந்தர் மரணமடைந்த பின்னர் சார் மூன்றாம் அலெக்சாந்தர் பதவிக்கு வந்தார். மூன்று பேரரசர்களின் கழகத்தைப் புதுப்பிக்க முன்வந்தார். அதன்படி மீண்டும் 1881-ல் மூன்று

வருட காலத்திற்குப் புதுப்பிக்கப்பட்டது. 1884-ல் மீண்டும் மூன்று வருட காலத்திற்குப் புதுப்பிக்கப்பட்டது. ஆனால் பால்கன் பிரச்சனையில் ஆஸ்திரியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே கடும் மனவேற்றுமை ஏற்பட்டதால் 'மூன்று பேரரசர்களின் கழகத்தை' மீண்டும் புதுப்பிப்பதில் பயனேதுமில்லை எனக் கண்ட ரஷ்யா 1881 ஜுன் 18-ல் ஜெர்மனியுடன் தனியாகவே 'மறுகாப்புறுதி உடன்பாடு' ஒன்றைச் செய்து கொண்டது. இந்த உடன்படிக்கையின்படி,

a) இந்த உடன்படிக்கை நாடுகளில் ஒன்று மூன்றாம் நாடு ஒன்றுடன் போரிட நேரிட்டால் மற்ற நாடு நடுநிலை வகிக்க வேண்டும்.

b) பால்கன் பகுதியிலிருந்த ரஷ்ய நலன்களை ஜெர்மனி அங்கீகரிக்கும். பல்கேரியாவிலும், கிழக்கு ருமேனியாவிலும் ரஷ்யாவுக்கு இருந்த சட்ட பூர்வமான செல்வாக்கினை ஜெர்மனி ஏற்றுக் கொள்ளும்.

c) பாஸ்பரஸ், டார்டனல்லஸ் நீரிணைப்புகளில் அயல்நாட்டுப் போர்க்கப்பல்கள் நுழைய விடாதபடி மூடிவிடும்படி துருக்கி சுல்தானைக் கட்டாயப்படுத்த இரு நாடுகளும் இணைந்து செயலாற்ற வேண்டும்.

d) பால்கன் தீபகற்பப் பகுதியின் அரசியல் நிலை மாறாது நிலைத்திருக்க இரு நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்.

e) இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட மறுகாப்புறுதி உடன்பாடு மூன்று ஆண்டுகட்குச் செயல்படும்.

ரஷ்யாவுடன் பிஸ்மார்க் செய்துகொண்ட இந்த ரகசிய உடன்படிக்கை ரஷ்யாவுக்குப் பல சலுகைகளை அளித்தாலும், பால்கன் பகுதியில் ரஷ்யாவின் ஆசைகளுக்கு மறைமுகமாக பல தடைகளை ஏற்படுத்தினார் பிஸ்மார்க்.

## 3. முக்கூட்டு உடன்படிக்கை (Triple alliance): 1882

பால்கன் பிரச்சனையில் ரஷ்யாவும், ஆஸ்திரியாவும் ஒன்றையொன்று கடுமையாக எதிர்த்து வந்ததால், பிஸ்மார்க் ஏதேனும் ஒரு பக்கம் சாய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வலிமையான நட்புறவுக்காகவும், ரஷ்யாவின் நிலையற்ற கொள்கைகளினாலும் ஆஸ்திரியாவுடனான உறவையே தேர்ந்தெடுத்தார் பிஸ்மார்க். மேலும் ரஷ்யாவுக்கு எதிராக ஜெர்மானிய எல்லைகளைப் பாதுகாக்கும் அரணாக ஆஸ்திரியா விளங்கும் என்று நினைத்தார். எனவேதான் 1878-ல் கூடிய பெர்லின் மாநாட்டில் ஆஸ்திரியாவையே ஆதரித்தார். அதன் விளைவாக 1879, அக்டோபர் 7-ம் தேதி ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் "இருவர்

கூட்டுறவு உடன்படிக்கை'' (Dual alliance) ஒன்றை செய்து கொண்டன. இதன்படி ''இந்த இரண்டு நாடுகளில் ஏதேனும் ஒன்றை ரஷ்யா தாக்கினால் மற்ற நாடு அதன் உதவிக்கு வரவேண்டும். ஆனால் ரஷ்யா தவிர பிற நாட்டுடன் ஒரு நாடு போரிட்டால், மற்ற நாடு நடுநிலை வகிக்கவேண்டும்''. ரஷ்யாவுக்கு எதிராக ஆஸ்திரியாவுடன் செய்துகொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கை பிஸ்மார்க்கின் ஒரு ராஜதந்திரச் சாதனையாகும். இதன் ஷரத்துக்கள் 1888-ம் வருடம் வரை ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

அடுத்து, பிஸ்மார்க் இத்தாலியையும் தன் பக்கம் சேர்த்துக்கொள்ள விரும்பினார். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தார். ஆப்பிரிக்காவிலுள்ள டூனிஸ் (Tunis) இத்தாலிக்கு அருகாமையில் இருந்தது. அங்கு குடியேற்றம் அமைத்துக்கொள்ள இத்தாலிக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் 1881-ல் பிரான்ஸ் டூனிசைக் கைப்பற்றியதால் இத்தாலி வெகுண்டெழுந்தது. ஐரோப்பாவில் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதாகக் கருதிய இத்தாலி, ஆஸ்திரியாவுடன் நீண்டகாலப் பகைமை இருந்தாலும் ஆஸ்திரிய ஜெர்மானிய இரட்டை உடன்படிக்கையில் சேர முன்வந்தது. இத்தாலியின் இந்த விருப்பத்தை வரவேற்றார் பிஸ்மார்க். 1882, மே 20-ம் தேதி ஜெர்மனி ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் இத்தாலியும் சேர்ந்து 'முக்கூட்டு உடன்படிக்கை' கையெழுத்தாகியது. இந்த உடன்படிக்கைப்படி,

a) இத்தாலி அல்லது ஜெர்மனி பிரான்சால் தாக்கப்பட்டால் இரண்டு நாடுகளும் சேர்ந்து பிரான்சின் மீது போர் தொடுக்க வேண்டும்.

b) இந்த உடன்படிக்கை நாடுகளை எந்த வல்லரசுகள் தாக்கினாலும் எல்லா நாடுகளும் உதவிசெய்ய வேண்டும். தூண்டப்படாத போர் ஒன்றை ரஷ்யா ஜெர்மனி மீது தொடுக்குமானால் இத்தாலி நடுநிலை வகிக்கலாம்.

இவ்வாறு இந்த முக்கூட்டு உடன்படிக்கையானது பிரான்சை ஐரோப்பாவில் தனிமைப்படுத்தியது. எதிர்காலத்தில் பிரான்ஸ் ஜெர்மனி மீது போர்தொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அது இத்தாலியுடனும், ஆஸ்திரியாவுடனும், போரிட வேண்டிய நிலைமை ஏற்படும். மேலும் இந்த முக்கூட்டு உடன்படிக்கையின்படி, இத்தாலி ஒரு வல்லரசாக ஒத்துக் கொள்ளப்பட்டது. பிரெஞ்சு ஆக்கிரமிப்பிலிருந்து இத்தாலிக்கு முழுப்பாதுகாப்பு கிடைத்தது. இத்தாலிக்கும், ஆஸ்திரியாவுக்கும் நிலவிய மனக்கசப்பு மாறி நட்புறவு ஏற்பட்டது. முதலில் ஐந்து ஆண்டுகட்கு என்று செய்துகொள்ளப்பட்ட முக்கூட்டு உடன்படிக்கை 1887, 1891, 1903, 1912 ஆகிய வருடங்களில் புதுப்பிக்கப் பட்டது. முதல் உலகப்போர் ஆரம்பிக்கும்வரை இந்த உடன்படிக்கையின் ஷரத்துக்கள் வெளியிடப்படாமல் ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பிரான்சுக்கு எதிராக இரண்டு நாடுகளை உருவாக்கி

ஜெர்மனியின் பாதுகாப்பிற்குச் சிறந்த அடிப்படையை ஏற்படுத்திக் கொண்டார் பிஸ்மார்க்.

## இரண்டாம் கெய்சர்வில்லியமும், பிஸ்மார்க்கின் ராஜினாமாவும்

பேரரசர் முதலாம் கெய்சர் வில்லியம் 1888-மார்ச் மாதம் தனது 91-ம் வயதில் காலமானார். அதன்பின் அவரது மகன் மூன்றாம் பிரடரிக் பதவி ஏற்றார். பதவி ஏற்று 99 நாட்களே ஆட்சிசெய்து அவரும் காலமானார். எனவே பிரடரிக்கின் மூத்த மகன் இரண்டாம் வில்லியம் பேரரசராக 1888-ஜூன் 15-ல் தனது 29-ம் வயதில் பதவியேற்றார். அப்போது பிஸ்மார்க்கின் வயது 81. வயதான சான்சலருக்கும், வாலிபரான பேரரசருக்குமிடையே பெரிய அளவில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது.

இரண்டாம் கெய்சர் வில்லியம் அதிகார மோகம் கொண்டவர். எனவேதான் பிஸ்மார்க்கின் புகழையும், திறமையையும் கண்டு பொறாமை கொண்டார். ''நாட்டை ஆளும் திறமையும், தகுதியும் தனக்கு உண்டு. பிஸ்மார்க்கின் ஆலோசனை தனக்குத் தேவையில்லை'' என்று நினைத்தார். ஜெர்மனியின் உண்மையான அதிகாரம் தன்னிடமே இருக்க வேண்டுமென்று நினைத்தார். ''ஜெர்மனியை கோஹன் சோலன் வம்சம் ஆளவேண்டுமா''? அல்லது பிஸ்மார்க் ஆளவேண்டுமா? என்று கேட்டார். 'என்னுடைய மந்திரிகள் பிஸ்மார்க்கின் அதிகாரிகள் என்று சொல்லிக் கொள்வதிலேயே பெருமை அடைகிறார்கள்' என்று வெறுப்புடன் கூறினார். 'இந்த நாட்டிற்கு ஒரே தலைவர்தான் உண்டு. அது நான்தான். என்னை எதிர்ப்பவர்களை ஒழித்துக்கட்டுவேன்' என்றார் வில்லியம்.

எனவே சமதர்மவாதிகளுக்கு எதிராக பிஸ்மார்க்கால் 1878-ல் இயற்றப்பட்ட அடக்குமுறைச் சட்டத்தை புதுப்பிக்க மறுத்து விட்டார் வில்லியம். 'ஆஸ்திரிய ஜெர்மானிய உறவில் விரிசல் ஏற்படாமல், ரஷ்யாவும் ஜெர்மனியும் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்த வேண்டும்' என்ற பிஸ்மார்க்கின் ஆலோசனையையும் உதறித் தள்ளினார். எல்லா மந்திரிகளும் பிஸ்மார்க்கின் மூலமாக அல்லாமல் மன்னரிடம் நேரடியாகவே தொடர்பு கொள்ளலாம் என உத்தரவிட்டார். அரச பதவியிலிருப்ப வர்கள் எல்லோரும் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என ஆணையிட்டார். எனவே 1890-ம் மார்ச் மாதம் 18-ம் தேதி பிஸ்மார்க் வேறு வழியில்லாமல் தனது பதவியை ராஜினாமா செய்து அரசியலிலிருந்து ஓய்வு பெற்றார். அவருக்குப்பின் கெப்ரிவி (Caprivi) என்பவர் சான்சலராக நியமிக்கப்பட்டார். பிஸ்மார்க்கின் பேச்சைக்கேட்டு நடந்த பேரரசர் முதலாம் வில்லியம் 1888-ல் இறந்தவுடன், பிஸ்மார்க்கும் ராஜினாமா செய்திருந்தால் மதிப்பாகவும், மரியாதையாகவும் இருந்திருக்கும். ஆனால் தள்ளாத வயதிலும் பதவி ஆசை விடவில்லை. ஜெர்மனியில் ஒரு வலிமையான கோஹன் சோலன் பேரரசை உருவாக்கிய பிஸ்மார்க் 22 ஆண்டு காலம் ஐரோப்பிய

அரசியலில் தன்னிகரில்லாமல் விளங்கிய பிஸ்மார்க் இறுதியில் பதவியிலிருந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளும் பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்.

## பிஸ்மார்க்கின் சாதனைகள் பற்றிய மதிப்பீடு:

உலக வரலாற்றில் தேசத்தை உருவாக்கிய சாதனையாளர்களின் வரிசையில் முதல் இடத்தை வகிப்பவர் பிஸ்மார்க் ஆவார். ஜெர்மானிய ஐக்கியத்தை உருவாக்கியதே பிஸ்மார்க்கின் மிகப்பெரிய சாதனையாகும். பல நூற்றாண்டுகளாகச் சிதறிக் கிடந்த ஜெர்மானிய நாடுகளை ஒன்பதே வருடத்தில் இணைத்தார். ஜெர்மானிய ஐக்கியத்திற்காக அவர் ஆஸ்திரியாவுடன் போர் தொடுக்க செலஸ்விக்-ஹோல்ஸ்டீன் பிரச்சனையைக் கையாண்ட விதமும், ஜெர்மனி மீது போர்த்தொடுக்க மூன்றாம் நெப்போலியனைத் தூண்டி விட்டவிதமும் அவரது ராஜதந்திரத்தின் மணிமகுடமாகும். ஆனால் பிஸ்மார்க் ஜெர்மனியை மட்டும் உருவாக்கவில்லை. அவர் காலத்திலிருந்து அந்த நாட்டின் கொள்கையில் சிறப்பாகக் காணப்படுகிற தனி குண இயல்புகளைத் தன்னுடைய அறிவுரைகளாலும், வெற்றிகளாலும் உருவாக்கினார். அந்த சிறப்பு இயல்புகள் ''படை பலத்தில் நம்பிக்கை, அனைத்து நாட்டுச் சட்டம், நீதி முதலான கருத்துக்களை அவமதித்தல், அரசாங்கத்திற்கும் மேலானதாக அல்லது புனிதமாக வேறு எதையும் ஏற்றுக் கொள்ளாமை'' ஆகியவையாகும்.

ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கியதுடன், ஐரோப்பாவிலேயே ஜெர்மனியை வலிமையான நாடாக்கிய பெருமை பிஸ்மார்க்கையே சாரும். ஆனால் அதற்காக அவர் பின்பற்றிய கொள்கைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ராணுவ வலிமையின் மீது நம்பிக்கை வைத்திருந்த பிஸ்மார்க் ஜெர்மானிய இணைவுக்குப்பின் தனது கொள்கைகளை சிறிது மாற்றிக் கொண்டார். ஜெர்மானிய முன்னேற்றத்திற்கு அமைதி தேவை என்பதற்காகவும், ஐரோப்பிய அரசியலில் பிரான்சைத் தனிமைப்படுத்தவும் பிஸ்மார்க் பின்பற்றிய ரகசிய 'ராஜதந்திர உடன்படிக்கை முறை' நல்ல பலனை அளித்தது. பிரான்சுக்கு எதிராக ரஷ்யா, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளுடன் ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டார். 'இரும்பு மனிதர்' என்றழைக்கப்படும் பிஸ்மார்க் 1890-ம் வருடம் வரை ஐரோப்பாவின் விதியை நிர்ணயிக்கும் மாபெரும் சக்தியாகவே இருந்து வந்தார். 1898-ஜூலை 30-ம் தேதி பிரிடிச்ரு (Fridrich ruh) என்ற ஊரில் உயிர் நீத்தார் பிஸ்மார்க்.

# 13. மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசு

## (THIRD FRENCH REPUBLIC)

மூன்றாம் நெப்போலியன் செடான் போர்க்களத்தில் தோல்வியடைந்து சரணடைந்ததால் பிரான்சில் இரண்டாம் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. ஒரு இடைக்கால குடியரசு நிறுவப்பட்டது. அக்குடியரசு போரை நிறுத்தாமல் தொடர்ந்து போரிட்டது. ஆனால் 1871-ஜனவரி 28-ம் தேதி பாரிசு நகரம் ஜெர்மானியர்களால் பிடிக்கப்பட்டது. இந்நிலையில் பிரான்சின் தேசிய சட்டசபைக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடைபெற்றது. அச்சபை நாட்டின் தலைமை நிர்வாக அதிகாரியாக தியர்ஸ் (Thiers) என்பவரைத் தேர்ந்தெடுத்தது. தியர்ஸ் ஜெர்மனியுடன் பிராங்பர்ட் உடன்படிக்கை செய்து கொண்டார். அதனை தேசிய சபை அங்கீகரித்தது.

### தியர்ஸும் பாரிசு நகர குழுவும் (Paris Commune): 1871

நாட்டின் தலைமை நிர்வாக அதிகாரியான தியர்ஸ் 'குடியரசின் ஜனாதிபதி' என்று அழைக்கப்பட்டார். அப்போது தேசிய சபைக்கும், பாரிஸ் நகரக் குழுவுக்கும் இடையே போட்டி ஏற்பட்டு உள்நாட்டுப் போர் ஏற்படும் அபாயம் தோன்றியது.

தேசிய சபையில் அரச ஆதரவாளர்களே பெரும்பான்மை பெற்றிருந்தனர். ஆனால் பாரிசிலுள்ளவர்கள் தீவிரக் குடியரசுவாதிகள். கார்ல்மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டில் சமதர்மக் கொள்கை களைப் பரப்ப வேண்டுமென நினைத்தன. எனவே தேசிய சபை மீண்டும் மன்னராட்சியை அமைக்க முயற்சி செய்யும் என்று பயந்தனர்.

இச்சமயத்தில் தேசிய சபையும், தற்காலிக குடியரசும் போர்டேயிலிருந்து வெர்சேக்கு மாற்றப்பட்டது. இதனால் பாரிஸ் நகர மக்கள் வெகுண்டெழுந்தனர். தங்கள் பெருமைமிக்க பாரிஸ் நகரை புறக்கணித்ததால் மிகவும் புண்பட்டனர்.

அத்துடன் பாரிசு நகரம் அதிர்ப்தி அடைந்த போர்வீரர்கள், வேலை கிடைக்காத இளைஞர்கள், தீவிர சமதர்மவாதிகள் ஆகியோரால் நிறைந்திருந்தது. இச்சூழ்நிலையில் தான் திடீரென 1871, பிப்ரவரியில் பாரிசு நகர மக்களும், பாரிசு தேசியக் காவற்படையும் இணைந்து, அரசாங்கப் படைகளைத் தோற்கடித்து நகரைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர்.

## பாரிசு நகரக் குழுவுக்கு எதிராக தியர்சின் நடவடிக்கைகள்:

இச்சூழ்நிலையில் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதே தன் உடனடிப் பணி என்று தியர்ஸ் கருதினார். இதற்கிடையில் பாரிசு நகர மக்கள் தேசிய அரசாங்கத்தை மீறி, நகர ஆட்சிக்குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர். அதன்பின் தேசிய அரசைத் தோற்கடிக்க பாரிசு நகர குழுவின் படைகளை அனுப்பி வைத்தனர். உள்நாட்டுப்போர் ஏற்படும் சூழ்நிலை தோன்றவே, தியர்ஸ், பாரிசு நகர குழுவையும், புரட்சியாளர்களையும் அடக்க ஒரு படையை அனுப்பி வைத்தார்.

சுமார் ஆறுவார காலம் கடும் சண்டை நடந்தது. கடுமையான உயிர் சேதத்திற்குப் பின்னர் பாரிசு நகர குழுவினரும் புரட்சியாளர்களும் ஒடுக்கப்பட்டனர். பாரிசு நகர ஆட்சி கலைக்கப்பட்டது.

## தியர்ஸின் தேசிய புனரமைப்புப் பணிகள்

பாரிசு நகரக் குழுவின் புரட்சியை அடக்கிய பின்னர் தேசிய புனரமைப்புப் பணியில் தன் கவனத்தைத் திருப்பினார் தியர்ஸ். பிராங்பர்ட் உடன்படிக்கையின்படி ஜெர்மனிக்கு கொடுக்க வேண்டிய போர் நஷ்டத் தொகையைச் செலுத்தி எதிர்பார்த்ததிற்கு இரண்டு வருடத்திற்கு முன்பாகவே ஜெர்மானியப் படையை பிரான்சிலிருந்து வெளியேற்றினார். இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். நாட்டை விடுவித்தவர் என்று தியர்ஸ் புகழப்பட்டார்.

அடுத்து, பிரெஞ்சுப் படையின் வலிமையைப் பெருக்கினார் தியர்ஸ். பிரஷ்யப்படை அமைப்பு அடிப்படையில் பிரெஞ்சுப்படையை மாற்றி அமைத்தார். கட்டாய இராணுவச் சேவையைப் புகுத்தினார்.

## தியர்ஸின் ராஜினாமா:

பிரான்ஸ் நாட்டிற்குப் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார் தியர்ஸ். அப்போது தேசிய சபையிலும், நாட்டிலும் முடியாட்சி ஆதரவாளர்களே அதிகம் இருந்தனர். அவர்களும் பூர்பான் வம்சம், ஆர்லியன்ஸ் வம்சம், போனபார்ட் வம்சம் என்று மூன்று பிரிவாகப் பிரிந்து வலிமையிழந்து காணப்பட்டனர். எனவே "இருப்பது ஒரு அரியணைதான். அதில் மூன்று பேர் அமர முடியாது; குறைந்த அளவில் நம்மைப் பிரிக்கும் குடியரசே பிரான்சிற்குச் சரி" என்று கூறினார் தியர்ஸ். ஆனால் அவருடைய திட்டத்தை முடியாட்சி ஆதரவாளர்களைக் கொண்ட தேசிய சபை நிராகரித்துவிட்டதால், தனது பதவியை 1873-ல் ராஜினாமா செய்தார்.

## மீண்டும் முடியாட்சியை ஏற்படுத்த முயற்சி:

தியர்ஸின் ராஜினாமாவுக்குப்பின் மார்ஷல் மெக்மோகன் (Marshal Mac Mohan) என்பவர் ஜனாதிபதியானார். இவர் தீவிர முடியாட்சி ஆதரவாளர். பிரான்சில் மீண்டும் முடியாட்சியை ஏற்படுத்த முயன்றார். ஆனால் அரியணையில் அமர மூன்று அரச வம்சத்தினரும் போட்டியிட்டதால் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இதுவே பிரான்சில் முடியாட்சியை மீண்டும் ஏற்படுத்த எடுக்கப்பட்ட கடைசி முயற்சிகளாகும், இறுதியில் பிரான்சு குடியரசாகவே இருப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு ''ஒரு முடியாட்சி ஆதரவு ஜனாதிபதியின் கீழ் முடியாட்சி ஆதரவு உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபையால், பிரான்ஸில் நிலையான குடியரசு 1875 ஜூன் 30-ல் நிறுவப்பட்டது!'' இக்குடியரசு 1940-ம் ஆண்டுவரை நீடித்து நின்றது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## குடியாட்சி அரசியலமைப்பு: 1875

இதற்கிடையில், நாடு முழுவதிலும் கிராமப்புற மக்களிடையே குடியாட்சித் தத்துவங்களைப் போதித்துக் கொண்டிருந்தார் கம்பெட்டா என்பவர். இவருடைய முயற்சியின் விளைவாகவே 1875-ல் பிரான்சில் குடியரசு நிறுவப்பட்டது. மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர் இவர். குழப்பமான சூழ்நிலையில் தனது பேச்சாற்றல் மூலம், தெளிவான கொள்கை களை பிரான்சுக்கு அளித்தார். புதிய குடியாட்சி அரசியலமைப்பு இவருடைய முயற்சியினால் உருவாக்கப்பட்டது. மூன்றாவது பிரெஞ்சுக் குடியரசை உருவாக்கியவர் என்று கம்பெட்டா புகழப்படுகிறார்.

புதிய அரசியலமைப்பின்படி, ஜனாதிபதி செனட் சபையாலும் பிரதிநிதிகள் சபையாலும் தேர்ந்தெடுக்கப்படுவார். அவரது பதவிக்காலம் ஏழு ஆண்டுகள் ஆகும். செனட் உறுப்பினர்கள் மறைமுகமாகவும், பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மந்திரிகள் சட்டமன்றத்திற்கே பொறுப்பான வர்கள். இவ்வாறு பிரான்சில் நிரந்தரமான ஒரு குடியாட்சி அமைப்பு ஏற்பட்டது.

## குடியரசிற்கு ஏற்பட்ட சோதனைகள்:

1879, ஜனவரியில் மெக்மோகன் பதவியிலிருந்து விலகினார். அதன்பின் ஜூல்ஸ் கிரவி (Jules Grevy) என்பவர் ஜனாதிபதியானார். அச்சமயத்தில் பிரெஞ்சு அரசியலில் பொது நலன் பேணும் தலைவர்கள் இல்லாது போய்விட்டனர். எங்கும் லஞ்சமும், ஊழலும் காணப்பட்டது. குடியரசின் எதிர்ப்பாளர்களால் ஆட்சிக்கு [illegible]

தனால் எல்லா சோதனைகளையும் கடந்து பல சாதனைகளைப் படைத்தது மூன்றாவது பிரெஞ்சுக் குடியரசு!

### 1. பனாமா ஊழல்:

பனாமாவின் கால்வாய் வெட்டும் பணியை மேற்கொண்ட ஒரு பிரெஞ்சுக் கம்பெனிக்கு அதிகாரிகளின் ஊழல் காரணமாக அதிக நஷ்டம் ஏற்பட்டது. இந்த தவறை மூடிமறைக்க பல நேர்மையற்ற வழிகள் பின்பற்றப் பட்டன. இதனால் குடியரசிற்கு எதிர்ப்பும் வளர்ந்தது.

### 2. பௌலங்கர் இயக்கம் (Boulanger Movement): 1886

இச்சூழ்நிலையில் 1886-ல் பௌலங்கர் என்பவர் ராணுவ மந்திரியாக நியமிக்கப்பட்டார். இவர் முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவர். ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றார். ஜெர்மனிக்கு எதிராகப் போர்தொடுப்பது பற்றி பேசினார். போர் வீரர்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்களின் ஆதரவையும் பெற்றார். இவ்வாறு தன்னுடைய பேச்சாற்றல் மற்றும் முற்போக்குக் கருத்துக்களால் மக்களைக் கவர்ந்தார்.

முடியரசுக் கட்சியினர், மத குருமார்கள், நியாயவாதிகள் ஆகியோர் பௌலங்கருக்கு அமோக ஆதரவு அளித்தனர். இவரது வளர்ச்சியைக்கண்டு பயந்த குடியரசுக் கட்சியினர், பௌலங்கர் சர்வாதிகாரியாக முயன்றார் என்றும், நாட்டின் பாதுகாப்புக்கு, அவர் ஊறு விளைவிப்பதாகவும் குற்றம் சாட்டி நீதிமன்றத்தில் விசாரணை செய்ய முயன்றனர். உடனே பௌலங்கர் பெல்ஜியத்திற்கு தப்பிஓடி, அங்கே புருசல்ஸ் நகரில் தற்கொலை செய்து கொண்டார். இவ்வாறு பௌலங்கர் இயக்கம் நசுக்கப்பட்டு, குடியரசு பாதுகாக்கப்பட்டது. குடியாட்சி வலுவடைந்தது.

### 3. டிரைபஸ் வழக்கு (Dreyfus Case): 1894

குடியரசிற்கு மிகப்பெரிய சோதனை டிரைபஸ் வழக்கு மூலம் வந்தது. ஆல்பிரட் டிரைபஸ் என்பவர் பிரெஞ்சுப்படைத்தலைவர்களில் ஒருவர் ஆவார். இவர் யூதர் இனத்தைச் சார்ந்தவர். ராணுவ ரகசியங்களை ஜெர்மனிக்கு விற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டார். ராணுவ நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டு இவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. தென் அமெரிக்காவில் பிரெஞ்சு கயானாவிற்கு அருகிலுள்ள 'பேய்த்தீவில்' 1895-ல் சிறை வைக்கப்பட்டார்.

ஆனால் 1896-ல் உளவுத்துறையின் தலைவரான கர்னல் பிக்கார்ட் என்பவர் டிரைபஸ் குற்றமற்றவர் என்று கண்டுபிடித்தார். டிரைபஸின்

தண்டனைக்கு ஆதாரமாக விளங்கிய 'பார்டரே பத்திரம்' போலி மேஜர் எஸ்டர் கேசியால் தயாரிக்கப்பட்டது என்று கூறினார். டி டிரைபஸ் மீண்டும் பிரான்சுக்குக் கொண்டு வரப்பட்டார். விசா நடத்தப்பட்டு மீண்டும் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டது. இ வழக்கினால் பிரான்ஸ் இரண்டு பிரிவாகப் பிரிந்தது. புரட்டஸ்தாந் யூதர்கள், சமதர்மவாதிகள், குடியரசு வாதிகள் டிரைபஸை ஆதரி அரச ஆதரவாளர்கள், ராணுவம், சமயக் குருமார்கள், யூதர் எதிர்ப்பவர்கள் ஆகியோர் டிரைபஸை எதிர்த்தார்கள்.

இவ்வாறு டிரைபஸ் வழக்கு, முற்போக்குவாதத்திற் பிற்போக்கு வாதத்திற்கும், ஏதேச்சதிகாரத்திற்கும் விடுத எண்ணத்திற்கும், இராணுவ அதிகாரத்திற்கும், சிவில் அதிகாரத்திற் இடையே ஏற்பட்ட போராட்டமாக மாறியது. டிரைபஸ் ஆதரவாளர்கள், வழக்கை மீண்டும் விசாரணை செய்ய வேண்டுமென கிளர்ச்சி செய்தனர். பிரபல எழுத்தாளர் எமிலிசோலோ டிரை குற்றவாளி அல்ல என்று வாதாடினார். மீண்டும் இந்த வழக்க விசாரணை செய்த போது டிரைபஸ் குற்றமற்றவர் என கண்டுபிடிக்கப்பட்டது. எனவே ஜனாதிபதி லூபே அவருக்கு மன்னி வழங்கினார். 1906-ஜூலை 12-ல் 'கௌரவமான வீரர்' என்ற உ அந்தஸ்தும் டிரைபஸுக்கு கொடுக்கப்பட்டது. டிரைபஸ் விடுத செய்யப்பட்டார். பார்டரே பத்திரம் போலிக்கையெழுத்து என்ப எஸ்டர்கேசியும் ஒப்புக்கொண்டார். கர்னல் ஹென்றி என்பவர் குற்றத்த ஒப்புக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார். டிரைபஸ் மீண் ராணுவத்தில் சேர்க்கப்பட்டு உயர் பதவி கொடுக்கப்பட்டார். இவ்வா டிரைபஸ் வழக்கு குடியரசைக் காக்கும் ஒரு போராட்டமாகவே மாறிய இறுதியில் பிரெஞ்சுக் குடியரசு பாதுகாக்கப்பட்டு, வலிமையடைந்த குடியரசுவாதிகள் ஒன்று சேர்ந்தனர்.

## 4. குடியரசுக்கு எதிரான திருச்சபையின் நடவடிக்கைகள்

பிரெஞ்சுக் கத்தோலிக்கத் திருச்சபை குடியரசுக்கு எதிரா நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தது. இது குடியரசுக்கு இருந்த மிக பெரிய பிரச்சனையாகும். டிரைபஸ் வழக்கிலும், மற்ற அரசிய நடவடிக்கைகளிலும் திருச்சபை குடியரசின் எதிரிகளுடன் சேர் கொண்டது. எனவே திருச்சபையின் செல்வாக்கைக் குறைக்க குடியர பல நடவடிக்கைகளை எடுத்தது.

திருச்சபை நடத்தி வந்த பள்ளிகளில் மதபோதனை நிறுத்தப்பட்டன. குருமார்கள் சபைகள் அரசு கண்காணிப் ஆராயப்பட்டன. குருமார் சபைக்கு அரசு கொடுத்து வந்த பண உத நிறுத்தப்பட்டது. கடவுள் ஆராதனைக்கு திருச்சபை அவசியமில்லை

என்று கூறி, அதற்குப் பதில் நாடு முழுவதும் "ஆராதனை அவைகள்" அமைக்கப்பட்டன. இவ்வாறு திருச்சபையின் அதிகாரங்கள் பல அவசரச் சட்டங்கள் மூலம் நசுக்கப்பட்டன. நெப்போலியன் காலத்தில் ஏற்பட்ட கன்கார்டட் ஒப்பந்தம் காலாவதியானது. அரசாங்கத்திலிருந்து திருச்சபை தனியாகப் பிரிக்கப்பட்டது. இதனை பிரான்சில் நடைபெற்ற ஒரு சமயப்புரட்சி என்றே கூறலாம்.

இவ்வாறு 1875-ல் பிறந்த மூன்றாம் பிரெஞ்சுக் குடியரசு பல சோதனைகளையும் வென்று 1940-ம் ஆண்டு வரை நீடித்தது. ஆரம்பத்தில் பலவீனமாகத் தோற்றமளித்த குடியரசு இறுதியில் பலமடைந்தது. உள்நாட்டுப் பிரச்சனைகளை வெற்றிகரமாகச் சமாளித்தது போல, வெளிநாட்டுக் கொள்கையிலும் வெற்றியடைந்தது. பிரான்சுக்கு ஆப்பிரிக்காவில் பல குடியேற்றங்கள் அமைக்கப்பட்டது. வெளியுறவில் இங்கிலாந்துடன் நட்புறவு ஏற்பட்டது. நட்புறவு உடன்படிக்கைகள் பல செய்து கொள்ளப்பட்டன. ஐரோப்பிய அரசியலில் பிரான்ஸ் மீண்டும் முன்னணி இடத்திற்கு வந்தது.

# 14. கிழக்கத்தியப் பிரச்சனை
## (EASTERN QUESTION -1821-1913)

கிழக்கத்தியப் பிரச்சனை என்பது துருக்கியப் பேரரசின் வீழ்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்சனை. பால்கன் பகுதி மக்களின் தேசிய உணர்வை வெளிப்படுத்தும் பிரச்சனை. ஐரோப்பாவிலிருந்து துருக்கியப் பேரரசு படிப்படியாக மறைந்ததனால் ஏற்பட்ட பிரச்சனை. மார்லி பிரபு கூறுவது போல மாறும், அறிய முடியாத, சிக்கல் நிறைந்த, போட்டி மனப்பான்மை, ஆக்கிரமிப்புசிந்தை கொண்ட மக்கள் ஆர்வம் காட்டும் பிரச்சனை'. இப்பிரச்சனையில் தங்கள் வலிமையை நிலைநாட்டிக் கொள்ள விரும்பிய ஐரோப்பிய வல்லரசுகள் தலையிடலாயின. அதன் விளைவாக அந்த வல்லரசுகளுக்கிடையே போட்டியும், பொறாமையும், விரோதமும் ஏற்பட்டு கிழக்கத்தியப் பிரச்சனை தீர்க்கப்பட முடியாமல், மேலும் புதிய பல பிரச்சனைகள் உருவானது. அதன் காரணமாகவே முதல் உலகப்போர் ஏற்பட்டது.

### கிழக்கத்தியப் பிரச்சனையின் விளக்கம்:

பால்கன் தீபகற்பம் கிரீஸ், செர்பியா, ருமேனியா, பல்கேரியா மாண்டிநெக்ரோ முதலிய சிறிய நாடுகளைக் கொண்டதாகும். இவை

விடுதலை அடைந்தது. செர்பியாவில் ஏற்பட்ட புரட்சி கிரேக்க நாட்டுக்கும் பரவியது. தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்ட கிரேக்க மக்கள் சுல்தானை எதிர்த்து புரட்சியில் ஈடுபட்டனர்.

## கிரேக்க சுதந்திரப் போருக்கான காரணங்கள்:

### 1. துருக்கியப் பேரரசின் சீர்கெட்ட நிர்வாகம்:

துருக்கி சுல்தான் கிரேக்க மக்களின் நலன்களில் அக்கறை கொள்ளவில்லை. மக்கள் மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டது. மக்களிடம் வரிவசூலிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது. நிலசுவான்தார்களும், உயர்பதவிவகித்தவர்களும் கிரேக்க மக்களைத் துன்புறுத்தினர். ஆளுநர்கள் ஊழல் நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். எனவே கிரேக்க மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

### 2. பிரெஞ்சுப் புரட்சி: 1789

பிரெஞ்சுப் புரட்சி கிரேக்க மக்களுக்கு சுதந்திர உணர்ச்சியை ஊட்டியது. புரட்சிக் கருத்துக்கள் மக்களிடையே வேகமாகப் பரவி தேசிய உணர்வைத் தட்டி எழுப்பியது.

### 3. கலாச்சார மறுமலர்ச்சி :

கிரேக்கர்கள் தங்களுடைய பழைமையான கலாச்சார, வரலாற்றுப் பெருமையை நினைவு கூர்ந்தனர். பழங்கால கிரேக்க சமுதாயம் பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் எண்ணற்ற நூல்கள் எழுதப்பட்டன. மாண்டஸ்க்யூ, வால்டர், ஆகியோரின் நூல்கள் கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இந்த கிரேக்க கலாச்சார மறுமலர்ச்சி தான் சுதந்திரப் போருக்கு முக்கியக் காரணம்.

### 4. தேசியவாதிகளின் நடவடிக்கை:

கிரேக்க தேசியவாதிகளான ரீகாஸ், கொரேஸ் ஆகியோர் மக்களை சுல்தானின் அடக்கு முறை ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடுத்தினர். ரீகாஸ் என்பவர் 'ஹடேரியா பிலைக்' என்ற ரகசியக் கழகத்தை ஆரம்பித்தார். இதனால் சுல்தானால் கொலை செய்யப்பட்டார். ரீகாசின் மரணத்திற்குப் பிறகு கொரேஸ் என்பவர் கிரேக்க மக்களின் பழங்காலப் பெருமைகளையும், தேசிய உணர்வையும் மக்களிடையே தனது பேச்சாற்றல் மூலம் வெளிப்படுத்தினார்.

### 5. கிரேக்க திருச்சபையின் நடவடிக்கைகள்:

மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கிரேக்க திருச்சபை அருந்தொண்டாற்றியது. பல பள்ளிக் கூடங்கள்

நிறுவப்பட்டன. வெளிநாட்டுக்குச் சென்று உயர்கல்வி கற்க பல கிரேக்கர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் திரும்பி வந்து மக்களிடையே தேசிய உணர்வை பரப்பினர்.

## விடுதலைப் போரின் ஆரம்பம்:

1820- கிரேக்க மக்கள் தங்கள் விடுதலைப் போரை ஆரம்பித்தனர். நாடெங்கிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரகசியக் கழகமான ஹடேரியா பிலைக் (Hetairia Philike) உறுப்பினர்கள் மக்களிடையே தேசிய உணர்வை பரப்பினர். சுல்தான் கலகக்காரர்களை படுகொலை செய்தார். 1821-ல் அலக்ஸாந்தர் யப்சிலந்தி (Alexander Ypsilanti) என்பவரின் தலைமையில் கிரேக்கப்புரட்சி வெடித்தது. ஆனால் அப்போது ரஷ்யா மெட்டர் நிக்கின் செல்வாக்கிற்குட்பட்டிருந்ததால் கிரேக்கருக்கு உதவ முன்வரவில்லை. யப்சிலந்தி கைது செய்யப்பட்டார். புரட்சி அடக்கப்பட்டது.

1821-ல் மீண்டும் மோரியா (Morea) பகுதியில் புரட்சி துவங்கியது ஏராளமான முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். ஆனால் சுல்தான் கிரேக்கர்களின் எழுச்சியை ஈவிரக்கமில்லாமல் ஒடுக்கினார். ஆயிரக் கணக்கான கிரேக்கர்கள் கொல்லப்பட்டனர். இருந்த போதிலும் ஏதென்சிலும், அதன் அருகாமையிலுள்ள கடற்கரைப் பகுதியிலும் கிரேக்கர்கள் தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். 1822-ல் அங்கு ஒரு தற்காலிக அரசு ஒன்றைப் பிரகடனப் படுத்தி அதன் தலைவராக அலக்ஸாந்தர் மெராக்டே என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்நிலையில் கிரேக்கர்களின் எழுச்சியை அடக்குவதற்கு துருக்கிய சுல்தான் எகிப்திய பாஷா முகமது அலி என்பவரின் உதவியை நாடினார். முகமதுஅலி தனது மகன் இப்ராகிம் பாஷாவின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இந்த உதவிக்கு ஈடாக மொரியா, சிரியா, கிரீட் ஆகிய பகுதிகளைத் தருவதாக சுல்தான் ஒப்புக் கொண்டார். இப்ராகிம் அலியின் படைகள் வேகமாக முன்னேறி கடும் தேசத்தை விளைவித்தன. மொரியாவை விடுவித்தது. கிரேக்கத் திருச்சபை பேட்ரியார்க் அவர் அரண்மனை வாயிலேயே தூக்கிலிடப்பட்டார். அச்சமயத்தில் தான் ஐரோப்பிய நாடுகள் இப்பிரச்சனையில் தலையிட்டன. இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் 1827, ஜூலை 6-ம் தேதி லண்டன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. அதன்படி துருக்கியும் கிரீசும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். கிரேக்கர்களின் சுயாட்சியை சுல்தான் அங்கீகரிக்க வேண்டும். இதனை சுல்தான் ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர் மீது போர் தொடுக்க நேரிடும் என்று கூறப்பட்டது.

சுல்தான் பணிய மறுக்கவே மூன்று வல்லரசுகளின் கூட்டுக் கடற்படை துருக்கியக் கடற்பகுதிக்குள் நுழைந்தது. 1827, ஆகஸ்ட் 12-ல் நவாரினோ கடற்போரில் (Battle of Navarino) துருக்கிய எகிப்திய கூட்டுக்

கப்பற்படை அழிக்கப்பட்டது. இதற்குப் பிறகு இங்கிலாந்தும் பிரான்சும் தொடர்ந்து போரிட மறுத்துவிட்டன. ஆனால் கிரேக்க மக்களைக் காக்கும் தார்மீக உரிமை தனக்கு இருப்பதாகக் கூறி ரஷ்ய சார் முதலாம் நிக்கோலஸ் போரை தொடர்ந்து நடத்தினார். வாலாச்சியாவும், மோல்டேவியாவும் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஏட்ரியநோப்பிள் கைப்பற்றப்பட்டு, கான்ஸ்டாண்டி நோபிளை நெருங்கியது ரஷ்யப்படை எனவே சுல்தான் சமாதானத்திற்கு உடன்பட்டார். போர், 1829 செப்டம்பர் 14-ல் செய்து கொள்ளப்பட்ட ஏட்ரிய நோப்பிள் உடன்படிக்கைப்படி முடிவடைந்தது.

**ஏட்ரிய நோப்பிள் உடன்படிக்கை (Treaty of Adrianople):** 1829 செப்டம்பர்,14

இந்த உடன்பபடிக்கையின் படி,

1. துருக்கியக் கிரேக்க நாட்டின் விடுதலையை அங்கீகரித்தது.

2. டான்யூப் நதிப்பகுதிகளிலிருந்து பாதுகாப்புக் கோட்டைகள் அழிக்கப்பட்டன. போர் இழப்பீட்டுத் தொகை தர துருக்கி சம்மதித்தது.

3. மால்டோவியா, வாலாச்சியா ஆகிய பகுதிகள் ரஷ்ய பாதுகாப்பின் கீழ் சுய ஆட்சி பெற்ற பகுதிகளாக ஆயின.

4. காகசின் ஒரு பகுதி ரஷ்யாவுக்குக் கிடைத்தது. பாஸ்பரஸ் நீரிணைப்பு வழியாக ரஷ்ய வாணிபக் கப்பல்கள் தங்குதடையின்றி செல்ல வழி ஏற்பட்டது.

இவ்வாறு கிரேக்க சுதந்திரப் போரின் முடிவில் கிரிஸ் ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் இந்த போரின் மூலம் அதிக நன்மையடைந்த நாடு ரஷ்யாதான். பால்கனில் ரஷ்யஆதிக்கம் பரவ ஆரம்பித்தது. துருக்கி பலவீனம் அடைந்தது.

## 2. மெகமத் அலி விவகாரம்
## (Mehemat Ali Affairs, 1813-40)
## (or)
## (எகிப்திய-துருக்கியப்போர்)

எகிப்தின் பாஷாவாக இருந்த மெகமத் அலி நவீன காலத்தில் இஸ்லாமிய உலகில் தோன்றிய மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு தலைவராவார். சிறுவயதில் இவர் ஆதரவற்ற அனாதையாகவே அலைந்தார். பின்னர்எகிப்தியப் படைப்பிரிவில் ஒரு வீரனாகச் சேர்ந்தார். நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்த போது மெகமத் அலி

தலைமையில்தான் ஒரு படை அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் அப்படைகளுக்குத் தலைமைப் பொறுப்பேற்று தான் இருந்த இடத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டார்.

எகிப்திலிருந்த ஆங்கிலப்படை வெளியேறிய போது எகிப்தை யார் கட்டுப்படுத்துவது என்பது பற்றி துருக்கியர்கட்கும், மம்லூக்குகளுக்குமிடையே ஏற்பட்ட சச்சரவுகளின் விளைவாக ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனதுபடைகளுடன் வெற்றிகரமாக கெய்ரோ நகருக்குள் நுழைந்தார். அப்போது அவருக்கு வயது 35. அது முதல் அவரது அதிகாரமும், புகழும் அதிகரித்துக் கொண்டே வந்தன. இவ்வாறு சாதாரண நிலையிலிருந்து தன்னுடைய திறமையாலும், ராஜதந்திரத்தினாலும் உயர் நிலையை அடைந்தார் மெகமத் அலி. ஐரோப்பாவே வியக்கும் வண்ணம் எகிப்தின் தன்னிகரில்லாத் தலைவராக விளங்கினார். 19-ம் நூற்றாண்டின் எகிப்து இவரது உருவாக்கமே ஆகும். மெகமத் அலியின் எழுச்சியால் கிழக்கத்தியப் பிரச்சனையில் பல புதிய பிரச்சனைகள் தோன்றின. ஐரோப்பிய நாடுகளின் உறவுகளில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டன.

## உள்நாட்டுக் கொள்கை:

மெகமத்அலி துருக்கி சுல்தானின் தலைமையை ஏற்றுக் கொண்டு அவருக்குக் கப்பம்கட்டும் ஆட்சியாளராகவே இருந்தார். தனது ஆட்சிக்குட்பட்ட எகிப்தில் நிலையான அமைதியை ஏற்படுத்தினார். தன்னை எதிர்த்த மம்லூக்குகளை படுகொலை செய்து அடக்கினார். நாட்டில் சரியான நீதியை வழங்கினார். தம் குடிமக்களுள் எந்த இனத்தினருக்கும், சமயத்தினருக்கும் சார்பின்றி நீதி வழங்கினார். எகிப்து இதுவரை கண்டிராத அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டினார். மெகமத் அலி தனது ஆட்சிப் பகுதியை விஸ்தரிக்க ஆசை கொண்டார். அதற்காக ஒரு லட்சம் படைவீர்களைத் திரட்டி அவர்களுக்கு ஐரோப்பிய முறையில் பயிற்சி அளித்தார். பிரெஞ்சு உதவியுடன் ஒரு வலிமைமிக்க கப்பற்படையையும் உருவாக்கினார்.

## மெகமத் அலியும் கிரேக்க சுதந்திரப் போரும்:

துருக்கியிடமிருந்து எகிப்தை விடுவித்து சுதந்திர நாடாக்கவும், பக்கத்து நாடுகளைவிட வலிமைமிக்க நாடாக எகிப்தை மாற்றுவதும், சிரியா, ஆசியாமைனர் ஆகியவைகளைக் கைப்பற்றி, பின்னர் துருக்கியப் பேரரசையே வெற்றிக் கொள்வதும் இவருடைய முக்கிய நோக்கங்களாகும். கிரேக்க சுதந்திரப் போர் இவரது ஆசைகளை நிறைவேற்ற நல்ல சந்தர்ப்பத்தை அளித்தது.

அப்போது துருக்கியப் பேரரசின் கீழ் இருந்த கிரீஸில் விடுதலைப் போர் நடைபெற்று வந்தது. 1821 முதல் 1824 வரை துருக்கியர்கள் கிரேக்க கிளர்ச்சியாளர்களால் தோற்கடிக்கப்பட்டு வந்தனர். நான்கு ஆண்டு காலமாக கிரேக்கப் புரட்சியை அடக்க முடியாமல் போகவே துருக்கி சுல்தான் இரண்டாம் மகமூத் எகிப்திய பாஷா அலியின் உதவியை நாடினார். அதற்காக மெகமத் அலியுடன் 1824-ல் உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார். அதன்படி மெகமத் அலிக்கு சிரியா, டமாஸ்கஸ், கிரீட் ஆகிய பகுதிகளை அவர் செய்யும் உதவிக்காக துருக்கி சுல்தான் கொடுக்க வேண்டும். இதன்படி 1824-ல் ஜூலை 26-ல் அலக்சாந்திரியாவிலிருந்து மெகமத் அலியின் மகனாக இப்ராகிம்பாஷா தலைமையில் பத்தாயிரம் வீரர்களையும் ஆயிரம் குதிரைப்படை வீரர்களையும் கொண்ட ஒரு படை புறப்பட்டது.

இப்ராகிமின் படைகள் வெற்றியடைந்தன. 1826-ல் மிஸ்ஸலோங்கி கைப்பற்றப்பட்டது. 1827, மே 6-ல் பலேரம் (Phalerum) போரில் கிரேக்கர்கள் தோற்கடிக்கப்பட்டனர். கிரேக்க அரசாங்கம் போரஸ் என்ற தீவுக்கு மாற்றப்பட்டது. இப்ராகிமின் இந்த வெற்றிகள் சுல்தான் மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளும் வியப்படைந்தன. இப்ராகிமின் முன்னேற்றத்தை நிறுத்த இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளின் கூட்டுப்படைகள் 1827, ஆகஸ்ட் 12-ல் 'நவாரினோ' (Battle of Navarino) என்ற இடத்தில் எகிப்திய துருக்கியப் படையை முற்றிலும் நாசம் செய்தன. கிரீஸ் சுதந்திரமடைந்தது. எகிப்தின் மீதிருந்த சுல்தானின் ஆதிக்கம் ஒழிந்தது.

## எகிப்திய- துருக்கியப் போர் : 1833

கிரேக்கப் புரட்சியை அடக்க தான் சுல்தானுக்குச் செய்த உதவிக்கு வாக்களித்தபடி சுல்தான் நடந்து கொள்ளவில்லை என்று மெகமத் அலி கோபம் கொண்டார். கிரீட் தீவு மட்டுமே கொடுப்பதாகக் கூறினார் சுல்தான். இதனால் ஆத்திரமடைந்த அலி தனக்கு வரவேண்டிய பகுதிகளை எப்படியும் பெறத் தீர்மானித்தார். இதனால் 1831-ல் துருக்கிக்கு எதிராகப் போர் தொடுத்தார். மெகமத் அலியின் மகன் இப்ராகிமின் தலைமையிலான படைகள் சிரியாவைத் தாக்கின. விரைவிலேயே காசா, ஜெருசலேம், ஜாஃபா (Gaza, Jerusalem, Jaffa) ஆகிய பகுதிகள் அடுத்தடுத்து விழ்ந்தன. ஆக்ரே (Acre) நகர் கைப்பற்றப்பட்டது. 1832, ஜூன் மாதம் டமாஸ்கஸ் நகரமும், ஜூலையில் அலெப்போ (Aleppo) நகரமும் விழ்ந்தன. பின்னர் பெய்லான் கணவாயில் (Beylon pass) நடைபெற்ற போரில் வெற்றியடைந்தார். இறுதியாக டிசம்பரில் கோனையா (Koniah) என்ற இடத்தில் நடைபெற்ற போரில் சுல்தானின் பெரும்படை ஒன்று அழிக்கப் பட்டது. பின்பு கான்ஸ்டாண்டி நோபிள் மீது படையெடுக்கப் போவதாக பயமுறுத்தினார் மெகமத் அலி.

இந்நிலையில் பேரதிர்ச்சியடைந்த சுல்தான் ஐரோப்பிய நாடுகளின் உதவியை நாடினார். இங்கிலாந்தும், பிரான்சும் உதவி செய்ய முன்வரவில்லை. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு துருக்கியின் மீது தனது பிடிப்பினை மேலும் வலுப்படுத்த நினைத்தார் சார் முதலாம் நிக்கோலஸ். எனவே 1833- ஏப்ரலில் பத்தாயிரம் பேர் கொண்ட படையை சுல்தானுக்கு ஆதரவாக அனுப்பினார். இதனால் துருக்கியில் ரஷ்யாவின் செல்வாக்கு அதிகரித்தது. இது இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் பீதியை ஏற்படுத்தியது. எனவே தாங்களும் ஒரு கப்பற்படைப் பிரிவை அனுப்பி வைத்தன. ரஷ்யா இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளை எதிர்த்துக் கொண்டு, கான்ஸ்டாண்டிநோபிள் மீது படையெடுப்பது எளிதல்ல என்பதை மெகமத்அலி உணர்ந்து கொண்டார். மேலும் மெகமத்அலி பிரான்சுடன் நட்பாக இருந்ததால் பிரான்சின் ஆலோசனையின்படி சுல்தானுடன் 1833-ல் உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார். அதன்படி மெகமத்அலி எகிப்தின் பாஷாவாக மட்டுமல்லாது, டாமஸ்கஸ்,சிரியா, ஆதனா, திரிபோலி மற்றும் கிரீட் ஆகியவற்றின் பாஷாவாக அங்கீகரிக்கப்பட்டார். இதனால் அவர் அதிகாரமும், புகழும் அதிகரித்தது. ஆனால் இப்பகுதிகளை ஆளும் அதிகாரம் மெகமத்அலிக்கு அவரது வாழ்நாள் மட்டுமே அளிக்கப்பட்டது. அவருடைய மகனுக்கு அரசுரிமை போகாது. மெகமத் அலிக்கான அரசு ஆணை 1833 மே 5-ல் பிறப்பிக்கப்பட்டது.

## உன்கியர் ஸ்கெலசி உடன்படிக்கை (Treaty of Unkiar Skelessi):

துருக்கி சுல்தான் இரண்டாவது முகமது, தனக்கு ரஷ்யா அளித்த உதவிக்காக நன்றி தெரிவித்தார். ரஷ்யாவுடன் சமாதான நட்புறவு உடன்பாடு ஒன்று செய்து கொண்டார். அதுவே 1833, ஜூலை 8-ல் கையெழுத்தான உன்கியர் ஸ்கெலசி உடன்படிக்கையாகும். இது கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்த ரஷ்யதூதர் 'ஆர்லோ'வின் முயற்சியினாலேயே செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி.

1. சுல்தானின் அனுமதியின்றி எந்த காலமும் பாஸ்பரஸ் மற்றும் டார்டனல்லஸ் நீரிணைப்பு வழியாக ரஷ்யக் கப்பல்கள் சென்றுவரலாம்.

2. இந்தச் சலுகைகளை வேறு எந்த வல்லரசும் ரஷ்யாவின் அனுமதியில்லாமல் துருக்கியிடமிருந்து பெறுதல் கூடாது.

3. துருக்கியப் பேரரசில் சூழ்நிலைகள் வற்புறுத்துமாயின் பாஸ்பரசுக்கு ஒரு படையை அனுப்ப ரஷ்யாவுக்கு சலுகை வழங்கப்பட்டது.

4. இஸ்தான்புல்லிலிருந்து ரஷ்யப் படைகள் வாபஸ் பெறப்பட்டன.

உன்கியர் ஸ்கெலசி உடன்படிக்கை கருங்கடலை ரஷ்ய ஏரியாக மாற்றியது. ரஷ்ய ஆதிக்கம் மத்தியதரைக்கடல் கடல் பகுதியில் பலப்படுத்தப்பட்டது. சுல்தான் ரஷ்யாவின் கைப்பாவையாக மாறினார். இதனை அறிந்த இங்கிலாந்தும் பிரான்சும் அதிர்ச்சியடைந்தன. இங்கிலாந்து வெளிநாட்டு அமைச்சர் பால்மெஸ்டன் ரஷ்யா தனிப்பட்ட நாடாக சுல்தானுடன் செய்து கொண்ட இந்த உடன்படிக்கையை வன்மையாகக் கண்டித்தார்.

## மீண்டும் எகிப்திய துருக்கியப் போர்: 1839

இதற்கிடையில் மெகமத் அலி சுல்தானின் தலைமையை ஏற்கப் போவதில்லை என்றும், சுல்தானுக்கு இனி கப்பம் கட்டப் போவதில்லை என்றும் 1838-ல் வெளிப்படையாக அறிவித்தார். சுல்தானும், மெகமத் அலியுடன் தான் 1833-ல் செய்து கொண்ட உடன்படிக்கை முட்டாள் தனமானது என்று நினைத்தார். இழந்த சிரியாவை மீண்டும் கைப்பற்ற நினைத்தார். எனவே சுல்தான் 1839-ல் சிரியா மீது படையெடுத்தார். ஆனால் அந்தப் படைகளை இப்ராகிமின் படைகள் 1839 ஜுன் 25-ல் நெசிப் (Nezib) என்ற இடத்தில் தோற்கடித்தது. அப்போது புதிதாகப் பதவியேற்ற சுல்தான் அப்துல்மஜீத் (Abdul Majid) முகமது அலி பாஷாவின் திட்டங்களை ஒடுக்க முடிவு செய்தார்.

## ஐரோப்பிய நாடுகளின் தலையீடு:

நெசிப் வெற்றிக்குப் பிறகு மெகமத்அலி "எகிப்து, சிரியா, திரிபோலி, கிரீட் ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பை தன் குடும்பத்தாரே மரபுரிமையாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதை சுல்தான் ஏற்றுக் கொண்டால் அவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளத்தயார்" என்று அறிவித்தார். ஆனால் இஸ்தான்புல்லிலிருந்த இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய ஐந்து வல்லரசுகளின் தூதர்கள் ஒன்று கூடி மெகமத் அலியின் நிபந்தனைகளை ஏற்கவேண்டாமென்று சுல்தான் அப்துல் மஜிதுக்கு ஆலோசனை கூறினர். துருக்கி இப்போது இந்த வல்லரசுகளின் கரங்களில் விழுந்தது.

## ஐரோப்பிய நாடுகளின் எச்சரிக்கை:

1840, ஜுலை 5-ல் இங்கிலாந்து, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து 'மெகமத் அலி சிரியாவிலிருந்து வெளியேற வேண்டுமென்றும், சுல்தானுக்கு அடிபணிய வேண்டுமென்றும் எச்சரித்தன. "இதனை ஏற்றுக் கொண்டால் எகிப்தின் மரபுரிமை பாஷாவாக உயர்த்தவும், மறுத்தால் அல்லது தாமதித்தால் மூன்று வல்லரசுகளின் கப்பற்படை எகிப்தையும் சிரியாவையும் உடனடியாக

முற்றுகையிடும்'' என்றும் மெகமத் அலி எச்சரிக்கப்பட்டார். ஆனால் இந்த கெடுவை அலி பொருட்படுத்தவில்லை. எனவே மூன்று நாடுகளின் கப்பற்படை சிரியாவை நோக்கிச் சென்றன. ஆங்கிலத்தளபதி நேப்பியர் (Napier) தலைமையில் ஏக்ரே (Acre)-ல் நடைபெற்ற போரில் இப்ராகிமின் படைகள் தோற்கடிக்கப்பட்டது. இந்த மூன்று வல்லரசுகளுக் கெதிராகவும், சுல்தானுக்கெதிராகவும் போர்புரிவது இயலாது என்பதைப் புரிந்து கொண்ட மெகமத் அலி நேப்பியருடன் சமாதானம் செய்து கொள்ள முன்வந்தார். அதன்படி மெகமத் அலி எகிப்தின் பாஷாவாக ஒப்புக் கொள்ளப்பட்டார். இப்போரின் மூலம் எகிப்தும், துருக்கியும் இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது.

## லண்டன் உடன்பாடு (London Convention): 1841, ஜூலை 13

இங்கிலாந்து இந்த வெற்றிகளுடன் திருப்தியடைந்துவிட வில்லை. உன்கியர் ஸ்கெலசி உடன்படிக்கையின் விதிகளை மாற்ற விரும்பியது. எனவே 1841 ஜூலை 13-ல் லண்டன் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. ரஷ்யாவும் அதில் கலந்து கொண்டது. அதில் கீழ்க்கண்ட பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. மெகமத் அலி எகிப்தின் மரபுரிமைப் பாஷாவாக மட்டும் அங்கீகரிக்கப்பட்டார். மற்றப் பகுதிகளின் ஆட்சிப் பொறுப்பு அவரிடமிருந்து பறித்துக் கொள்ளப் பட்டது.

2. எகிப்தின் வருமானத்தில் நான்கில் ஒரு பங்குக்குச் சமமான தொகையை அவர் சுல்தானுக்கு கப்பமாகக் கட்ட வேண்டும்.

3. சிரியாவிலிருந்து தனது படையை அவர் வெளியேற்ற வேண்டும்.

4. எகிப்தில் மெகமத் அலி பதினைந்தாயிரம் ஆயிரம் வீரர்கட்கு மேல் வைத்துக் கொள்ளக் கூடாது.

5. உன்கியர்ஸ்கெலசி உடன்படிக்கை செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. நீரிணைப்புகள் அனைத்தும் அனைத்து நாடுகளின் கடற்போக்குவரத்துக்குத் திறந்து விடப்படும். ரஷ்யாவின் போர்க்கப்பல்கள் அப்பகுதிக்குள் நுழையத் தடைவிதிக்கப்படும்.

மெகமத் அலியின் மீது திணிக்கப்பட்ட இந்த உடன்படிக்கை முடிவுகள் அவரது இதயத்தையே பிளந்து விட்டது. மேலும் அவரது மகன் திறமைவாய்ந்த இப்ராகிமின் மரணம் அவரது சோகத்தை அதிகப்படுத்தி விட்டது. 1849-ல் மெகமத் அலி மரணமடைந்தார். இந்த லண்டன் உடன்படிக்கையின் விளைவாக கிழக்கத்தியப் பிரச்சனையில் இங்[illegible] உயர்ந்தது. ரஷ்யாவின் செல்வாக்கு

கட்டுப்படுத்தப்பட்டது. இங்கிலாந்துக்கும் ரஷ்யாவுக்குமிடையே கருத்து வேற்றுமையும், கசப்புணர்ச்சியையும் மேலும், மேலும் வளர ஆரம்பித்தது.

## 3. கிருமியப் போர்

### (Crimean War) 1854 - 56

கிழக்கத்தியப் பிரச்சனையில் கிருமியப் போர் ஒரு திருப்பு முனையாக விளங்கியது. ஐரோப்பிய வரலாற்றில் இப்போர் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்தப் போரில் எல்லா ஐரோப்பிய நாடுகளும் பங்கு கொண்டன. துருக்கியின் சீர்குலைவை மையமாக வைத்துக் கொண்டு ஐரோப்பிய வல்லரசுகள் நடத்திக் கொண்டிருந்த அரசியல் சூதாட்டத்தின் ஒரு பகுதியே கிருமியப் போர் ஆகும். மத்திய தரைக்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்துவது பற்றி ரஷ்யாவுக்கும் நேச நாடுகளான பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்தான் இப்போர். இது ஐரோப்பிய அரசியலில் பல முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. கிருமியத் தீபகற்பத்தில் போர்கள் நடைபெற்றதால் இதற்கு கிருமியப்போர் எனப்பெயர் ஏற்பட்டது.

### போருக்கான காரணங்கள்:

#### 1. துருக்கியின் மீது ரஷ்யாவின் திட்டங்கள்:

ரஷ்ய சார் முதலாம் நிக்கோலஸ் துருக்கியை ' ஐரோப்பாவின் நோயாளி' (Sickman of Europe) என்று வர்ணித்தார். சிதைந்து, சீர்குலைந்து போகக்கூடிய நிலையிலுள்ள துருக்கியப் பேரரசின் பகுதிகளை இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்டு பங்குபோட்டுக் கொள்ள விரும்பினார். இங்கிலாந்துக்கு எகிப்தையும் கிரீட்டையும் கொடுத்துவிட்டு, தான் கான்ஸ்டாண்டிநோபிளை எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டார். மேலும் பால்கன் பகுதியிலுள்ள ஸ்லாவ் இனத்தவரைப் பாதுகாக்கும் பொறுப்பு தனக்கே உண்டு என்று வாதாடினார். நிக்கோலஸின் இந்தத் திட்டங்களையும், விருப்பங்கயையும், கொள்கைகளையும் இங்கிலாந்து ஏற்றுக் கொள்ள மறுத்தது.

#### 2. ரஷ்யத் திட்டங்களுக்கு இங்கிலாந்தின் எதிர்ப்பு:

ரஷ்யாவின் திட்டங்களை இங்கிலாந்து நிராகரித்தது. துருக்கி ஒரு நோயாளி என்பதை இங்கிலாந்து ஏற்கவில்லை. ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கிக்கு உதவிசெய்தால் அது மீண்டும் வலிமையாக இருக்க முடியும் என்று நம்பியது. துருக்கியப் பேரரசு பலவீனமடைந்து வீழ்ச்சியடைந்தால் அப்பகுதியில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை ஏற்படுத்திவிடும் என்றும், துருக்கிக்கு தான் செல்லும் வழிக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்றும்

இங்கிலாந்து அஞ்சியது. எனவே இங்கிலாந்துக்கும் ரஷ்யாவுக்கும் இடையே உறவு நிலை பாதிக்கப்பட்டது.

## 3. மூன்றாம் நெப்போலியனின் பேராசை:

1852ல் பிரான்சின் பேரரசராக முடிசூட்டிக் கொண்ட மூன்றாம் நெப்போலியன், மாவீரன் நெப்போலியன் போனபார்ட் அடைந்த பெருமையினைத் தானும் அடைய விரும்பினார். ஏதேனும் ஒரு போரில் பெரும் வெற்றி பெற்று புகழ் பெறுவதுடன் பிரான்சில் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள நினைத்தார். பால்கன் நாடுகளின் நிலைமை அவருக்கு ஏற்ற வாய்ப்பினை அளித்தது. துருக்கிப் பேரரசைப் பங்கீடு செய்து அதில் பெரும் பகுதியைப் பிரான்சுக்குச் சேர்க்க வேண்டுமென்று பேராசைப்பட்டார்.

## 4. பெத்லகேம் ஆலயக் கட்டுப்பாட்டுப் பிரச்சனை:

துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த பாலஸ்தீனத்திலுள்ள ஜெருசலேம், மற்றும் பெத்லகேமிலுள்ள புனித ஆலயங்களை நடத்தி வரும் உரிமை பற்றி பிரச்சனை ஏற்பட்டது. ''இந்தப் புனித ஆலயங்களை ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைத் சேர்ந்த மதகுருமார்கள் கட்டுப்பாட்டில் வைப்பதா, அல்லது கிரேக்க வைதீக் திருச்சபைக் குருமார்களின் கீழ் வைப்பதா'' என்பதே பிரச்சனை. ரோமன் கத்தோலிக்க மதகுருமார்கள் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டுமென்று பிரான்சும், கிரேக்க வைதீக திருச்சபை குருமார்கள் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டுமென்று ரஷ்யாவும் கூறின. பெத்லகேம் நகர் சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்டி ருந்ததால் இப்பிரச்சனை பற்றி தீர்ப்பு அளிக்கும்படி சுல்தானிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் சுல்தான் ரஷ்யாவின் நிலையை ஆதரிக்காமல் பிரான்சுக்குச் சாதகமாக 1852-ல் தீர்ப்பு வழங்கினார். இதனால் ரஷ்யாவில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. துருக்கியுடனான உறவுகளை ரஷ்யா துண்டித்துக் கொண்டது.

## 5. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு:

துருக்கி சுல்தானின் தீர்ப்பினால் ரஷ்யா அதிகக் கோபமடைந்தது. துருக்கியிலுள்ள கிரேக்க வைதீக திருச்சபையைச் சார்ந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு தன்னுடையது என்று ரஷ்யா கூறியது. இதனையும் சுல்தான் நிராகரிக்கவே கோபமடைந்த ரஷ்யா ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டது. 1853-ஜூலையில் வாலாச்சியா, மோல்டேவியா ஆகிய இரு பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. 1853 அக்டோபரில் ரஷ்யாவின் மீது சுல்தான் போர் தொடுத்தார். கிருமியப் போர் ஆரம்பமானது.

## [illegible] (Times of the war)

[illegible]

முதலில் வாலாக்கியா, மோல்டேவியா பகுதிகளிலிருந்து ரஷ்யா பின்வாங்கியது. இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் கூட்டுப்படைகள் 1854, செப். [illegible] ம் தேதி கிரிமியாவில் இறங்கின. ரஷ்யா வசமிருந்த செபஸ்டபூல் துறைமுகம் முற்றுகையிடப்பட்டது. இந்த முற்றுகை ஓராண்டிற்கும் மேலாக நீடித்தது. செபஸ்டபூல் முற்றுகையின் போது பாலக்லாவா (Balaklava) என்ற இடத்தில் பெரும் போர் நிகழ்ந்தது. இதில் கூட்டுப்படை வீரர்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராடி வெற்றி பெற்றதை டென்னிசன் தனது கவிதைகளில் தீட்டியுள்ளார். இதற்குச் சிறிது காலத்திற்குப் பின் இங்கர்மன் (Inkerman) என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் ரஷ்யர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

செபஸ்டபூல் (Sebastapol) முற்றுகையின் போது கூட்டுப் படையினருக்கு பலத்த ஆட்சேதம் ஏற்பட்டது. ஏராளமான பிரிட்டிஷ் வீரர்கள் மாண்டுபோயினர். எண்ணற்ற வீரர்கள் காயமடைந்தனர். விரைந்து பரவிய தொற்று நோய்களும் வீரர்களை நிலைகுலைய வைத்தன. எல்லாவற்றிற்கும் மேலாக தாங்க முடியாத கடுங்குளிரால் பலர் இறந்தனர். இந்த நேரத்தில்தான் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) என்ற அம்மையாரின் உதவி வீரர்கட்கு கிடைத்தது. ஸ்குட்டாரி என்ற இடத்திலுள்ள மருத்துவமனையில் சிறந்த மருத்துவ உதவி செய்ததால் ஏராளமான ஆங்கில வீரர்கள் காப்பாற்றப் பட்டனர். அவரது உதவியைப் பெற்ற வீரர்கள் 'the lady with the lamb' என்று அவரை பெருமையுடன் அழைத்தனர்.

1855, செப்டம்பர் 9-ல் 349 நாள் முற்றுகைக்குப்பிறகு செபஸ்டபூல் வீழ்ந்தது. ரஷ்யாவில் முதலாம் நிக்கோலஸ் 1855, பிப்ரவரியில் இறந்தபின் பதவியேற்றிருந்த சார் இரண்டாம் அலெக்சாந்தர் தொடர்ந்து போரிடுவதில் பயனில்லை என்று முடிவு செய்து போரை நிறுத்த சமாதானத்தை நாடினார். தளர்ந்திருந்த கூட்டு நாடுகளும் சமாதானத்திற்கு இசைந்தன. செபஸ்டபூலைப் பாதுகாக்க ரஷ்யர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சிகள்

...ஷ்ய வரலாற்றில் அழியா இடம் பெற்றுவிட்டன. ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் 'செபஸ்டபூலின் கதைகள்' என்ற வீர காவியத்தை எழுதினார்.

**பாரிசு உடன்படிக்கை (Treaty of Paris): 1859 மார்ச் 9**

கிருமியப் போர் பாரிசு உடன்படிக்கையின்படி முடிவடைந்தது. இந்த உடன்படிக்கையின்படி.

1. துருக்கியின் ஒன்றுமையும், சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுடன் துருக்கி சமமாகக் கருதப்பட்டு சேர்க்கப்பட்டது.

2. துருக்கி சுல்தான் தனது ஆதிக்கத்தின்கீழ் வாழ்ந்து வரும் கிறிஸ்தவர்களை நன்றாக நடத்துவதாகவும், நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்வதாகவும் ஒப்புக் கொண்டார்.

3. வாலாச்சியா, மோல்டோவியா ஆகிய இரண்டு பகுதிகளும் சுதந்திரமடைந்தன. (பிற்காலத்தில் இவை இரண்டும் இணைந்து ருமேனியா என்று அழைக்கப்பட்டது.)

4. கருங்கடல் பொதுவாக்கப்பட்டது. அங்கு எல்லா நாடுகளின் வியாபாரக் கப்பல்கள் மட்டுமே சென்று வரலாம். எந்த நாட்டின் போர்க் கப்பலும் நுழையக்கூடாது.

5. அமைதிக் காலத்தில் டார்டனல்லஸ் துறைமுகத்தில் போர்க் கப்பல்கள் தங்கக்கூடாது.

6. டான்யூப் நதி எல்லா நாட்டுக் கப்பல் போக்குவரத்திற்கும் திறந்து விடப்பட வேண்டும்.

7. கருங்கடல் பகுதியில் கடற்படைத் தளங்கள் அமைக்க தனக்கிருந்த உரிமையை ரஷ்யா இழந்தது.

8. செர்பியா துருக்கியின் நேரடித் தலையீடு இல்லாத சுயாட்சி பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

## கிருமியப்போரின் முக்கியத்துவம் (விளைவுகள்):

1. கிருமியப் போரின் விளைவாக, கருங்கடல் பகுதியிலும், மத்தியதரைக்கடல் பகுதியிலும், பால்கன் தீபகற்பத்திலும் ரஷ்யாவின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. பால்கனில் கிரேக்க வைதீகத் திருச்சபையைச் சார்ந்த கிறிஸ்தவ மக்களின் பாதுகாப்பாளராக தன்னை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கைவிட வேண்டியதாயிற்று.

மொத்தத்தில் கிருமியப் போரினால் இதுவரை ரஷ்யாவுக்கிருந்த பெருமையும், மதிப்பும், புகழும், மரியாதையும் குறைந்து போயிற்று பெருத்த அவமானம் அடைந்தது ரஷ்யா.

2. ஐரோப்பாவின் நோயாளி என்று வர்ணிக்கப்பட்ட துருக்கியின் வீழ்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது. ஐரோப்பியக் கூட்டமைப்பில் சேர்க்கப்பட்டதால் துருக்கிக்கு புதிய அந்தஸ்து கிடைத்தது. எனவே புத்துயிர் பெற்று தன் சொந்தக்கால்களால் நிற்கும் அளவுக்கு துருக்கியின் நிலை மாறியது.

3. கிருமியப்போரின் விளைவாக இத்தாலிய இணைப்பு ஏற்பட்டது. நேசப் படைகளுக்கு சார்டீனியா உதவியதால், பாரிஸ் மாநாட்டில் கவூர் கலந்து கொண்டார். அங்கு இத்தாலிய இணைப்பு குறித்து பிரச்சனையை எழுப்பினார். இதன் மூலம் மூன்றாம் நெப்போலியனுடன் கூட்டுச் சேரவும், பின்னர் இத்தாலி ஐக்கியம் அடையவும் காரணமானது.

4. கிருமியப் போரில் ஆஸ்திரியா நடுநிலை வகித்ததாலேயே ரஷ்யா எளிதில் தோற்றடிக்கப்பட்டது. இதனால் ரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. இதனைப் பிஸ்மார்க் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார். 1866-ல் நடைபெற்ற ஆஸ்திரியப் பிரஷ்யப் போரில் ரஷ்யாவை நடுநிலை வகிக்கும்படி செய்து, ஆஸ்திரியாவைத் தோற்கடித்து ஜெர்மானிய இணைவை ஏற்படுத்தினார் பிஸ்மார்க்.

5. ரஷ்ய சார் முதலாம் நிக்கோலஸின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் தோல்வியையே இப்போர் காட்டுகிறது. போரில் ஏற்பட்ட தோல்வி ரஷ்யாவின் அனைத்து மக்களின் உள்ளங்களிலும் பெரும் சீர்திருத்தம் தேவை என்ற உண்மையை உணர்த்தியது. 1855-ல் பதவியேற்ற சார் இரண்டாம் அலக்சாந்தர் ஏராளமான சீர்திருத்தங்களை அறிவித்தார். சீர்திருத்த சகாப்தம் ரஷ்யாவில் தொடங்கியது. அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. தாராள ஜனநாயகச் சீர்திருத்தங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டன.

6. கிருமியப் போரின் விளைவாக பிரான்சுக்கு அதிக நன்மைகள் கிடைக்காமல் போனாலும் மூன்றாம் நெப்போலியனின் புகழும் பெருமையும் உயர்ந்தது. அமைதி ஒப்பந்தம் ஏற்பட பாரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டதால் பாரிசு நகரம் பிரபலமானது. ஐரோப்பிய அரசியலில் மூன்றாம் நெப்போலியன் முன்னணி இடத்தைப் பெற்றார். இவ்வாறு எதை விரும்பி போரில் கலந்து கொண்டாரோ அது நெப்போலியனுக்குக் கிடைத்தது.

7. கிருமியப் போரின் போது ஸ்குட்டாரி மருத்துவமனையில் நைட்டிங்கேல் அம்மையார் செய்த மருத்துவ சேவை உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. பெண்கள் நர்சுகளாகப் பணி புரிய அது ஒரு முன் மாதிரியாக அமைந்தது. செஞ்சிலுவைச் சங்க இயக்கத்தின் ஆரம்பமாகவே அவரது சேவை அமைந்தது.

ஆனால் வரலாற்றில் இந்த கிருமியப் போர் தேவையில்லாத போராகவே கருதப்படுகிறது. ஏனெனில் இப்போரின் முடிவில் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கை தண்ணீரில் எழுதப்பட்ட எழுத்து போலாகிவிட்டது. துருக்கியின் வீழ்ச்சியை இந்த உடன்படிக்கையால் நிறுத்த முடியவில்லை. சிறிது காலத்திற்குள்ளாகவே ரஷ்யா மீண்டும் கடல் வழியாகவும், நிலமார்க்கமாகவும் துருக்கியப் பேரரசில் முன்னேறத் தொடங்கியது.

## 4. ரஷ்ய-துருக்கியப் போர்

## (Russo Turkish War 1876 - 78)

### (பெர்லின் மாநாட்டுக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகள்)

கிருமியப் போருக்குப்பின் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கையால் கிழக்கத்தியப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க முடியவில்லை. அந்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தவும் இல்லை. துருக்கி தனது பேரரசிலுள்ள கிறிஸ்தவ மக்களின் நலன்களைக் கவனித்துக் கொள்வதாக அந்த உடன்படிக்கையின்படி இசைந்தது. ஆனால் உடன் படிக்கை விதிகளை காற்றில் பறக்க விட்டு விட்டது. எனவே துருக்கியப் பேரரசில் பல பகுதிகளில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. துருக்கியின் வீழ்ச்சியை யாராலும் தடுக்க முடியவில்லை. 1856-க்கும் 1876-க்குமிடையே நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் ரஷ்ய துருக்கியப்போர் ஏற்படக் காரணமாயின. அதன் தொடர்ச்சியாகவே 1878-ல் பெர்லின் மாநாடும் கூட்டப்பட்டது.

**காரணங்கள்:**

**1. ருமேனியா என்ற புதிய நாட்டின் உதயம்:**

1856-ம் வருட உடன்படிக்கைக்குப்பின் வாலாச்சியாவும் மோல்டேவியாவும் இணைக்கப்பட வேண்டுமென்று மூன்றாம் நெப்போலியன் கூறினார். இது உடன்படிக்கையின் ஷரத்துக்களை மீறிய செயலாகும். 1861-ல் இவ்விரண்டு பகுதிகளும் சேர்ந்து ருமேனியா (Rumania) என்ற புதிய நாடு உதயமானது. இதனைத் துருக்கி வன்மையாகக் கண்டித்தது. 1867-ல் செர்பியாவும் சுதந்திரமடைந்தது.

## 2. ரஷ்யாவின் ஆதிக்க விரிவாக்கம்:

கிருமியப் போரினால் ரஷ்யா தான்இழந்த மதிப்பையும் மரியாதையையும் மீட்க முயற்சித்தார் ரஷ்ய சார் இரண்டாம் அலெக்சாந்தர். அந்தப் போரின் முடிவில் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கையை மீறுவதற்கு பிராங்கோ-பிரஷ்யப்போர் 1870-71 அலெக்சாந்தருக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. பிஸ்மார்க்கின் நட்புறவைப் பெற்றுக்கொண்ட சார். அவருடைய மறைமுக உதவியுடன் கருங்கடல் பகுதியிலுள்ள செபஸ்டபூலில் ஒரு கடற்படைத் தளத்தை ஏற்படுத்தினார். இவ்வாறு பாரிசு உடன்படிக்கையை மீறியது ரஷ்யா. மேலும் தனது ஆதிக்க விரிவாக்கத்துக்காக துருக்கிப் பேரரசு மீது தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டார் சார் இரண்டாம் அலெக்சாந்தர்.

## 3. சுல்தானின் அடக்குமுறை:

பாரிசு உடன்படிக்கையின்படி, தன் கீழ் அடங்கி உள்ள நாடுகளில் சீர்திருத்தங்கள் செய்வதாக வாக்களித்த சுல்தான், எந்த சீர்திருத்தமும் செய்யவில்லை. வரி வசூலிப்பவர்களின் கொடுமை அதிகரித்தது. மக்கள் சுல்தான் ஆட்சி மீது அதிர்ப்தியடைந்தனர். மேலும் பால்கன் மக்களிடையே தேசிய உணர்வு வளர்ந்தது. இதனால் துருக்கிய விவகாரங்களில் தலையிட ரஷ்யாவுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

## 4. பல்கேரியப் படுகொலை:

செர்பியா, கிரீஸ், ருமேனியா ஆகியவை சுதந்திரம் அடைந்ததைப் பார்த்த போஸ்னியாவும், ஹெர்சிஹோவினாவும் துருக்கி சுல்தானை எதிர்த்து 1875-ல் கிளர்ச்சியில் ஈடுபட்டன. முஸ்லீம்களுக்கு எதிரான உணர்வுகள் ஒன்றுபட்டதால் பால்கன் பகுதி முழுவதிலுமே கிளர்ச்சிபரவியது. 1876-ல் பல்கேரியப் புரட்சியாளர்கள் நூற்றுக்கணக்கான துருக்கிய அதிகாரிகளைக் கொன்றனர். எனவே சுல்தான் இப்புரட்சியை ஈவிரக்கமில்லாமல் நசுக்கினார். பழிவாங்க அனுப்பப்பட்ட பெரும் துருக்கியப்படை அகப்பட்ட ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை படுகொலை செய்தது. 'மாரிடிசா' பள்ளத்தாக்கிலிருந்த எண்பது ஊர்களில் பதினைந்து மட்டுமே தப்பிப் பிழைத்தன. 'பாடக்' (Batak) நகரிலிருந்த ஏழாயிரம் பேரில் ஐந்தாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு சுமார் பன்னிரண்டாயிரம் கிறிஸ்தவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட, படுகொலை செய்யப்பட்டனர். இந்த நிகழ்ச்சி 'பல்கேரியப் படுகொலை' என்றழைக்கப்படுகிறது. இதுபற்றி ஒரு ஆங்கில உயர் அதிகாரி கூறியதாவது. "Perhaps the most heinous crime that has stained the history of present century''.

## பல்கேரிய மக்களுக்கு ரஷ்ய ஆதரவு:

பல்கேரியப் படுகொலைகளைக் கேட்ட ஆங்கில மக்கள் அதிர்ப்படைந்தனர். மாஜி பிரதமர் கிளாட்சன் 'ஐரோப்பிய நோயாளியை மூட்டை முடிச்சுகளுடன் ஐரோப்பாவை விட்டு வெளியேற்ற வேண்டும்' என்று கண்டித்தார். ஆனால் அரசாங்கமோ துருக்கியின் கொடுமையைவிட ரஷ்யாவின் அபாயம் பெரியது என்று நினைத்து உதவிக்கு வரவில்லை. துருக்கிய விவகாரங்களில் தலையிட சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த ரஷ்யா பல்கேரியப் படுகொலையைக் கண்டித்தது. அத்துடன் பல்கேரிய மக்களுக்கு ஆதரவாக 1877, ஏப்ரல் 14-ம் தேதி துருக்கி மீது போர் தொடுத்தது. பல்கேரியா, ருமேனியா, செர்பியா, மாண்டிநெக்ரோ ஆகிய நாடுகளும் ரஷ்யாவுடன் சேர்ந்து கொண்டன.

## போரின் போக்கு:

1877, ஜூன் மாதம் ரஷ்யப்படை துருக்கியப் பேரரசின் வட பகுதியிலிருந்து ருமேனியா வழியாக டான்யூப் நதியைக் கடந்தது. கடும் போருக்குப் பின்னர் பிளிவ்னா (Plevna) கோட்டை பிடிக்கப்பட்டது. 'கார்ஸ்' (Kars) கோட்டையும் வீழ்ந்தது. துருக்கியப் படைகள் படுதோல்வி அடைந்தன. 1878, ஜனவரியில் சோபியா, ஏட்ரிய நோபிள் ஆகிய நகரங்களும் வீழ்ந்தன. துருக்கியத் தளபதி ஆஸ்மன் பாஷா (Osman Pasha) தனது நாற்பதாயிரம் வீரர்களுடன் சரணடைந்தார். கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அருகிலிருந்த சான்ஸ்டீபனோ (Sanstefeno) என்னுமிடத்தில் கையெழுத்தான உடன்படிக்கைப்படி ரஷ்ய-துருக்கியப் போர் முடிவடைந்தது.

## சான்ஸ்டீபனோ உடன்படிக்கை (Treaty of Sanstefeno):

1878, மார்ச் 3

ரஷ்யாவும் துருக்கியும் செய்து கொண்ட சான்ஸ்டீபனோ உடன்படிக்கையின் படி,

1. செர்பியா, ருமேனியா, மான்டிநேக்ரோ ஆகிய நாடுகள் சுதந்திர நாடுகளாயின.

2. பல்கேரியா ஒரு தன்னாட்சி பெற்ற கிறிஸ்தவ நாடாக அங்கீகரிக்கப்பட்டது. அதன் எல்லைகள் டான்யூபிலிருந்து ஏஜியன் கடல் வரையிலும், கருங்கடல் முதல் ஏக்ரித் ஏரி வரையிலும் பரவியிருந்தது.

3. ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளின் நேரடிக் கண்காணிப்பில் போஸ்னியாவிலும், ஹெர்சிஹோவினாவிலும் துருக்கி சுல்தான் சீர்திருத்... ...ந்து வரவேண்டும்.

4. கிருமியப் போரின் முடிவில் ரஷ்யா தான் இழ பெஸ்ஸரோபியாவுடன் பாதும் (Batum), கார்ஸ் (Kars) ஆகி நகரங்களையும் பெற்றுக் கொண்டது.

5. பாஸ்பரஸ், டார்டனல்லஸ் (Bosphoures, Dardanelles) வழிப்பகுதி எல்லா நாடுகளின் கப்பல் போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட வேண்டும்.

6. ஆர்மீனியாவின் ஒரு பகுதி ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட வேண்டும். தோப்ருஜா (Dobruja) பகுதியை துருக்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட ரஷ்யா, அதை ரூமேனியாவுக்கு கொடுத்துவிட்டு பதிலுக்கு தான் 1856-ல் இழந்த பெசரோபியாவை பெற்றுக் கொண்டது.

இவ்வாறு சான்ஸ்டீபனோ உடன்படிக்கைப்படி ரஷ்யா மீண்டும் பால்கன் பகுதியில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. பாரீஸ் உடன்படிக்கையினால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொண்டது. ரஷ்யா பால்கனில் உருவாக்கப்பட்ட புதிய நாடுகள் துருக்கியப் பேரரசின் முடிவைப் பறைசாற்றின.

## பெர்லின் மாநாடு: 1878, ஜூலை 13

சான்ஸ்டீபனோ உடன்படிக்கையை இங்கிலாந்தும் ஆஸ்திரியாவும் வன்மையாகக் கண்டித்தன. 'பால்கன் பிரச்சனை ஒரு பொதுப் பிரச்சனை அதில் எந்த ஒரு தனி நாடும் தனிமையாகத் தீர்வு காணக்கூடாது' என்று இங்கிலாந்து பிரதமர் கூறினார். இவர் இப்படிக் கூறக்காரணம், பால்கன் பகுதியில் ரஷ்யா செல்வாக்கு பெற்றுவிட்டால் அண்மைக் கிழக்குப் பகுதியில் ஆங்கிலேயரின் தேசிய ஏகாதிபத்திய நலன்கள் பாதிக்கப்படும் என்று கருதினார். எனவே 'சான்ஸ்டீபனோ உடன்படிக்கையின் அனைத்து ஷரத்துக்களும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். அதற்கு ரஷ்யா சம்மதிக்கா விட்டால் அதன் மீது இங்கிலாந்து போர்தொடுக்கும்' என்று கூறினார்.

ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பும் இந்த உடன்படிக்கையை எதிர்த்தார். ரஷ்யாவிலும் பால்கனிலும் ஸ்லாவிய தேசிய உணர்வுக்குக் கிடைத்த வெற்றி தன்னுடைய நாட்டிலுள்ள ஸ்லாவ் மக்களிடமும் பரவும் அபாயத்தை உணர்ந்து இந்த உடன்படிக்கையை எதிர்த்தார் ரஷ்ய சார் இரண்டாம் அலெக்சாந்தர். கிழக்கத்திய பிரச்சனையைத் தீர்க்க ஐரோப்பிய மாநாடு கூட்டப்பட்டால், சான்ஸ்டீபனோ உடன்படிக்கைப்படி தனக்கு கிடைத்த பலன்கள்

கொண்டு ரஷ்யாவுக்கு உதவி செய்வதை பிஸ்மார்க் விரும்பவில்லை. கூட்டப்படும் மாநாட்டில் தான் ஒரு நாணயமிக்க தரகராக (Honest Broker) நடந்து கொள்ளப் போவதாக பிஸ்மார்க் அறிவித்தார். வேறுவழியில்லாமல் அலெக்சாந்தர் பெர்லின் மாநாட்டில் கலந்து கொள்வதாக அறிவித்தார்.

1878, ஜூலை 13-ல் பிஸ்மார்க்கின் தலைமையில் பெர்லினில் மாநாடு கூட்டப்பட்டது. அதில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரி, ரஷ்யா, துருக்கி ஆகிய நாடுகள் கலந்து கொண்டன. இந்த மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் பெஞ்சமின் டிசரலி (Benjamin Disraele) முக்கியப் பங்கு வகித்தார். கிழக்கத்தியப் பிரச்சனைக்கு 'இறுதித் தீர்வு' (Final Settlement) காணப்போவதாக மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. சான்ஸ்டீபனோ உடன்படிக்கை திருத்தியமைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக புதிய 'பெர்லின் உடன்படிக்கை' செய்து கொள்ளப்பட்டது. அதில் எல்லா ஐரோப்பிய நாடுகளும் கையெழுத்திட்டன.

**பெர்லின் உடன்படிக்கை; (Treaty of Berlin):** 1878, ஜூலை

1. சான்ஸ்டீபனோ உடன்படிக்கையின்படி ரஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்ட பெசரோபியா, ஆர்மீனிய பகுதிகளில் பாதும், கார்ஸ் ஆகிய பகுதிகளை அப்படியே ரஷ்யா வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

2. போஸ்னியாவும், ஹெர்சிஹோவினாவும், ஆஸ்திரியாவின் நிர்வாகப் பொறுப்பில் வைக்கப்பட்டது. மேலும் செர்பியா மாண்டிநெக்ரோவில் ஆஸ்திரியாவுக்கு வணிக உரிமை அளிக்கப்பட்டது.

3. செர்பியா, ருமேனியா, மான்டிநெக்ரோ ஆகியவை தனிச் சுதந்திர நாடுகளாக அங்கீகரிக்கப்பட்டன.

4. சான்ஸ்டீபனோ உடன்படிக்கையின்படி உருவாக்கப்பட்ட பெரிய பல்கேரியா இப்போது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. பல்கேரியாவின் வடபகுதி பல்கேரியா என்ற பெயராலே இருந்து வரும். அதன் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட்டது. தென் கிழக்குப்பகுதி 'கிழக்கு ருமேலியா' (Eastern Rumelia) என்றழைக்கப்பட்டு அது துருக்கியின் பாதுகாப்பிலேயே வைக்கப்பட்டது. ஆனால் அப்பகுதியில் ஒரு கிறிஸ்தவரே ஆட்சியாளராக நியமிக்கப்படுவார். மீதியுள்ள மாசிடோனியாவின் பெரும் பகுதியும், அட்ரியநோப்பிள் மாகாணமும் சேர்ந்து சுல்தானின் நேரடி ஆட்சியின் கீழ் வைக்கப்பட்டது.

5. சைப்ரஸ் தீவு இங்கிலாந்துக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்காக இங்கிலாந்து துருக்கியின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டு...

**பெர்லின் மாநாட்டைப் பற்றிய ஓர் திறனாய்வு (முக்கியத்துவம்)**

பெர்லின் மாநாட்டின் முடிவுகள் கிழக்கத்தியப் பிரச்சனையில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். ஆங்கிலேயரின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த பெரிய வெற்றியாகும். பால்கன் பகுதியில் வளர்ந்து வந்த ரஷ்ய ஆதிக்கம் தடுக்கப்பட்டது. பால்கன் பிரச்சனையில் ரஷ்யா மட்டும் சுதந்திரமாகத் தலையிட முடியாது என்று உணர்த்தப்பட்டது. எனவே ரஷ்யா இதன்பின் தனது கவனத்தை பாரசீகம், மஞ்சூரியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் மீது திருப்பியது.

ஐரோப்பாவில் துருக்கி முழுவதுமாகச் சீர்குலையாமல் ஓரளவிற்குக் காப்பாற்றப்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் துருக்கியின் நிலை பெருமளவு பாதிக்கப்பட்டது. இங்கிலாந்துப் பிரதமர் கிளாட்ஸ்டன் குறிப்பிட்டது போல ஐரோப்பாவிலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் துருக்கி வெளியேற்றப்பட்டு விட்டது. துருக்கி சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீது தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் மக்களுக்கு சீர்திருத்தங்களும், உரிமைகளும் வழங்க உறுதிமொழி அளித்தார்.

இத்தாலிய இணைவில் சார்டீனியா எப்படி முக்கிய பங்கு வகித்ததோ, அதே போன்று பால்கன் பகுதியில் செர்பிய இனத்தவரை ஒற்றுமைப்படுத்த நினைத்திருந்த செர்பியா ஏமாற்றமடைந்தது. பெர்லின் உடன்படிக்கைப்படி அதற்கு எந்தப் பகுதியும் தரப்படவில்லை. மேலும், போஸ்னியாவும், ஹெர்சிஹோவினாவும் ஆஸ்திரியாவிடம் ஒப்படைக்கப்பட்டதால் செர்பியா அதிர்ப்தியடைந்தது. இப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட ஆஸ்திரிய ஆதிக்கம், ரஷ்ய ஆதிக்கத்தை விட மோசமானது. போஸ்னியாவிலுள்ள ஸ்லாவ் இனத்தவர் இதனால் வெறுப்படைந்தனர். ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவிற்கும் உறவு முறிந்து பகைமை ஏற்பட்டது. இதுவே பின்னர் முதல் உலகப்போருக்கும் காரணமாக அமைந்தது.

பல்கேரியாவை மூன்றாகப் பிரித்துப் போட்டதால் அதன் வலிமை குறைந்து விடும் என்று வல்லரசு நாடுகள் நினைத்தன. ஆனால் தங்கள் நாடு பிரிக்கப்பட்டதால் பல்கேரிய மக்களிடம் தேசிய உணர்வு தலைதூக்கியது. கிழக்கு ருமேனியாவை ஆக்கிரமித்துக் கொண்டு ஏதேச்சையாக ஆட்சி செய்யத் தொடங்கியது பல்கேரியா.

பெர்லின் மாநாட்டின் மூலம் ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் எதிரிகளாக்கப்பட்டன. மாநாட்டில் பிஸ்மார்க் ஆஸ்திரியாவுக்குச் சாதகமாகவே நடந்த கொண்டதால், ரஷ்யா ஜெர்மனியிலிருந்து விலகி பிரான்சுடன் தனது உறவை ஏற்படுத்திக் கொண்டது. ஜெர்மனியும்

ஆஸ்திரியாவும் நெருங்கிய நட்பு நாடுகளாயின, இவ்வாறு ஐரோப்பிய வல்லரசுகளிடையே ஆதிக்க வெறியும், போட்டியும், கோஷ்டிகளைச் சேர்த்துக் கொள்ளுதலும் வலுவடைந்து முதல் உலகப்போர் ஏற்படுவதற்கான சூழ்நிலை இந்த பெர்லின் மாநாட்டில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு பெர்லின் மாநாட்டுடன் கிழக்கத்தியப் பிரச்சனை முடிந்துவிடவில்லை. மாறாக பிரச்சனைகளை வளர்த்தும், புதிய பல பிரச்சனைகளை ஏற்படுத்தியும் விட்டது பெர்லின் மாநாடு.

## 5. பால்கன் போர்கள்
## (Balkan Wars) 1912-14

பெர்லின் உடன்படிக்கைக்குப் பின்னர் கிழக்கத்தியப் பிரச்சனையில் பல புதிய குழப்பங்கள் ஏற்பட்டன. பால்கன் நாடுகளும் வல்லரசுகளும் அந்த உடன்படிக்கையின் ஷரத்துக்களை மதித்து நடக்கவில்லை. பால்கன் நாடுகளே தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. இதற்கிடையில் துருக்கியப் பேரரசில் தேசியப் புரட்சி ஏற்பட்டது. துருக்கிய இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து 'இளந் துருக்கியர் இயக்கம்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி பேரரசில் தீவிரமான சீர்திருத்தங்களைப் புகுத்தி சிதைந்து கொண்டிருந்த துருக்கிப் பேரரசை காப்பாற்ற முயற்சித்தனர். இந்த முயற்சிகளின் விளைவாக ஏற்பட்டதே பால்கன் போர்கள் ஆகும்.

### இளந்துருக்கியர் இயக்கம் (Young Turk movement):

துருக்கி சுல்தான் இரண்டாம் அப்துல்ஹமீது (1876-1909) காலத்தில் தலைமை அமைச்சராக இருந்த கியமில்பாஷா (Kiamil Pasha) நாட்டில் சீர்திருத்தங்களை புகுத்த முயற்சி எடுத்தார். ஆனால் அவர் 1896-ல் சுல்தானால் டிஸ்மிஸ் செய்யப்பட்டார். பேரரசில் தாராளக் கொள்கை கொண்டவர்கள் அவரைப் பின்பற்றினார்கள். அப்போதுதான் தீவிரவாத துருக்கிய இளைஞர்களும், தேசியவாதிகளான இளைஞர்களும் சேர்ந்து 'இளந்துருக்கியர் இயக்கம்' ஒன்று ஆரம்பித்தனர். இவர்கள் துருக்கியை ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து காப்பாற்ற நினைத்தனர். துருக்கியப் பேரரசு சிதைந்து வருவதையும், பால்கனில் தேசிய உணர்வு பரவிவருவதையும் கண்ட அவர்கள் நிறைய சீர்திருத்தங்களைப் புகுத்தினாலொழிய பேரரசைக் கட்டிக்காப்பது கடினம் என்று உணர்ந்தார்கள். மேலும் துருக்கியை ஒரு ஜனநாயக நாடாக்கவும் விரும்பினர். ""The empire was to be regenerated, not by humanizing it, but by Ottomanizing it'' என்பது தான் இளந்துருக்கியர் கொள்கையாக இருந்தது.

இளந்துருக்கியர் இயக்கத்தின் முக்கியத் தலைவர் 'என்வர்பே' (Enver Bay) (1882-1922) என்பவராவார். அவர் சலோனிக்காவிலிருந்த ஒரு சிறிய படையின் தளபதி ஆவார். அவர் இளந் துருக்கியர் இயக்கத்தை வழி நடத்த 'ஒற்றுமை முன்னேற்றக்குழு' (Committee of Union and Progress) என்ற குழுவை அமைத்தார். 1908- ஜூலை மாதம் 24-ம் தேதி இளம் துருக்கியர் சலோனிக்காவில் புரட்சியை ஆரம்பித்தனர். 1876-ம் வருட அரசியலமைப்பின் படி ஆட்சி நடத்துமாறு சுல்தானை எச்சரித்தனர். பயந்து போன சுல்தான் டிஸ்மிஸ் செய்யப்பட்ட கியமில்பாஷாவை மீண்டும் அழைத்து தாராள சீர்திருத்தங்கள் செய்ய முற்பட்டார். ஆனால் அப்போது பேரரசு முழுவதிலும் குழப்பம் நிலவி வந்தது. அரேபியா மெசபட்டோமியா. அல்பேனியா, மாசிடோனியா ஆகிய பகுதிகளில் புரட்சி வெடித்தது. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு 1908, அக்டோபர் 7-ம்தேதி போஸ்னியா- ஹெர்சிஹோ வினாவை ஆஸ்திரியா தனது பேரரசுடன் இணைத்துக் கொண்டது. பல்கேரியா கிழக்கு ருமேனியாவை சேர்த்துக் கொண்டு தனி நாடாகப் பிரகடனப் படுத்திக் கொண்டது.

எனவே 1909, ஏப்ரலில் இளம் துருக்கியர் புரட்சி செய்து ராணுவத்தின் ஆதரவுடன் இரண்டாவது கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டனர். சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமிது கைது செய்யப்பட்டார். அவரது சகோதரர் ஐந்தாம் முகமது (Mohammed V) சுல்த்தானானார். அவர் கியமில்பாஷா தலைமையில் ஒரு மந்திரி சபையை அமைத்தார். அது 'இளந்துருக்கியர் மந்திரிசபை' போன்றே காணப்பட்டது. 1909 முதல் 1918 வரை துருக்கியப் பேரரசு இந்த இளந்துருக்கியர் இயக்கத்தின் கட்டுப்பாட்டில்தான் செயல்பட்டு வந்தது. இந்த அரசில் என்வர்பாஷா (என்வர்பே) மதிப்புமிக்க தலைவராக இருந்தார்.

இந்த அரசாங்கம் பேரரசை 'துருக்கிய மயமாக்க' பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. துருக்கிய மொழி தேசிய மொழியாக்கப்பட்டது. பல புதிய துருக்கிய தேசீய பள்ளிக் கூடங்கள் நிறுவப்பட்டன. துருக்கியப் படையில் அராபியர்கள், துருக்கியர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் கட்டாய ராணுவ சேவை கொண்டுவரப்பட்டது. இந்த சீர்திருத்தங்களை ராணுவத்தின் ஆதரவுடன் செயல்படுத்தினார்கள். இந்த துருக்கிய மயமாக்குதல் கொள்கை துயரத்தில் தான் முடிவடைந்தது. காரணம் பேரரசில் துருக்கியர் அல்லாதவர்கள் அதிகமாக இருந்தனர். அவர்கள் இளந்துருக்கியர் அரசை எதிர்த்தனர். முக்கியமாக பால்கன் பகுதியில் அதிக எதிர்ப்பு ஏற்பட்டது. துருக்கிக்கு எதிராகப் பல்கன் நாடுகள் ஒன்று சேர்ந்து போர் தொடுத்தன. இவ்வாறு முதல் பால்கன் போர் ஆரம்பமானது.

# முதல் பால்கன் போர் (1912-13)



...ரணங்கள்:

1. இளம் துருக்கியர்கள் துருக்கியப் பேரரசை துருக்கியமயமாக்க ...ல நடவடிக்கைகளை எடுத்தனர். துருக்கிய ஆட்சிப் பகுதியிலுள்ள ...ல்லா மக்களும் துருக்கி மொழியைப் பேசுமாறு கட்டாயப் ...டுத்தப்பட்டனர். படையில் எல்லோரும் பணிபுரிய ...ற்புறுத்தப்பட்டனர். இது பால்கன் பகுதியிலிருந்த கிறிஸ்தவர்களை ...ாதிப்படையச் செய்தது.

2. மக்களிடம் காணப்பட்ட அதிர்ப்தியை பயன்படுத்திக் ...காண்டு, பால்கன் நாடுகள் துருக்கியப் பேரரசிலிருந்து பிரிந்து செல்ல ...ற்பட்டன. அத்துடன் குழப்பம் நிறைந்து காணப்பட்ட பேரரசை ...ங்குபோட்டுக் கொள்வதிலும் ஆர்வம் கொண்டன.

3. துருக்கியின் ஆதரவின்கீழ் வைக்கப்பட்ட மாசிடோனியாவில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் மீது துருக்கிய மொழியும், கலாச்சாரமும் திணிக்கப்பட்டது. எனவே மாசிடோனிய மக்களுக்கு ஆதரவாக பால்கன் நாடுகள் ஒன்றுபட்டன.

4. துருக்கிக்கு எதிராக பால்கன் நாடுகளை ஒன்றுசேர்க்க முயற்சி எடுத்தவர் பல்கேரிய அரசர் பெர்டினாண்டு என்பவராவார். இதன் விளைவாக **1912**, மார்ச் மாதம்செர்பியா, பல்கேரியா, கிரீஸ் மாண்டிநெக்ரோ ஆகிய நாடுகள் சேர்ந்து 'பால்கன் கழகம்' (Balkan League) ஒன்றை ஏற்படுத்தின.

5. துருக்கியின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள நாடுகளை மீட்கவும் குறிப்பாக மாசிடோனியாவை மீட்கவும், துருக்கிய ஆதிக்கத்தை ஒழிக்கவும், துருக்கியப் பகுதிகளை தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்ளவும் தங்கள் வேற்றுமைகளை மறந்து 'பால்கன் கழக' நாடுகள் துருக்கி மீது போர் தொடுத்தன.

**போரின் போக்கு:**

1912, அக்டோபரில் பால்கன் கழக நாடுகளில் ஒன்றான மாண்டிநெக்ரோ துருக்கி மீது போர்தொடுத்ததுடன் பால்கன் போர் ஆரம்பமானது. துருக்கிய அரசும் என்வர்பாஷா தலைமையில் ஒரு படையைத் திரட்டியது. ஆனால் தேசிய எழுச்சியுடன் போர் புரிந்த பால்கன் கழக நாடுகளின் படைகளுக்கு முன்பு துருக்கியப்படைகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. செர்பியாவும் கிரீசும் சேர்ந்து சலோனிக்கா, மொனாஸ்டிர் (Monastir), மாசிடோனியா ஆகிய பகுதிகளை... பல்கேரியா ஏட்ரியநோப்பிளை கைப்பற்றி

கான்ஸ்டாண்டி நோப்பிளை நோக்கி முன்னேறியது. இரண்டே மாதத்தில் எல்லா இடங்களிலும் துருக்கியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன ஐரோப்பிய வல்லரசுகள் ஆச்சரியமடைந்தன. 1912, டிசம்பரில் துருக்கி அமைதியை நாடியது. லண்டனில் 1913, மே மாதம் பேச்சு வார்த்தைகள் துவங்கி, லண்டன் உடன்படிக்கைப்படி போர் முடிவடைந்தது.

**போரின் விளைவுகள்:**

1. வெற்றி பெற்ற பால்கன் நாடுகள் துருக்கியப் பேரரசின் எஞ்சிய பகுதிகளைப் பங்குபோட்டுக் கொண்டன. செர்பியா, பல்கேரியா, கிரீஸ் ஆகிய நாடுகள் மாசிடோனியாவைத் துண்டாடின.

2. ஐரோப்பாவில் கான்ஸ்டாண்டிநோபிளையும், அதைச்சுற்றி ஒரு சிறு பகுதியையும் தவிர எல்லா பகுதிகளையும் துருக்கி இழந்தது.

3.பால்கன் நாடுகள் அடைந்த வெற்றியால் அவைகளின் தோழமை நாடான ரஷ்யாவின் பெருமையும் மதிப்பும் உயர்ந்தது. ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மதிப்பு வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

4. ரஷ்ய ஆதரவு நாடான செர்பியா, பரப்பளவில் விரிவடைந்தால் அது தனது பேரரசிலிருக்கும் ஸ்லாவ் இன மக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தி தனது பேரரசின் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படுத்தும் என்று ஆஸ்திரியா நினைத்தது. எனவே செர்பியாவுக்கு அதிக நிலப்பகுதி கிடைக்காமல் செய்ய ஆஸ்திரியா முயற்சி எடுத்தது. அதன் விளைவாகவே அல்பேனியா என்ற புதியநாடு உருவாக்கப்பட்டது. தனக்கு கடல்வழி கிடைக்காமல் செய்துவிட்ட ஆஸ்திரியா மீது செர்பியா கடுங்கோபம் கொண்டது. இதனால் இருநாடுகட்குமிடையே அப்போதே போர் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது.

5. வெற்றி பெற்ற பகுதிகளைப் பங்கிட்டுக் கொள்வதில் பால்கன் நாடுகளுக்கிடையே போட்டியும் பொறாமையும் அதிகரித்தது. அதனால் மனக்கசப்பு ஏற்பட்டு, அதுவே இரண்டாம் பால்கன் போர் ஏற்படுவதற்குக் காரணமானது.

## இரண்டாம் பால்கன் போர்-1913

**காரணங்கள்:**

1. முதல் பால்கன் போரில் கிடைத்த பகுதிகளைப் பங்கிடுவதில் பால்கன் நாடகளுக்கிடையே சச்சரவு ஏற்பட்டது. இதன் விளைவாகவே இரண்டாம் பால்கன் போர் ஏற்பட்டது.

2. தனக்குக் கிடைக்கவேண்டிய பகுதியில் அல்பேனியா என்ற நாடு உருவாக்கப்பட்டு விட்டதால், அதற்கு பதிலீடாக (Compensation) அதிகமாக பல்கேரியாவுக்கு ஒதுக்கப்பட்ட மாசிடோனியாவின் ஒரு பகுதியைக் கேட்டது செர்பியா

3. ஆனால் பல்கேரிய அரசர் பெர்டினாண்டு செர்பியாவின் இந்த வேண்டுகோளை மறுத்துவிட்டார். பல்கேரிய நிலைக்கு ஆஸ்திரியா ஆதரவு அளித்தது. இப்பிரச்சனையைச் சமாதானமாகத் தீர்க்க ரஷ்யா எடுத்துக் கொண்ட முயற்சி பயனளிக்க வில்லை.

4. இதற்கிடையில் திரேசைப் (Thrace) பங்கிட்டுக் கொள்வதில் பல்கேரியாவுக்கும் கிரீசுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

5. முதல் பால்கன் போரின் மூலம் அதிக இடங்களைப் பெற்றுக்கொண்ட பல்கேரியா பால்கன் தீபகற்பத்தில் பிரதான நாடாக இருக்க விரும்பியது. இதனை மற்ற பால்கன் நாடுகள் விரும்பவில்லை. எனவே பல்கேரியாவுக்கு எதிராக செர்பியா, கிரீஸ், ருமேனியா ஆகியவை ஒன்று சேர்ந்து ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டன.

## போரின் போக்கு:

பல்கேரியர் செர்பியாவை 1913 ஜூலையில் தாக்கியதும் இரண்டாம் பால்கன் போர் ஆரம்பித்தது. செர்பியாவுக்கு ஆதரவாக கிரீசும் ருமேனியாவும் பல்கேரியா மீது போர் தொடுத்தது. முதல் பால்கன் போரில் தான் இழந்த ஒரு சில பகுதிகளை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நப்பாசையால் துருக்கியும் பல்கேரியா மீது போர்தொடுத்தது. போர் ஆரம்பித்த ஒரு மாதத்திற்குள்ளாக 1913, ஆகஸ்டில் செர்பிய கூட்டுப்படைகள் சோபியா (Sofia)வை நெருங்கி விட்டன. துருக்கி அட்ரியநோப்பிளை பிடித்துக் கொண்டது. எனவே பல்கேரியா பால்கன் நாடுகளுடன் புக்காரஸ்ட் உடன்படிக்கை செய்து கொண்டு போரை முடித்துக் கொண்டது.

**புக்காரஸ்ட் உடன்படிக்கை (Treaty of Bucharest):** 1913, ஆகஸ்ட்

1. இதன்படி செர்பியாவுக்கு மாசிடோனியாவின் பெரும் பகுதி கிடைத்தது.

2. கிரீஸுக்கு, கிரீட், சலோனிக்கா உட்பட தெற்கு மாசிடோனியாவும் மேற்கு திரேசும் கிடைத்தது.

பல்கேரியாவின் இழப்புகள் அதிகம், அதற்கு மாசிடோனியாவின் ஒரு சிறிய பகுதியும் மத்திய திரேஸ் பகுதியும்

கொடுக்கப்பட்டது. ஆனால்அது தோபுருஜாவை (Dobruja) ருமேனியாவிற்கும் அட்ரியனோப்பிளை துருக்கிக்கும் கொடுக்க வேண்டியதாயிற்று எனவே பல்கேரியா பலவீனமானது.

**பால்கன் போரின் விளைவுகள்:**

1. பால்கன் போர்கள் துருக்கிய பேரரசின் அழிவுக்குக் காரணமானது. ஏட்ரியநோப்பிள், பாஸ்பரஸ் ஜலசந்தி, கான்ஸ்டாண்டிநோப்பிள், டார்டனல்லஸ் ஆகிய பகுதிகளை மட்டும் கொண்டதாக துருக்கி பேரரசின் பரப்பு குறைக்கப்பட்டது.

2. செர்பியா பால்கன் நாடுகளில் பலமான நாடாக உருவாகியது. அதன் எல்லைகள் விரிவடைந்ததால் மதிப்பும் உயர்ந்தது. ஆனால் தனக்குக் கடல்வழி கிடைக்காததற்கு ஆஸ்திரியாதான் காரணம் என்று நினைத்ததால் ஆஸ்திரியா மீதான வெறுப்புணர்வு வளர்ந்தது. அதேசமயம் பல்கேரியாவும் செர்பியா மீது வஞ்சந் தீர்த்துக்கொள்ள காத்துக் கொண்டிருந்தது. செர்பியாவிற்கு ரஷ்யாவும் ஆஸ்திரியாவுக்கு ஜெர்மனியும் ஆதரவு கொடுத்தன. இது ஐரோப்பிய அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தியது. 1914-ல் ஐரோப்பாவில் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிய நெருப்புபொறிபால்கனிலிருந்துதான் உண்டானது.

# 15. முதல் உலகப் போருக்கு முன்பு ஐரோப்பிய நிலை.

## EUROPE ON THE EVE OF FIRST WORLD WAR

முதல் உலகப்போருக்கு முன்பு ஐரோப்பாவில் நாடுகளுக்கிடையே போட்டியும் பொறாமையும் அதிகமாகக் காணப்பட்டன. குறுகிய தேசப்பற்றின் காரணமாக ஒன்றுக் கொன்று பகை உணர்வுடன் இருந்து வந்தன. இதற்கு முக்கியக் காரணம் ஜெர்மனியின் வலிமையும், வேகமானவளர்ச்சியுமே ஆகும். 1871-ம் வருடத்திற்குப் பிறகு ஜெர்மனியின் மதிப்பும் பெருமையும் உயர்ந்தது. ஏனெனில் அந்த வருடத்தில் நடைபெற்ற பிராங்கோ-பிரஷ்யப் போரில் பிரான்சைத் தோற்கடித்து நவீன ஜெர்மனியை உருவாக்கினார் பிஸ்மார்க். 1871, முதல் 1914 வரை ஜெர்மனி பின்பற்றிய கொள்கைகளே 'பெரும்போர்' என்றும் 'போரை முடித்து வைப்பதற்காக ஏற்பட்ட போர்' என்றும் வழங்கப்படும் முதல் உலகப்போருக்குக் காரணமானது.

## ஜெர்மனியின் ஆதிக்க வளர்ச்சி: 1870-1914

1888-ஆம் ஆண்டு ஜெர்மனியின் அரசராக (கெய்சர்) இரண்டாம் வில்லியம் பதவி ஏற்றார். ஹோகர்ன் சோலன் வம்சத்தின் கடைசி அரசர் இவரே. ஜெர்மனியை மிகவும் பலமிக்க உலக வல்லரசாக்க வேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். ஜெர்மனி தனது ஆதிக்கத்தைப் பிறநாடுகளில் பரப்ப வேண்டும். அதற்காகத் தனது கடல் வலிமையைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் வில்லியம். "ஜெர்மனியின் எதிர்காலமே அதன் கடல் வலிமையில் தான் உள்ளது" என்பதனைப் புரிந்து கொண்டு ஜெர்மனியின் கடற்படையை வலிமைப்படுத்தினார்.

பிற வலிமையற்ற நாடுகளைக் கைப்பற்றி அவற்றை ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளாக மாற்றுவதில் ஆர்வம் கொண்டார். எனவேதான் அப்போது ஐரோப்பாவில் நிலவி வந்த காலனி வேட்டையில் ஜெர்மனியும் ஈடுபட ஆர்வம் கொண்டது. ஒரு ஜெர்மானியக் குடியேற்றப் பேரரசை ஏற்படுத்தும் இவரது நோக்கத்திற்குச் சாதகமாகப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1890-ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையின் பயனாகக் கிடைத்த ஹெலிகோலாந்து ஜெர்மனியின் ஓர் முக்கியக் கடற்படைத்தளமாக இருந்தது. 1895-ல் முடிவடைந்த கீல் கால்வாய் ஜெர்மனியின் கப்பற்படை வலிமையை அதிகமாக்கியது. இதனால் டென்மார்க் கடலைச் சுற்றிச் செல்லாமல் பால்டிக்கடல், வடகடல் வழியாக ஜெர்மானிக்கப்பல்கள் செல்ல வழி கிடைத்தது. 1897-ல் ஜெர்மனியில் பெரிய கப்பற்கட்டும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டது. நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்ட ஜெர்மானியக் கப்பற்படை, ஆங்கிலக் கப்பற்படைக்கு ஓர் சவாலாக அமைந்தது. இதனால் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்குமிடையே வெறுப்புணர்வும், பகையும் வெளிப்படையாகவே வளர்ந்து வர ஆரம்பித்தது.

மேலும் ஆப்பிரிக்காவிலும் சீனாவிலும் ஜெர்மனியின் ஆதிக்க வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது. 1890-ம் ஆண்டு சாலிஸ்பரி பிரபுவினால் முடிவு செய்யப்பட்ட ஆப்பிரிக்காவிலுள்ள சில பகுதிகளை ஜெர்மனி சேர்த்து கொண்டு ஆப்பிரிக்காவின் ஜான்சிபார் பிரிவினையில் சொந்தமாக்கியது. 1897-ல் சீனாவில் நடைபெற்ற கலகங்களைப் பயன்படுத்திக் கொண்ட கெய்சர் வில்லியம் கியாசென் பிரதேசத்தைச் சொந்தமாக்கினார். இது பிற்காலத்தில் சீனாவில் ஜெர்மனியின் வணிகப் பெருக்கத்திற்கு ஓர் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது.

அண்மைக்கிழக்குப் பகுதியில் துருக்கி சுல்தானுடன் நட்புக் கொண்டு ஆசியாமைனர், மெசபடோமியாப் பிரதேசங்களில்

ஜெர்மனியின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார் கெய்சர். முதல் உலகப்போர் ஏற்பட்டபோது ஜெர்மனி பாக்தாத் இருப்புப் பாதையை அமைத்துக் கொண்டிருந்தது. ஜெர்மனியின் செல்வாக்கும், ஆதிக்க வளர்ச்சியும் இங்கிலாந்தைப் பெரிதும் அச்சமுறச் செய்தது. அதன் காரணமாக இருநாடுகளுக்கிடையே வெளிப்படையான விரோதம் வளர்ந்து வந்தது.

**புதிய கொள்கைகள் உருவாயின:**

1. முதல் உலகப்போருக்கு முன்பு ரஷ்யா, ஜெர்மனி தவிர பிற ஐரோப்பிய நாடுகளில் வல்லாட்சி முறை ஒழிந்து ஜனநாயகம் வளர்ச்சியடைந்தது. அரசியல் சட்டத்துடன் கூடிய அரசாங்கம் அமைக்கப்படுவதில் முன்னேற்றம் ஏற்பட்டது. அரசாங்கம் உண்மையான மக்களாட்சி அடிப்படையில் நிலைத்திருக்கத் தொடங்கியது.

2. ஜனநாயக அரசாங்கங்களின் செயல் முறைகளிலும் கொள்கைகளிலும் மாறுதல் ஏற்பட்டது. மக்களின் உயிரைப் பாதுகாத்தலும், நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்தலும் மட்டுமே அரசாங்கத்தின் பொறுப்பு என்ற நிலை மாறியது. குடிமக்களின் உயிரைப் பாதுகாப்பதுடன் மட்டுமல்லாது அவர்களின் நல்வாழ்வுக்காகவும் செயல்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்ற நிலை ஏற்பட்டது. குடிமக்களின் கல்வி, உடல் நலம், சுற்றுப்புறத் தூய்மை, தொழிலாளர் நலம், தொழிலாளர் ஊதியம் ஆகியவை பற்றியும் அரசாங்கங்கள் கவனம் செலுத்த ஆரம்பித்தன. இதற்காகப் பல சட்டங்களும் இயற்றப்பட்டன.

3. முதல் உலகப்போருக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளில் தேசியத் தலைமை வேரூன்றியது. கலப்பினங்கள் இல்லாத நாடே இல்லை. ஒவ்வொரு இனத்திற்கும் அதற்கென்று தனி அரசாங்கத்தைக் கொடுப்பதென்பது இயலாது. மேலும் ஒரு இனத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே தேசியத்தை ஒரு நாட்டில் வளர்க்க முடியுமென்ற நிலை கைவிடப் பட்டது. எனவே பல இன மக்கள் வாழும் நாடும் தேசிய நாடாக இருக்க முடியும் என்பது நிலை நாட்டப்பட்டது.

4. ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசக் கொள்கையின் ஆற்றல் வளர்ந்ததுடன் அதன் அமைப்பும் சீரடைந்தது. மேற்கு ஐரோப்பாவில் ஒவ்வொரு நாட்டிலும் வலிமை பொருந்திய தொழிலாளர் இயக்கங்கள் தோன்றின. ஆனால் ஜெர்மனியில் சோஷலிசக் கொள்கையின் வளர்ச்சியைத் தடுப்பதற்கும், மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கும் அரசாங்கங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன.

5. இறுதியாக, பெரும் போருக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளிடையே 'பன்னாட்டு ஒற்றுமை உணர்ச்சி' தோன்றியது. விஞ்ஞானம், வியாபாரம், தொழிலாளர்களின் கூட்டமைப்பு, கலை

இலக்கியம் ஆகியவைகளால் நாடுகளுக்கிடையே நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டது.

## முதல் உலகப்போருக்கு முன்பு ஏற்பட்ட இரகசிய இராஜதந்திர உடன்படிக்கைகள்:

1871-ம் ஆண்டுக்குப் பிறகு ஜெர்மனியின் பேராதிக்கம் வளர்ச்சியடைந்தது என்பதை மறுக்கமுடியாது. இதனால் இங்கிலாந்து அதிர்ச்சியடைந்தது உண்மையே. தனது அதிகாரத்துக்குச் சவால்விடும் ஜெர்மனியின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்த பிரான்சுடன் கூட்டுச்சேரத் தயாராக இருந்தது. அதே நேரம் பிராங்கோ-பிரஷ்யப்போரில் தோற்றுப் போன பிரான்ஸ் ஜெர்மனி மீது போர்தொடுக்கும் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. தான் இழந்த அல்சேஸ்-லொரைன் பகுதிகளை மீண்டும் பெற ஆவலாக இருந்தது.

இவை தவிர ஒவ்வொரு நாடும் தன்னைத்தானே செழிப்புடைய தாக்கவும் விரும்பின. இதன் விளைவாக முதல் உலகப்போருக்கு முன் இரண்டு வலிமையான கூட்டணிகள் ஏற்பட்டன. அந்தக் கூட்டணிகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதையும் அது எவ்வாறு முதல் உலகப்போருக்குக் காரணமானது என்பதையும் இனிக் காணலாம்.

### 1. முப்பேரரசர்களின் சங்கம்: 1882-டிரைக்கெய்சர்பண்ட்

ஜெர்மனியின் சான்சலராக இருந்த பிஸ்மார்க் தலைசிறந்த இராஜதந்திரி ஆவார். 1871-ல் பிராங்கோ-பிரஷ்யப் போரில் பிரான்ஸ் தோற்கடிக்கப்பட்டாலும் எதிர்காலத்தில் மற்ற வல்லரசுகளின் துணையுடன் அது ஜெர்மனியைத் தாக்கும் அபாயத்தை நன்றாகவே உணர்ந்திருந்தார். எனவே ஜெர்மனியைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டார். மேலும் பிரான்ஸ் நாட்டில் தோன்றி வளர்ந்த புரட்சிக் கருத்துக்களும் குடியாட்சிக் கருத்துக்களும் எங்கே ஐரோப்பா முழுவதும் பரவிவிடுமோ என்று அச்சமடைந்தார்.

இக்காரணங்களால் ஜெர்மனியையும் ஜெர்மன் முடியாட்சியையும் பாதுகாக்கும் பொருட்டு தனக்கு அருகிலுள்ள ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா நாட்டுப் பேரரசர்களுடன் நட்புறவு வைத்துக்கொள்ள நினைத்தார். இதன் விளைவாக 1882-ம் ஆண்டு ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்திரிய நாட்டுப் பேரரசர்கள் மூவரும் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். அதுவே 'முப்பேரரசர் களின் சங்கமாகும்'. ஆனால் கருத்து வேறுபாடுகள் காரணமாக இது சரியாகச் செயல்படவில்லை.

### 2. முக்கூட்டு உடன்படிக்கை (Triple alliance): 1883

முப்பேரரசர்களின் சங்கம் நீடித்திருக்க முடியவில்லை. காரணம் ரஷ்யாவும் ஆஸ்திரியாவும் பால்கன் பகுதியில் அதிகாரம், செல்வாக்கு

நாடுகளை அமைப்பதில், கடற்படை வலிமையில் இங்கிலாந்து தனது ஏகபோக உரிமையை ஜெர்மனியின் போட்டியால் இழந்தது. எனவே ஜெர்மனியின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்த தனது பரம்பரைப் பகை நாடான பிரான்சுடன் கூட்டுச்சேரத் தயாராக இருந்தது.

1902 ஜனவரி 30-ம் தேதி இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கு மிடையே ஒரு கூட்டு ஒப்பந்தம் ஏற்படவே ஐரோப்பிய வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டது. கொரியாவிலும், சீனாவிலும் இருந்த பிரச்சனைகள் இந்தஉடன்பாட்டின் மூலம் தீர்த்துக் கொள்ளப்பட்டன. தன் நிலை வலுவடைந்த நிலையில் பிரான்சுடன் நெருங்கி வந்தது இங்கிலாந்து. இதன் விளைவாக 1904-ல் ஆங்கில, பிரெஞ்சு ஒப்பந்தம் ஏற்பட்டது.

## பெஷோடா நிகழ்ச்சி (Feshoda incident): 1898

19-ம்நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கு மிடையே தகராறுகள் குறைந்து எகிப்து சூடான், ஆப்பிரிக்கா, சியாம், நியுபவுண்ட்லாந்து ஆகிய இடங்களைப் பற்றி மட்டுமே கருத்து வேறுபாடு இருந்தது. ஆனால் 1898-ல் பெஷோடா பிரச்சனை குறித்து பிரான்சும் இங்கிலாந்தும் போருக்கு ஆயத்தமாயின. பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி ஹானோடாக்சின் அறிவிப்பின் மூலம் மார்ச்சண்ட் (Captain Marchand) என்ற பிரெஞ்சு படைத்தலைவர் எகிப்திய சூடான் பகுதிக்குள் நுழைந்து பெஷோடா என்ற கிராமத்தில் பிரெஞ்சுக் கொடியை ஏற்றினார். அத்துடன் பஹ்ரல் காசால் என்ற பகுதியை பிரான்சுக்கு உரியது என்று பிரகடனப் படுத்தினார். இதனை எதிர்த்த இங்கிலாந்து தளபதி கிச்சனர் (General Kitchener) தலைமையில் அங்கு ஒரு பலம் வாய்ந்த படையை அனுப்பியது. எனவே இருநாடுகளுக் கிடையே போர் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது.

இச்சூழ்நிலையில் பிரான்சில் புதிதாகப் பதவியேற்ற பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி 'தியோபில் டெல்காசி' பிரெஞ்சுப்படைகளை வாபஸ் பெறச் செய்து போர் ஏற்படுவதைத் தடுத்தார். 1899-ல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி எகிப்திய சூடான் பகுதியை இங்கிலாந்துக்கு பிரான்ஸ் விட்டுக்கொடுத்தது. இந்த உடன்படிக்கைதான் 1904-ல் இரண்டு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட நேச உடன்பாட்டுக்கு முன்னோடியாக விளங்கியது. டெல்காசி இங்கிலாந்துடன் நட்புறவை ஏற்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை மேற் கொண்டார்.

1903-ல் இங்கிலாந்தின் மன்னர் ஏழாம் எட்வர்ட் பிரான்சுக்கு விஜயம் செய்தார். பிரெஞ்சு மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளித்தனர். அதேபோல் பிரெஞ்சு ஜனாதிபதி எமில்லூபட்

...லாந்து சென்றபோது உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டார். ...யால் இரு நாடுகளுக்கிடையே பகைமை உணர்ச்சி மறைந்து நட்பு ஏற்பட்டது. அதன் விளைவாக 1904-ம் ஆண்டு ஏப்ரல் 8-ம் தேதி ஆங்கில-பிரெஞ்சு நேச உடன்படிக்கை (Entente cordiale) ஏற்பட்டது. ...ப்படி.

1. ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களை மொராக்கோவில் ஆதிக்கம் ...லுத்த அனுமதித்தனர்.

2. அதற்குப் பதிலாக எகிப்தின் மீது இங்கிலாந்திற்கு இருந்த ...துகாப்பு உரிமையை பிரான்ஸ் ஒத்துக்கொண்டது.

3. மேற்கு ஆப்பிரிக்கா, சியாம், நியுபவுண்ட்லாந்து ஆகியவை ...றித்த தகராறுகளும் சுமூகமாகத் தீர்த்துக் கொள்ளப்பட்டன.

இந்த ஆங்கில-பிரெஞ்சு நேச ஒப்பந்தம் ஜெர்மனிக்கு எதிராகவே ...செய்து கொள்ளப்பட்டது. உதவியற்றுக்கிடந்த பிரான்சுக்கு புத்துயிர் ...கிடைத்தது. பிரான்சும், இங்கிலாந்தும் தங்கள் வேறுபாடுகளை ...சுமுறையில் தீர்த்துக்கொண்ட நல்ல உடன்பாடாகும். இந்த உடன்பாடு ஐரோப்பிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது.

## ஆங்கில-ரஷ்ய நேச ஒப்பந்தம் (Anglo-Russian entente): 1907

19-ம் நூற்றாண்டில் பால்கன் பகுதியிலும், மத்திய ஆசியாவிலும் ரஷ்யாவின் விரிவாக்கத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தது இங்கிலாந்து. பெர்லின் மாநாட்டிற்குப் பிறகு ரஷ்யா தனது கவனத்தை தூரக்கிழக்கு நாடுகளின் பக்கம் திருப்பியதால் பகைமை உணர்வு சிறிது குறைந்தது. தூரக்கிழக்கில் மஞ்சூரியாவில் ரஷ்யா தனது விரிவாக்கத்தை மேற்கொண்ட போது ஜப்பானுடன் 1904-ல் போர் ஏற்பட்டது. அப்போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டு மதிப்பை இழந்தது. அப்போரின்போது தவறுதலாக வடகடல் பகுதியில் நின்ற ஆங்கிலக் கப்பலைத்தாக்கி சேதப்படுத்தியது ரஷ்யா. இதனால் மீண்டும் இரண்டு நாடுகளுக்குமிடையே பகைமை உணர்வு ஏற்பட்டது. ஆனால் பிரெஞ்சு வெளி உறவு அமைச்சர் டெல்காசியின் முயற்சியினால் இரண்டு நாடுகளுக்குமிடையே சமரசம் ஏற்பட்டது தங்கள் வேறுபாடுகளை மறந்து 1907, ஆகஸ்ட் 3-ல் இரண்டு நாடுகளும் ஆங்கில ரஷ்ய நேச ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன்படி பெர்சியா, ஆப்கானிஸ்தான், திபெத் ஆகிய பகுதிகளில் தாங்கள் போட்டியிடுவதில்லை என்று உடன்பாடாயிற்று.

இவ்வாறு தனித்தனியாக நேச உடன்படிக்கைகளைச் செய்து கொண்ட பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகியநாடுகள் ஒன்றாக இணைந்து உருவானது தான் 'மூவர் மனமார்ந்த நேச உடன்

படிக்கையாகும். 1907-ல் ஆங்கிலோ-ரஷ்ய நேச ஒப்பந்தம் ஏற்பட்டது. 'மூவர் மனமார்ந்த நேச உடன்படிக்கை' நிறைவடைந்தது. இது 'முக்கூட்டு உடன்படிக்கை'க்கு எதிராக அமைக்கப்பட்டது ஆகும். தங்களிடையே ஒற்றுமை, நட்புறவு உடன்பாடு ஏற்படுத்திக் கொண்ட இந்த மூன்று நாடுகளும், அதன்பின், ஒன்றையொன்று கலந்து ஆலோசித்துச் செயல்பட ஆரம்பித்தன. ஜெர்மனியின் மீது இருந்த பகைமையும் அச்சமுமே இந்த 'மூவர் மனமார்ந்த நேச உடன்பாடு' ஏற்பட முக்கிய காரணமாகும்.

இவ்வாறு முதல் உலகப்போருக்கு முன்பு ஐரோப்பிய நாடுகள் இரண்டு இராணுவக் கூட்டுகளாகப் பிரிந்து எதிரெதிராக அணிவகுத்து நின்றன. முக்கூட்டு உடன்படிக்கை நாடுகள் 'மைய நாடுகள்' (Central Powers) எனவும், மூவர் மனமார்ந்த நேச உடன்படிக்கை நாடுகள் 'நேச நாடுகள்' (Allied Nations) எனவும் அழைக்கப்பட்டன.

இந்த இரண்டு ராணுவக் கூட்டு நாடுகளுக்கிடையே போட்டியும் பொறாமையும் அவநம்பிக்கையும், விரோதமும், வெறுப்புணர்வும் வேகமாக வளர்ந்து வந்தன. எல்லா நாடுகளும் ஆயுத உற்பத்தி போட்டியில் ஈடுபட்டன. போர் எப்போது ஏற்படும் என்ற பீதியில் மக்கள் வாழ்ந்து வந்தனர். 1914, ஜூலை 28-ல் சிறிய போராக ஆரம்பித்துப் பின்னர் உலகம் முழுவதும் பரவி உலகப்போராக மாறியது. 1565 நாட்கள் நடைபெற்ற முதல் உலகப்போர் அளவிலும், நடைமுறையிலும் இணையில்லாத போர். பேரழிவை ஏற்படுத்திய போர். அதற்கான காரணங்களை அடுத்த அத்தியாயத்தில் விரிவாகக் காணலாம்.

# 16. முதல் உலகப்போர்
## (FIRST WORLD WAR-1914 -1918)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகம் ஒரு மாபெரும் போரில் சிக்குண்டு பல இன்னல்கட்கு ஆளானது. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பகைமையும் வெறுப்புணர்வும் பெரிய உலகப்போரை ஏற்படுத்தி விட்டன. ஐரோப்பாவில் பல ஆண்டுகளாக ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் கூட்டு விளைவாகவே ஏற்பட்டதே முதல் உலகப்போர் எனலாம். இந்தப் போருக்கான காரணங்கள் 19-ம் நூற்றாண்டின் இறுதியிலேயே நிகழ்ந்திருக்கின்றன. உலக வரலாற்றில் நாடுகளுக்கிடையே போர் ஏற்படுவது புதுமை அல்ல என்றாலும், வரலாற்றில் முதல் உலகப்போர் மனிதனுக்கும் மனித நாகரிகத்திற்கும் பேரழிவை உண்டு பண்ணியது.

முதல் உலகப்போரில் 6 கோடியே 50 லட்சம் மனிதர்கள் பங்கு கொண்டார்கள். இவர்களில் ஐந்து பேரில் ஒருவர் போரில் கொல்லப்பட்டார்கள். மூன்று பேரில் ஒருவர் காயம் அடைந்தார். சுமார் 70லட்சம் பேர் நிரந்தர ஊனம் அடைந்தார்கள். உலகத்தில் முக்கால் பங்கிற்கு மேல் நிலப்பரப்பு இப்போரில் ஈடுபட்டிருந்தது. ஜெர்மனியின் தலைமையிலான நாடுகள் ஐரோப்பாவிலும் உலகத்திலும் தங்கள் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தவும், இங்கிலாந்து, பிரான்ஸ் தலைமையிலான நாடுகள் உலகத்தில் ஜனநாயகம் மற்றும் தேசிய சுய நிர்ணய உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் போரிட்டன.

## போருக்கான காரணங்கள்:

### 1. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கைகள்:

முதலாம் உலகப்போருக்கு முன்பாக ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் ரகசிய உடன்படிக்கைகள் செய்து கொண்டன. 1871-ம் வருடம் முடிவடைந்த பிராங்கோ பிரஷ்யப் போருக்குப் பின்பு இவ்வித ரகசிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் முறை வளர்ச்சியடைந்தது. இதுவே முதல் உலகப்போருக்கான முக்கிய காரணம் ஆகும். ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து தங்களுக்குள் முக்கூட்டு உடன்படிக்கையை 1882-ல் ஏற்படுத்திக் கொண்டன. இந்த உடன்படிக்கைக்கு எதிராக, பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் சேர்ந்து 'மூவர் நேச ஒப்பந்தம்' ஒன்றை 1907-ல் ஏற்படுத்திக்கொண்டன. இவ்விதம் ஐரோப்பாவானது இரண்டு

இராணுவப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இவைகளுக்கிடையே ஏற்பட்ட விரோதமே முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணமாக விளங்கியது.

## 2. ஏகாதிபத்திய உணர்வு:

ஏகாதிபத்திய உணர்வு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அளவுக்கு அதிகமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் தன்னைத்தானே செழிப்புடையதாக்கவும், வலிமைமிக்கதாக்கவும், தனது ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் பரப்பவும் முயற்சித்தது. இதனாலேயே உலகப்போர் மூண்டது என்று கூறலாம். ''ஜெர்மானியர்கள் உலகை ஆளப்பிறந்தவர்கள்'' என்றும், ''ஜெர்மானியப் பண்பாடு உலகமெங்கும் பரவ நாகரிகக் காப்புப் போராட்டம் (Kultur Campf) நடத்துவதே தங்கள் கடமை' என்றும் ஜெர்மனியர்கள் கூறினார்கள். அதே போன்று பிற்போக்கான நாடுகளில் நாகரிகத்தைப் பரப்புவது வெள்ளையர் பொறுப்பு'' என்று ஐரோப்பிய நாடுகள் கருதின. இப்படி ஏகாதிபத்திய ஆதிக்கத்தைப் பரப்ப ஒவ்வொரு நாடும் நினைத்தது. இதில் போட்டி ஏற்பட்டு இறுதியில் அது போராக முடிந்தது.

## 3. ஐரோப்பிய நாடகளிடையே காணப்பட்ட படைபெருக்கம்:

1870-ம் ஆண்டிற்குப் பிறகு, போர்க்கருவிகளைச் சேகரிப்பதிலும், படை பலத்தைப் பெருக்குவதிலும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே கடும் போட்டி ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் செய்து கொண்ட ரகசிய உடன்படிக்கைகள் இப்போட்டியை மேலும் அதிகரித்தன. ஒவ்வொரு நாடும் தனது வரவு-செலவுத் திட்டத்தில் இராணுவச் செலவிற்கு அதிக அளவு பணம் ஒதுக்கியது. கெய்சர் வில்லியம் பல போர்க் கப்பல்களைத் தயார் செய்தார். கப்பற்படையை வலிமையாக்கினார். இவரது நோக்கத்தைப் புரிந்து கொண்ட இங்கிலாந்தின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் பெருமளவில் ராணுவ உபயோகத்திற்காக ரஷ்யாவுடன் சேர்ந்து பல புதிய ரயில் பாதைகளை அமைத்தார். துப்பாக்கிகளைத் தயாரிப்பதிலும் எரி பொருட்களைச் சேமித்து வைப்பதிலும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே போட்டி ஏற்பட்டது. இவ்வித ஆயுத உற்பத்திப் போட்டி முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணமானது.

## 4. குறுகிய தேசிய உணர்வு:

ஒரு நாட்டின் மீதுள்ள பற்றானது பிறநாட்டின் மீது பகைமையை ஏற்படுத்தியது. ஜெர்மனி மீதுள்ள அன்பானது ஜெர்மானிய மக்கள் பிரான்சை வெறுக்கவும், இதே போன்று பிரான்ஸ் ஜெர்மனியை வெறுக்கவும் காரணமா...

...நாடுகளின் மீது அளவு கடந்தபக்தி வைத்தார்கள். 'உலகத்தின் ...மாக விளங்குவதே இங்கிலாந்துதான்' என்று ஆங்கிலேயர்களும் ...த்திலேயே புனிதமான நாடு பிரான்ஸ்தான்' என்று பிரெஞ்சு ...களும், ''கடவுளின் உலகப்படத்தின்மையமே ஜெர்மனிதான்'' என்று ...ர்மனியர்களும் கருத்துக் கொண்டிருந்தார்கள் இது ...களுக்கிடையே பகைமையை வளர்த்தது

## ...இரண்டாம் கெய்சர் வில்லியத்தின் ஏகாதிபத்திய வெறி:

ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் ஆணவம் மிக்க ...திபத்திய வெறி கொண்டவர். ஜெர்மனியை உலக வல்லரசாக்கத் ...ம் தீட்டினார். ''ஜெர்மானிய இனமே உலகை ஆளப்பிறந்தது'' ...றும் ''உலகை ஆள்வது அல்லது வீழ்வது'' என்றும் கொக்கரித்தார். ...கிலேயரின் வலிமையைத் தப்புகணக்கிட்டு இங்கிலாந்தை வீழ்த்தக் ...வு கண்டார். உலக விவகாரங்களில் அதிகமாகத் தலையிட்டு புதிய ...ர்மனியின் புகழைப் பரப்ப நினைத்தார். இதற்காக ஜெர்மனியின் ...றுவ வலிமையை அதிகப் படுத்தினார். இவரது ஏகாதிபத்திய வெறியே ...தல் உலகப்போருக்கு வழி நடத்தியது.

## 6. மக்களின் எண்ணத்தை மாற்றிய செய்தித்தாள்கள்:

செய்தித்தாள்கள் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, பிற நாட்டின் ...து வெறுப்பை வளர்த்தன. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ...த்திரிக்கைகள் உலகச் செய்திகளைத் திரித்துக் கூறி மக்களைத் தவறாக ...ழி நடத்தின. சுதந்திரமாகச் செயல்பட்ட பிரெஞ்சுப் பத்திரிக்கைகளோ, ஜெர்மனியின் மீதான வெறுப்பை அள்ளித் தெளித்தன. காலையில் வெளிவந்த செய்தித்தாள்கள் வெளியிட்ட செய்திகளை மையமாக வைத்துதான் உலகமே சுழல்வது போன்ற நிலை ஏற்பட்டது. திரித்துக் கூறப்பட்ட செய்திகள், அடிப்படையற்ற வதந்திகள், முழுப்பொய்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டு மக்களிடையே பகைமை உணர்ச்சியை வளர்த்தன செய்தித்தாள்கள்.

## 7. அமைதியை ஏற்படுத்த சமாதான ஸ்தாபனம் இல்லாமை:

போரிடுவதற்காக ஐரோப்பாவில் பல அமைப்புகள் இருந்தன. ஆனால் பகைமையைக் கட்டுப்படுத்தவும், நாடுகளுக்கிடையே ஏற்படும் சிறுசிறு பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கவும் மனநிறைவு ஏற்படுத்தும் நிலையில் ஒரு அகில உலகச் சமாதான ஸ்தாபனம் இல்லாதது முதல் ... 1898-ல் ரஷ்ய மன்னர் சமாதானத்தை ...களைப் படைக்குறைப்பு ...வந்து கொள்ள

அழைத்தார். அந்த மாநாடு தோல்வியடைந்தது. 1907-ல் மாநாடு மீண்டும் கூடினாலும் பயனேதும் ஏற்படவில்லை. ஒரு அகில உலக சமாதான ஸ்தாபனத்தை ஏற்படுத்தும் மனநிலை ஐரோப்பிய அரசுகளிடம் காணப்படவில்லை. இது போருக்குக் காரணமானது.



இரண்டாம் கெய்சர் வில்லியம்

## 8. அல்சேஸ், லொரைன் பிரச்சனை:

1871-ல் முடிவடைந்த பிராங்கோ-பிரஷ்யப் போரின் இறுதியில் ஏற்பட்ட பிராங்பர்ட் ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ் நாட்டின் வளமிக்க அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனி பெற்றது. இப்பகுதிகளை மீண்டும் பெற பிரான்ஸ் தக்க தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. காரணம் லொரைன் பகுதி அதிகமாக இரும்புத் தாது வளங்களைக் கொண்டது. 1871-க்குப் பிறகு ஜெர்மனியின் தொழில் வளர்ச்சிக்கு லொரைனின் இரும்புச் சுரங்கங்களே காரணம் என பிரான்ஸ் நம்பியது. எனவே அல்சேஸ்-லொரைனை மீண்டும் பெற பிரான்ஸ் துடித்தது. இப்பிரச்சனை ஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே பகைமையை வளர்த்தது. இதுவே உலகப் போருக்கு காரணமானது.

## 9. குடியேற்றங்களை அமைப்பதில் போட்டி:

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவவும் கடல் கடந்த வாணிகத்திலும், குடியேற்றங்களை நிறுவுவதிலும், உயர்ந்த இடத்தைப் பெறவும், ஜெர்மனிக்கும் பிரெஞ்சு-பிரிட்டிஷ் கூட்டுக்கு

யிடையே ஏற்பட்ட போட்டியே போராக வடிவெடுத்தது. குடியேற்ற நாடுகள் தங்கள் தாய்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப் பொருட்களை அனுப்புவதோடு மட்டுமல்லாமல், தாய் நாட்டின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைத் தளங்களாகவும் மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்கும் இடங்களாகவும் இருந்ததால் குடியேற்ற நாடுகளைப் பெறுவதற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டன.

1871-ல் முடிவடைந்த ஜெர்மானிய ஐக்கியத்திற்குப் பிறகு ஜெர்மனி தொழில் உற்பத்தியில் அதிக வளர்ச்சியடைந்தது. நாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவும். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதற்கும் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் பொருளாதாரச் சிக்கல்களைக் குறைப்பதற்கும் தனக்கு குடியேற்ற நாடுகள் அவசியம் தேவை என்பதை ஜெர்மனி உணர்ந்தது. அதனால் இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன், புதிய உலகு ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில், குடியேற்றங்களை நிறுவுவதில் ஜெர்மனி போட்டியிட்டது. ஆனால் இங்கிலாந்து தனது குடியேற்றங்களை விட்டுக் கொடுக்கவோ, புதிய குடியேற்றங்களை ஜெர்மனி பெற்றுக் கொள்ளவோ விரும்பவில்லை. இந்தக் குடியேற்றப் போட்டியே முதல் உலகப்போருக்குக் காரணமாக அமைந்தது.

## 10. மொராக்கோ பிரச்சனை: (அகாடிர் பிரச்சனை)

மொராக்கோ வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஓர் சுதந்திரமான நாடு. அதன் அருகில் இருந்த அல்ஜீரியா பிரெஞ்சுப்பகுதி ஆகும். எனவே மொராக்கோ உள்நாட்டு விவகாரத்தில் பிரான்ஸ் அடிக்கடி தலையிட்டு வந்தது. இதைக்கண்ட கெய்சர் வில்லியம், ''மொராக்கோ ஓர் சுதந்திர நாடென்றும், மற்ற நாடுகளைப் போலவே ஜெர்மனிக்கும் மொராக்கோவில் சலுகைகள் பெற உரிமை உண்டு'' என்றும் வாதாடினார்.

மொராக்கோவிலிருந்த பிரெஞ்சு பொருளாதார நலன்களைப் பேணும் பொருட்டு மொராக்கோ சுல்தானிடம் பிரான்ஸ் அதிக சலுகைகளைக் கேட்டது. இதற்கு இங்கிலாந்து ஆதரவு அளித்தது. ஆனால் ஜெர்மனி எதிர்ப்புத் தெரிவித்து மொராக்கோவின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போவதாகக் கூறியது. பிரச்சனையைத் தீர்க்க 1906-ல் ஸ்பெயினிலுள்ள அல்ஜிசரஸில் சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப் பட்டது. மாநாட்டு முடிவின்படி, மொராக்கோ ஓர் சுதந்திர நாடு என்று மீண்டும் அங்கீகரிக்கப்பட்டது. எல்லா வல்லரசு நாடுகளிலிருந்தும் வியாபாரிகள் முதலீட்டாளர்கள் இங்கு வந்துபோகலாம். ஆனால் மொராக்கோவின் துறைமுகப் பட்டிணங்கள் பிரெஞ்சு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன.

1911-ல் மொராக்கோவில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. அங்கு ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தை அடக்க பிரான்ஸ் தனது கப்பற்படையை அனுப்பியது. இதனை வன்மையாகக் கண்டித்த ஜெர்மனி, தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டும் மொராக்கோவின் ஜெர்மானிய நலன்களைப் பாதுகாக்கவும் 'பேன்தர்' என்ற யுத்தக்கப்பலை மொராக்கோவிலுள்ள அகாடிர் துறைமுகத்திற்கு அனுப்பியது. இதனால் பதட்ட நிலை ஏற்பட்டது. ஐரோப்பாவை போர் அபாயம் சூழ்ந்தது. இந்தப் பிரச்சனையில் பிரான்சுக்கு ஆதரவாகச் செயல்பட்டது இங்கிலாந்து. எனவே போரைத் தவிர்ப்பதில் நாட்டம் கொண்டது ஜெர்மனி. பிரெஞ்சுக்காரர்களின் கொள்கைகளை தான் எதிர்க்கவில்லை என்று ஜெர்மனி கூறியது. பிரான்சும், ஜெர்மானிய வியாபாரிகளை முன்பு போல் மீண்டும் அனுமதிக்க ஒத்துக் கொண்டது.

இந்த அகாடிர் பதட்டநிலை மூன்று முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. அவை பின்வருமாறு:

a) இந்த நிகழ்ச்சி ஜெர்மானியர்கட்கு எதிரான உணர்வை பிரான்ஸில் தோற்றுவித்தது.

b) பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே உறவு வலுவடைந்தது.

c) மொராக்கோவில் தனக்குள்ள ஆர்வத்தை இங்கிலாந்து பங்கப்படுத்திவிட்டதாகக் கருதி அதன் மீது பகைமை கொண்டது ஜெர்மனி. இவை உலகப்போரை நோக்கி இரண்டு நாடுகளையும் நேராக வழிநடத்திச் சென்றது.

## 11. பால்கன் பகுதியில் ஏகாதிபத்தியப் போட்டி:

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியான பால்கன் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவ ஸ்லாவிய மக்களுக்கும், டியூட்டானிக் இன மக்களுக்குமிடையில் ஏற்பட்ட போட்டியே உலகப் போராக மாறியது எனலாம். 1878-ம் வருட பெர்லின் உடன்படிக்கைப்படி பால்கன் பகுதியிலிருந்த போஸ்னியா, ஹெர்சிகோவினா ஆகிய நாடுகளின் பாதுகாப்பாளராக மட்டுமே இருக்குமாறு ஆஸ்திரியா கேட்டுக்கொள்ளப் பட்டது. ஆனால் 1908-ல் ஜெர்மனியின் ஆதரவுடன் அந்த இரண்டு நாடுகளையும் தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டது ஆஸ்திரியா.

இந்த ஆக்கிரமிப்பு பால்கன் பகுதியிலிருந்த செர்பியாவுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில் போஸ்னியா ஹெர்சிஹோவினா விலுள்ள மக்கள் செர்பியாவிலுள்ள ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இரண்டு பகுதிகளை இணைத்துக்

கொள்ள எண்ணம் கொண்டிருந்தது செர்பியா. எனவேதான் ஆஸ்திரியாவின் வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தது. பால்கன் பகுதியில் தனது செல்வாக்கை நிலைநாட்ட முயற்சி செய்த ரஷ்யா செர்பியாவுக்கு ஆதரவளித்தது. ஆனால் அண்மையில் நடந்த ரஷ்ய-ஜப்பானியப் போரில் ரஷ்யா தோல்வியடைந்து பலவீனமடைந்ததால் செர்பியாவுக்கு படையுதவி செய்யும் நிலையிலில்லை ரஷ்யா. ரஷ்யாவின் ஆதரவில்லாமல் ஆஸ்திரியாவை ஜெயிக்க முடியாது என்று உணர்ந்த செர்பியர் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாததால் நெருக்கடி தணிந்தது. ஆனால் செர்பியாவும் ரஷ்யாவும், ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மீது வெறுப்புற்று பழி தீர்த்துக் கொள்ள வழி தேடியது. இத்தகைய பழிவாங்கும் உணர்வும், பதட்ட நிலையும் முதல் உலகப்போர் ஏற்படுவதற்கு ஏற்றதாக இருந்தது.

மேற்கண்ட பதினொரு காரணங்களை ஆராயும்போது 'முதல் உலகப்போர் வல்லரசுகளின் சமநிலைப்போர்' என்று நாம் கருத்தில் கொள்ளலாம்.

## உடனடிக் காரணம்:

### 12. சராஜிவோ படுகொலை:

*1908*-ல் ஆஸ்திரியா போஸ்னியாவை இணைத்துக் கொண்டதிலிருந்து, அங்கிருந்த ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஆஸ்திரியாவின் ஆட்சியை அகற்றவும், சகோதர நாடான செர்பியாவுடன் ஒன்றுபடவும் கிளர்ந்தெழுந்தனர். இந்த தேசிய உணர்வினை அடக்க ஆஸ்திரியா-ஹங்கேரி எதிர் நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

இச்சூழ்நிலையில்தான் ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசரும், பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பின் மருமகனுமான ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்டு தனது மனைவியுடன் போஸ்னியாவிலுள்ள சராஜிவோ என்ற நகருக்கு **1914** ஜூன் **28**-ம் தேதி விஜயம் செய்தார். அப்போது கவ்ரில்லோ பிரின்ஸிப் (Cavrilo Princip) என்ற **24** வயது செர்பிய இளைஞனால் ஆர்ச்டியூக் பெர்டினாண்டும் அவர் மனைவியும் காலை 10:15 மணி அளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைதான் ஐரோப்பாவை உடனடியாகப் போரில் தள்ளிய நிகழ்ச்சியாகும்.

இந்தப் படுகொலையைப் பயன்படுத்தி செர்பியாவை நசுக்க நினைத்தார். ஆஸ்திரியாவின் வெளியுறவு அமைச்சர் கவுண்ட்லியோ போல்ட்பெர்ச்சோல்ட் (COUNT EOPOLD BERCHOLD). போஸ்னியாவில் 'கறுப்புக் கை' (Black Hand) என்ற ரகசிய பயங்கரவாத இயக்கம் ஒன்று செயல்பட்டு வந்தது. இதில் செர்பிய தீவிர தேசியவாதிகள் உறுப்பினர்களாக இருந்தார்கள். இந்த இயக்கத்தினர் செர்பியா விடமிருந்து பயிற்சியும், படைக்கருவிகளையும் ரகசியமாகப்